ஒரு குழந்தை பிறந்ததில் இருந்தே, நாம் ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் வெவ்வேறான மதிப்பீடுகளோடும் பாலின வரையறைகளோடும்தான் வளர்க்கிறோம். சிறுவயதில் இருந்தே நாம் ஆண்களை அதிகாரம் செலுத்துபவர்களாகவும் பெண்களை அடங்கிப் போகிறவர்களாகவும் வளர்க்கிறோம். இப்படியான பாலினப் பாகுபாடுகள், பிற்காலத்தில் வளரிளம் பருவத்தில் ஆண்கள், பெண்கள் இருவர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்த நிலையில், அவர்களிடையே ஓர் உரையாடலை தொடங்குவதன் மூலமாகத்தான் ஆரோக்கியமான உறவே வாழ்வின் அடையாளம் என்பதை உணர்த்த முடியும். இந்தக் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே ஆண், பெண் இருவருக்கும் இணைந்து நடத்தும்படியாக இந்தப் பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

# வளரிளம்பருவ ஆண், பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு



இளந்தென்றல்

unicef
for every child

வாய்மையே வெல்லும்

# வளரிளம் பருவ
# ஆண், பெண்களுக்கான திறன்
# வளர்ப்புப் பயிற்சிக் கையேடு

## குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறையை எதிர்கொள்ள
## வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின்
தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

unicef for every child

வாய்மையே வெல்லும்

வளரிளம்பருவ ஆண், பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு

குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறையை எதிர்கொள்ள வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு

Capacity building module for adolescent girls and boys
On Adolescent Empowerment to Address Child Marriage and Violence


முதல் பதிப்பு: மார்ச், 2020

First Edition: March, 2020

வெளியீடு :
மாநில கருவூல மையம், சென்னை - 600 020.
State Resource Centre, Chennai - 600 020.
Email: sbtamilnadusrc@gmail.com
044-24914147

வடிவமைப்பு:
THY Designers & Computers
Triplicane, Chennai - 600 005

044-42113807

நன்றி:

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக யுனிசெஃப் (UNICEF) அமைப்பும் பிரேக் த்ரு (Break Through, New Delhi ) நிறுவனமும் இணைந்து ஆங்கிலத்தில் உருவாக்கிய கருத்துப் புத்தகத்தின் தமிழ் வடிவம்.

தமிழ் வடிவம்: மாநில கருவூல மையம்

தொடர்புக்கு: sbtamilnadusrc@gmail.com

# அறிமுகம்

ஒரு குழந்தை பிறந்ததில் இருந்தே, நாம் ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் வெவ்வேறான மதிப்பீடுகளோடும் பாலின வரையறைகளோடும்தான் வளர்க்கிறோம். சிறுவயதில் இருந்தே நாம் ஆண்களை அதிகாரம் செலுத்துபவர்களாகவும் பெண்களை அடங்கிப் போகிறவர்களாகவும் வளர்க்கிறோம். இப்படியான பாலினப் பாகுபாடுகள், பிற்காலத்தில் வளரிளம் பருவத்தில் ஆண்கள், பெண்கள் இருவர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. திருமணம், கர்ப்பம், பாலியல் உறவுகள் போன்ற விஷயங்களில் முடிவெடுக்கும் திறனற்றவர்களாகவே பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள். இதைத்தான் சமூகம், கலாச்சாரம் என்ற பெயரில் சமூக விதியாக ஏற்படுத்தி உள்ளது. இதேபோல் திருமணம், பாலியல் உணர்வுகள், குடும்பம் இவை தொடர்பாக பெண்ணுடன் இணைந்து முடிவெடுக்க வேண்டும் என்ற புரிதல் இல்லாமல் ஆண்களும் தங்களது கருத்துக்களையே திணிக்கப் பார்க்கிறார்கள். சமூகப் பாலினம், பாலினம் சார்ந்த வன்முறை, திருமணம், குடும்பப் பொறுப்புகள் போன்றவை பற்றி ஆண்களோடும் பெண்களோடும் தனித்தனியே பேசுவதைத்தவிர ஒன்றாக பேசுவது அவர்களுக்குள் ஓர் ஆரோக்கியமான உரையாடலை நடத்த உதவும் என்பது பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது. இங்கு தனிப்பட்ட ஆணும் பெண்ணும் அவர்கள் சார்ந்த சமூகத்தின் விதிமுறைகள் அடிப்படையில் இயங்கும்படி வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், அவர்களிடையே ஓர் உரையாடலை தொடங்குவதன் மூலமாகத்தான் அன்பு, மரியாதை, பொறுப்புணர்ச்சி அனைத்தும் இணைந்ததுதான் ஆரோக்கியமான உறவின், வாழ்வின் அடையாளம் என்பதை அவர்களுக்கு உணர்த்த முடியும். இந்தக் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே இந்தப் பயிற்சிக் கையேடு ஆண், பெண் இருவருக்கும் இணைந்து நடத்தும்படியாக உருவாக்கப்பட்டுள்ளது.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக **யுனிசெஃப், பிரேக் த்ரு** ஆகிய அமைப்புகள் ஆங்கிலத்தில் உருவாக்கிய இந்தக் கருத்துப் புத்தகத்துக்கு **மாநில கருவூல மையம்** தமிழ் வடிவம் கொடுத்துள்ளது. இந்த முயற்சிக்குத் துணை நிற்கும் **தமிழக அரசின் சமூக நலத் துறை, யுனிசெஃப் அமைப்பு** ஆகியவை தரும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

நமது நோக்கம் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருதல். அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இந்த முயற்சியில் அனைவரும் ஒன்றிணைவோம்!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | பாலினத்திற்கிடையே உரையாடல்: ஏன் வளரிளம் பருவத்தில் உள்ள ஆண்களுடனும் பெண்களுடனும் இணைந்து வேலை செய்ய வேண்டும்? | 2 |
| 2 | வளரிளம் பருவ ஆண் பெண்களுக்கான பயிற்சிக் கையேடு ஏன் உருவாக்கப்பட்டுள்ளது? | 3 |
| 3 | வளரிளம் பருவ ஆண்கள், பெண்களுக்குப் பயிற்சிக் கையேட்டினை உருவாக்கும் பொழுது  எந்தக் காரணிகள் கருத்தில் கொள்ளப்பட்டன? | 5 |
| 4 | இந்தப் பயிற்சிக் கையேட்டை உருவாக்க வளரிளம் பருவ ஆண்கள், பெண்களுக்கு, முக்கியமான எந்தவித திறன் மேம்பாடுகள் தேவை எனக் கண்டறியப்பட்டன? | 7 |
| 5 | வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் கால அளவும், பயிற்சி அளிக்கும் முறையும் என்ன? | 8 |
| 6 | வளரிளம் பருவப் பெண்கள் ஆண்களுக்கான பயிற்சி அமர்வுகள் எவ்வாறு நடத்தப்பட முடியும். | 8 |

| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | **கட்டகம் - 1 சமூகப் பாலினம் மற்றும் பாலினப் பாகுபாடுகள் பற்றி புரிந்துகொள்ளுதல்** | 10 |
| | அமர்வு - 1 ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகள் | 11 |
| | அமர்வு - 2 நம்முடைய வாழ்வில் பாலினம் மற்றும் சமூப்பாலினத்தின் ஏற்படும் தாக்கத்தைக் கண்டறிதல் | 15 |
| | அமர்வு - 3 வன்முறை மற்றும் உரிமைகள் | 20 |
| | அமர்வு - 4 உறவுகளில், சமூகப் பாலினம் மற்றும் அதிகாரத்திற்கு இடையே உள்ள தொடர்பு | 24 |
| 2 | **கட்டகம் - 2 திருமணம் மற்றும் உறவுகளின் அர்த்தம் பற்றி புரிந்துகொள்ளுதல்** | 28 |
| | அமர்வு - 5 குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல் | 29 |
| | அமர்வு - 6 ஆரோக்கியமான மண வாழ்வில் வாழ்க்கைத் துணைகளின் பங்கினையும், பொறுப்புகளையும் தெரிந்து கொள்ளுதல் | 46 |
| 3 | **கட்டகம் - 3 பாலினம் சார்ந்த வன்முறையை அகற்றுதல்** | 54 |
| | அமர்வு - 7 பொது இடத்தில் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களுக்கு முடிவு கட்டுதல் | 55 |
| | அமர்வு - 8 பாதுகாப்பான இடங்கள் மற்றும் பாதுகாப்பற்ற இடங்கள் | 63 |
| 4 | **கட்டகம் - 4 பெண் குழந்தையை மதித்தல்** | 67 |
| | அமர்வு - 9 சமுதாயத்தின் உறுப்பினர்களாக பெண் மற்றும் வளரிளம் பருவப் பெண்களின் பங்களிப்பு | 68 |
| | அமர்வு 10 பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருதல் மற்றும் குழந்தைத் திருமணங்களின் மீது ஏற்படும் தாக்கம் | 74 |
| 5 | **இணைப்புகள்** | 81 |
| | இணைப்பு - 1 | 82 |
| | இணைப்பு - 2 | 84 |
| | இணைப்பு - 3 | 86 |

# குழந்தைத் திருமணம் மற்றும் பாலினம் சார்ந்த வன்முறையை நீக்க வளரிளம் பருவத்தினருடன் இணைந்து வேலை செய்தல்



## பாலினத்திற்கிடையே உரையாடல் : ஏன் வளரிளம் பருவத்தில் உள்ள ஆண்களுடனும் பெண்களுடனும் இணைந்து வேலை செய்ய வேண்டும்?

உலகெங்கும் பெறப்பட்ட அனுபவ சான்றுகளின் அடிப்படையில், ஆண், பெண் இரு தரப்பினரையும் ஒன்றாக சேர்த்து அணுகும் முறையினால், அவர்களுடைய பாலின வரையறைகள் பற்றிய நம்பிக்கைகளிலும் நடவடிக்கைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. குறிப்பாக ஆரம்ப நிலையிலேயே இந்தத் தலையீட்டை வேண்டுமென்றே ஏற்படுத்தினால், இந்த மாற்றம் ஏற்படுகின்றது.

ஆண், பெண் இருவரையும் ஒரே இடத்தில் இணைத்து நடத்தப்படும் மாதிரி நடிப்பு, செயல்பாடுகளில் இணைந்து ஈடுபடுவது, நேரடியாகப் பேசிக்கொள்வது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் இரு பாலினத்தவரும், பாலின வரையறைகளால் வரக்கூடிய சவால்கள் பற்றியும், பாகுபாடுகள் பற்றியும் விவாதிக்க வாய்ப்புக் கிடைக்கிறது.

இந்த அணுகுமுறையை மேற்கொள்ளும்பொழுது, எல்லா நிகழ்ச்சி களிலும் செயல்பாடுகளிலும் ஆண், பெண் இரு பாலினத்தவைரையும் சேர்த்து வைத்து நடத்தவேண்டும் என்பதில்லை. முக்கியமான கருத்துக்களைப் பகிர்ந்துக்கொள்வதற்கு மட்டும் இரு பாலினத்தவரும் ஒன்றாக இருப்பது மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக நிகழ்ச்சி ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. தன்சுத்தம், சுகாதாரம் போன்ற செய்திகளைக் கூறும்பொழுது ஆண், பெண்களைத் தனித்தனியாக வைத்து பயிற்சிகள் நடத்தலாம். இரு பாலினத்தவரும் வெளிப்படையாகப் பேசுவதற்கும், சிக்கலான கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடித் தெளிவு பெறுவதற்கும் இது ஏதுவாக இருக்கும்.

ஆண், பெண் இரு பாலினத்தவரையும் இணைத்துவைத்து நடத்தப்படும் பயிற்சித் திட்டங்கள் வெற்றிகரமாக அமைய வேண்டுமானால், பயிற்றுநர் பாதுகாப்பான சூழல், மோதல்களுக்கு இடமளிக்காத வகையில், நேர்மறையான விவாதங்களுக்கு இடமளித்துப் பயிற்சியை நடத்த உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தற்பொழுதுள்ள விதிமுறைகளை பற்றி ஆண்கள் எதிரே பெண்கள் கேள்வி எழுப்பும்பொழுது, அது சில விளைவுகளை ஏற்படுத்தலாம். சில தருணங்களில், அல்லது சில கடினமான தலைப்புகள் பற்றி ஒரே பாலினத்தவர் உள்ள குழுக்களில் விவாதிப்பது சிறந்த பலனைத் தரலாம். பின்னர் இருவரும் கலந்து கொள்ளும் அமர்வில் இவை பற்றி பேசலாம். சூழலையும், இடையீட்டு நடவடிக்கையையும் (intervention) பொறுத்து எப்பொழுது ஆண், பெண் இருவரோடும் சேர்ந்து நிகழ்ச்சியைத் திட்டமிடவேண்டும், எப்பொழுது தனிக்குழுவாக திட்டமிடவேண்டும் என்பது பற்றிய செயல் உத்தியோடு நிகழ்ச்சிகள் திட்டமிடப்படவேண்டும்.

## வளரிளம் பருவ ஆண்கள் பெண்களுக்கானப் பயிற்சிக் கையேடு ஏன் உருவாக்கப்பட்டுள்ளது?

குறிப்பிட்ட காலத்திற்கு, வளரிளம் பருவ ஆண்கள் குழுக்களுடனும் பெண்கள் குழுக்களுடனும் தனித்தனியாக வேலை செய்தபின், அவர்களை தன்னுரிமை மேம்பாடு அடையச் செய்ய இந்த பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்றாக வேலை செய்யும்போது, அவர்களுடைய உரிமையை நிலைப்படுத்த சிறப்பு கவனம் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இதற்கு அவர்களுடைய காப்பாளர்களிடம் உங்கள் நிகழ்ச்சியின் நோக்கம், காரணத்தைப் பற்றி விளக்கிக் கூறி அனுமதி பெற வேண்டியது அவசியம்.

சமுதாயத்தின் ஒரு அங்கமாக விளங்கும் வளரிளம் பருவ ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில குறிப்பிட்ட விதிமுறைகளை, நடத்தைகளை பின்பற்றக் கூடிய பழக்கம் இருக்கக்கூடும்.

பாலினப் பாகுபாடு, குழந்தைத் திருமணம், வளரிளம் பருவத்தில் கர்ப்பம், பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை ஆகியவற்றை வளரிளம் பருவப் பெண்கள், இளவயதிலேயே எதிர்கொள்கின்றனர். இளம் பெண் குழந்தைகளாய், இள வயதில் திருமணம் செய்துகொண்டவர்களாய், இளம் தாய்மார்களாய் குறிப்பிட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், குறிப்பிட்ட முறையில் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இந்தப் பயிற்சிக் கையேடானது 13 வயது முதல் 18 வயது வரை உள்ள, ஆபத்தை எதிர்கொள்ளும் வளரிளம் பருவப்பெண் குழந்தைகள், மூன்று வழிகளில் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

- முதலாவதாக, கல்வி மேம்பாட்டிற்கான வசதிகள் கிடைக்காமல் போவது, வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவது போன்ற அடிப்படை உரிமைகள் இல்லாதது குறித்தும், குழந்தைத் திருமணத்தில் தள்ளப்படுதல், வளரிளம் பருவ கர்ப்பம், குடும்ப வன்முறை போன்ற ஆபத்துகள் இருப்பது பற்றியும் அவர்கள் புரிந்துகொள்ளவும், ஒப்புக் கொள்ளவும் உதவும்.

- இரண்டாவதாக, வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தல், வரதட்சணை பிரச்சினைகளைக் கையாளுதல், மணப்பெண்ணாய் எதிர்கொள்ளும் எதிர்பார்ப்புகளை சமாளித்தல், குடும்ப வன்முறையை எதிர்த்தல், குழந்தை பெற்றுக்கொள்ள உண்டாக்கப்படும் அழுத்தம் – இவையெல்லாம் பற்றி முடிவு எடுக்கவும், உடன்பாட்டுக்காக பேச்சுவார்த்தை நடத்தும் திறனை வளர்க்கவும் இந்த பயிற்சிக் கையேடு உதவுகின்றது.

- மூன்றாவதாக, அவர்களுக்குள் நன்மதிப்பு, மரியாதை, நம்பிக்கை ஆகியவற்றை ஊக்குவிக்கும்படியாக உள்ள கலந்துரையாடல்களும், சார்புநிலையற்ற அமர்வுகளும், புதியவற்றைக் கண்டறிவதற்கான ஒரே தளமும் அமைய உதவிகரமாக இருக்கும். வளரிளம் பருவப் பெண்களின் மேம்படுத்தப்பட்ட திறன்கள், அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க உதவுகின்றது. இது பாதுகாப்பான, ஆதரவான தளத்தை உருவாக்க வழிகோலுகின்றது.

வளரிளம் பருவ ஆண்கள் சில சமூக விதிமுறைகளைப் பின்பற்ற உட்படுத்தப்பட்டுள்ளனர். இது அவர்கள் வாழ்வினையும் வளரிளம் பருவப் பெண்களின் வாழ்வினையும் பாதிக்கின்றது. இந்த விதிமுறைகள், பாலியல் வன்முறை, குழந்தைத் திருமணம், வளரிளம் பருவ கர்ப்பம், குடும்ப வன்முறை, பாலினப் பாகுபாடு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது. இதனால் வளரிளம் பருவ ஆண்களும், பெண்களைப் போலவே எதிர்மறையாக பாதிக்கப்படுகின்றனர். ஆனால், அவை அனைத்தும் இந்த சமூகத்தினால் பரப்பப்பட்ட 'ஆண்மை' குறித்த கருத்துக்கள்தான் என்பது பிற விதிமுறைகள் என்ற போர்வையினால் கவனிக்கப்படாமலும், மறைக்கப்பட்டும் உள்ளன.

வேலைக்காக வேறிடத்துக்கு புலம்பெயரும் கட்டாயத்துக்கு ஆளான இளம் மகன்கள், இள வயதிலேயே திருமணம் செய்து கொண்ட கணவர்கள், இளவயது தந்தைகள் என்ற நிலையில் உள்ள தங்களின் வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்வதற்கு தயார்படுத்தப்படவில்லை என்பதை உணர்ந்து கொண்டாலும் குறிப்பிட்ட சில விதிமுறைகளுக்கும், நடத்தைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைக்கு அவர்கள் ஆளாகின்றனர்.

***14 – 20 வயதுகளில் உள்ள வளரிளம் பருவ ஆண்கள், ஐந்து அம்சங்களில் தங்கள் திறன்களை மேம்படுத்த இந்த பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.***

- உடற்கூறு பாலினம் மற்றும் சமூகப் பாலினம் (ஆண்-பெண் பாலின வரையறைகளுக்குள் உள்ள வேறுபாடு) பற்றி புரிந்துகொள்ளவும்,
- பாலினப் பாகுபாட்டிற்கு எதிராகப் போராட, உடற்கூறு பாலினம் மற்றும் சமூகப்பாலினம் பற்றி ஆரோக்கியமான, சரியான கண்ணோட்டத்தை கட்டமைத்துக் கொள்ளவும்,
- பெண்களுக்கெதிரான பல்வேறு வன்முறைகள், அவற்றின் தாக்கம், மற்றும் மீறப்பட்ட உரிமைகளைப் பற்றி இனங்கண்டுகொள்ளவும்,
- குழந்தைத் திருமணம் பற்றி விழிப்புணர்ச்சியை உருவாக்கி, குழந்தைத் திருமணம் மூலம் மீறப்படும் உரிமைகள், அதன் விளைவுகள் பற்றி தெரிந்துகொள்ளவும்,

- திருமண பந்தத்தில் ஆண், பெண் இருவருக்கும் உள்ள சமமான பங்கு மற்றும், பொறுப்புகள் பற்றி மறுவரையறை செய்யவும்,

- வன்முறையை எந்த வடிவில் செயல்படுத்தினாலும் – பாலியல் ரீதியில், உடலளவில், மனதளவில் செய்பவராகவோ, வேடிக்கை பார்ப்பவராகவோ எப்படி இருந்தாலும், அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பது பற்றி உணரவும்,

- சமூகத்தின் மிக முக்கியமான உறுப்பினர்களாகப் பெண்களை மதிக்கவும், கருவிலேயே பாகுபாட்டுடன் பாலினத்தை தெரிவு செய்வதற்கு எதிராக போராடவும், **இந்த பயிற்சிக் கையேடு உதவுகின்றது.**

இந்தப் பயிற்சிக் கையேடானது, வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்கான கையேடுகளின் தொகுதியில் ஒரு பகுதியாகும். வாழ்க்கைத்திறன் பயிற்சிகள், வளரிளம் பருவ ஆண்கள்/பெண்களுக்கான பயிற்சிக் கையேடுகள், தன்னார்வத் தொண்டு நிறுவன பயிற்சியாளர்கள் மற்றும் முன்னணிக் களப்பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், மேலும் மதத் தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், பெற்றோர்கள் போன்ற பங்காளர்கள் களத்தில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான உத்திகளைக் கூறும் கையேடுகள் உள்ளிட்ட பல்வேறு கையேடுகள் இந்த **"இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில்"** அடங்கியுள்ளன.

## வளரிளம் பருவ ஆண்கள், பெண்களுக்குப் பயிற்சிக் கையேட்டினை உருவாக்கும்பொழுது எந்தக் காரணிகள் கருத்தில் கொள்ளப்பட்டன?

வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் ஆண்களின் பிரச்சினைகளையும், திறன் மேம்பாட்டுத் தேவைகளையும் கண்டறிய, பிரேக் த்ரு (Break through) மற்றும் யுனிசெஃப் (UNICEF) நிறுவனங்களால் பல ஆய்வுகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கைகளின் சாராம்சங்கள் யுனிசெஃப் மற்றும் பிரேக் த்ரு வல்லுனர்களுடன் விரிவாக விவாதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

**வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் ஆண்கள் சம்பந்தப்பட்ட, கீழ்க்காணும் முக்கியமான பிரச்சினைகளும் திறன் வளர்ப்புத் தேவைகளும், பயிற்சிக் கட்டகங்களை உருவாக்கும்போது கருத்தில் கொள்ளப்பட்டன.**

### பெண் குழந்தைகள்

- 13 – 18 வயதிற்குட்பட்ட, கிராமப்புறங்களிலும் சிறு நகரங்களிலும் உள்ள வளரிளம் பருவப் பெண்கள்தான் இளவயதுத் திருமணம், குடும்ப வன்முறை, உணர்வு ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் மோசமாக நடத்தப்படுதல், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மோசமான பொருளாதார சிக்கல் ஆகியவற்றை அதிகமாக எதிர்கொள்கின்றனர்.

- குறைந்த அளவு கல்வி வாய்ப்புகளும், வாழ்வாதார வாய்ப்புகளும் உள்ள இடங்களில்தான் இவர்கள் வசிக்கின்றனர்.

- கல்வி, வாழ்வாதாரம், வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தல், குழந்தைகள் பெற்றுக்கொள்ளுதல், குடும்பச் செலவுகளை நிர்வகித்தல் முதலியவை பற்றி முடிவெடுக்க குறைந்த அளவே திறனும் அதிகாரமும் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

- பழைய பழக்கவழக்கங்களான குழந்தைத் திருமணம், வரதட்சணை, பாலினப் பாகுபாடு ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

- மகள், மணப்பெண், மனைவி மற்றும் தாய் என்ற பாத்திர வரையறைகளில் சமூகம் விரும்புகிறபடி நடந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

- இந்தப் பெண்களிடம் சுயமதிப்பு, சுயமரியாதை, தன்னம்பிக்கை ஆகியவை மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

- உடன்பாடு காண்பதற்காக வாதாடும் பேச்சுவார்த்தைத் திறன் இந்தப் பெண்களிடம் மிகவும் குறைவாகவே உள்ளது.

## ஆண் குழந்தைகள்

14-20 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவ ஆண்கள், தங்களை ஆண் என்று நிரூபிக்கும் அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்த அழுத்தத்தினால், பெண்கள், வளரிளம் பருவ பெண்கள் மற்றும் சமுதாய அடுக்கில் பலவீனமாக உள்ள மக்களுக்கு எதிராக வன்முறையுடன் மூர்க்கத்தனமாக நடந்துகொள்கின்றார்கள்.

- குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை மற்றும் துன்புறுத்தல் உள்ள சூழலில் வளர்ந்த ஆண் குழந்தைகள் இத்தகைய பிரச்சினைகளுக்குப் பழக்கப்பட்டு இருப்பதால் இவை பற்றி அக்கறையில்லாத மனோபவத்தில் இருக்கிறார்கள். இத்தகைய வளரிளம் பருவ ஆண்கள் மீது இத்திட்டம் கவனம் கொள்கிறது.

- இவர்கள் கிராமப்புறங்கள், சிறு நகரங்களில் பெரும்பான்மையாகவும் மற்ற இடங்களில் சிறிய அளவிலும் இருக்கின்றனர்.

- பெண் குழந்தைத்களுக்கு கல்வி வாய்ப்புகளும் வாழ்வாதார வாய்ப்புகளும் குறைவாக உள்ள பகுதிகளிலேயே இவர்களும் வசிக்கின்றனர்.

- பாலினம் மற்றும் ஆண் பெண் பாலின வரையறைகள் பற்றிய இவர்களது எண்ணமானது, ஒரு சார்பாகவே, பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலினப் பாகுபாடு நிறைந்ததாகவே இருக்கின்றது.

- இதனால் இவர்களும் பழைய பழக்கவழக்கங்களான குழந்தைத் திருமணம், வரதட்சணை, கருவிலேயே பாகுபாட்டுடன் பாலினத் தெரிவு ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுகின்றனர். மகன், மணமகன், கணவன், அப்பா போன்ற பாத்திரங்களில் சமூக எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

## இந்தப் பயிற்சிக் கையேட்டை உருவாக்க வளரிளம் பருவ ஆண்கள், பெண்களுக்கு எந்தவித திறன் வளர்ப்புத் தேவைகள் முக்கியம் எனக் கண்டறியப்பட்டன?

களஅளவில் அமலாக்கப்பட்ட திட்டங்கள் தந்த அனுபவத்தின் அடிப்படையிலும், பல்வேறு ஆராய்ச்சிகளின் அடிப்படையிலும், வளரிளம் பருவ ஆண்களுக்கும் பெண்களுக்கும் எந்த விதமான திறன் மேம்பாடுகள் தேவை என்பது கண்டறியப்பட்டன. பாலினப் பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிராக போராட, வளரிளம் பருவ ஆண்கள் பெண்களுக்கு தேவையான முக்கியமான திறன் மேம்பாடுகள் கீழ்காண்பனவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### பெண் குழந்தைகள் :

- பாலின வன்முறை மற்றும் பாலினப் பாகுபாடு பற்றி புரிந்துகொள்ளுதல்.
- பாலியல் ரீதியாக மோசமாக நடத்தப்படுவதைத் தடுத்தல்.
- திருமணத்தின் அர்த்தத்தைப் பற்றி புரிந்துகொள்ளுதல்.
- பெண் குழந்தைகளுக்கு நன்கு மதிப்பளித்தல்.
- முடிவெடுக்கும் திறன் மற்றும் உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைத் திறன் பற்றி கண்டறிதல்.

### ஆண் குழந்தைகள் :

- பாலினம் மற்றும் பாலினப் பாகுபாடு பற்றி அலசுதல்.
- பெண்களுக்கெதிரான பலவகையான வன்முறைகள், அவற்றின் தாக்கம் மற்றும் உரிமை மீறல்களைக் கண்டறிதல்.
- குழந்தைத் திருமணம் ஒரு மனித உரிமை மீறல் என்பதை இனங்காணுதல்.
- ஆரோக்கியமான மணவாழ்வில் ஆண், பெண் இருவரின் பொறுப்பும், பாத்திரமும் என்ன என்பதை மறுவரையறை செய்தல்.
- பாலினம் சார்ந்த வன்முறையை ஒழித்தல்.
- பெண் குழந்தைகளுக்கு நன்கு மதிப்பளித்தல்.

அமர்வுகள், வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்வை ஆராய்ந்து எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளையும் முன்னரே தெரிவிக்கின்றன. கூட்டுமுயற்சி மற்றும் தன்னம்பிக்கையுடன் இந்த சவால்களை வளரிளம் பருவப் பெண்கள் எப்படி எதிர்கொள்வது என்ற வழிகளையும் கண்டறிகின்றன.

## வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் கால அளவும், பயிற்சி அளிக்கும் முறையும் என்ன?

பத்து அமர்வுகளில், 10 மணி நேரத்தில், திறன் வளர்ப்புத் தேவைகளை வழங்கும்படியாக இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. 20 – 25 எண்ணிக்கையிலான பெண்கள், ஆண்கள் கொண்ட சிறு குழுக்களுக்கு ஏற்றவாறு, முறைசாரா வகுப்புகளில் பயிற்றுநர்களால் நடத்தப்படும் வகையில் இந்த அமர்வுகள் அமைந்துள்ளன. இந்த அமர்வுகள் ஆண்களும் பெண்களும் பங்கேற்பு முறையில் பயிற்சி பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாதிரி சம்பவங்களை விவாதித்தல், குழு கலந்துரையாடல்கள், சிந்தனைத் தூண்டல், குழுக்களாக பகிர்தல், பங்கேற்று நடித்தல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாலினம் சார்ந்த வன்முறைகள் மற்றும் குழந்தைத் திருமணம் தொடர்பான இடையீட்டு நடவடிக்கைகளில் (intervention) ஊக்கமாக செயல்பட்ட, வெவ்வேறு பகுதிகளில் உள்ள வளரிளம் பருவத்தினரின் பிரச்சினைகளை நன்கறிந்த, உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பயிற்சியாளர்கள் இந்த அமர்வுகளில் பயிற்றுநர்களாக செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளரிளம் பருவப் பெண்கள் ஆண்களுக்கான பயிற்சிக் கையேட்டின் கீழ் இந்த அமர்வுகள் எவ்வாறு நடத்தப்படும்?

## வளரிளம் பருவப் பெண்கள் ஆண்களுக்கான பயிற்சி அமர்வுகள் எவ்வாறு நடத்தப்பட முடியும்.

- திட்டமிடப்பட்டுள்ள அமர்வுகளின் அடிப்படையில் நடத்தவேண்டிய அமர்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

- அமர்வுத் திட்டத்தை கவனமாகப் படித்து, தேவையான பொருட்களைக் குறித்துகொண்டு, அமர்வுகளை நடத்த எவ்வாறு தயார் செய்துகொள்ள வேண்டும் என்று குறித்துக் கொள்ள வேண்டும். இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சியாளருக்கான கைப்பிரதிகளை நகலெடுப்பது, பயிற்றுநருக்கான குறிப்புகளை புரிந்துகொள்வது, உள்ளூர்தகவல்கள் பற்றி அறிந்திருப்பது, குழு செயல்பாடுகளுக்கான வேறு கருத்துக்களைச் சேகரிப்பது போன்ற தயாரிப்புகளை முன்கூட்டியே செய்ய வேண்டும்.

- அடுத்து, கற்றலின் நோக்கம், செயல்படுத்தும் விதம், முக்கியமான கலந்துரையாடல் குறிப்புகள், பயிற்றுநர்களுக்கான குறிப்புகள், அனைத்தையும் நன்றாகப் படித்து, நன்றாகப் புரிந்துகொண்டதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தக் கையேடு ஒரு வழிகாட்டியே. கிடைக்கும் நேரத்திற்கேற்ப, கற்றுக்கொள்பவரின் தன்மைக்கு ஏற்ப, மாறும் பயிற்சி சூழலுக்கேற்ப கையேட்டினை மாற்றிக்கொள்ளலாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

- பயிற்சியின் வழிமுறைகளைப் பற்றி சிறு குறிப்பு ஒன்றை வைத்துக்கொள்ள வேண்டும். இது அமர்வுகளை நடத்தும்போது, கலந்துரையாடல் செய்வதற்கான குறிப்புகளைத் தர உதவும்.

- வளரிளம் பருவப் பெண்களுக்கு அமர்வு நடத்தும்போது படிப்போர் கைப்பிரதிகள், குழு செயல்பாட்டுப் பொருட்கள், சிறிய பயிற்சிக் குறிப்பு ஆகியவற்றைக் கையில் வைத்திருக்க வேண்டும்.



## கட்டகம் – 1

# சமூகப் பாலினம் மற்றும் பாலினப் பாகுபாடுகள் பற்றி புரிந்து கொள்ளுதல்

# அமர்வு – 1

## ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகள்
## *(Gender Stereotyping)*

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில் நம் சமூகத்தில் ஆண் பெண்களின் பாத்திர வரையறைகளும், பொறுப்புகளும் என்னவாக இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது என்பதை பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.*
- *சமூகத்தின் 'விதிகளும்' , 'எதிர்பார்ப்புகளும்' ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகளை எவ்வாறு தீர்மானிக்கின்றன என்பதை பங்கேற்பாளர்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்.*

**நேரம் :** *40 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- *பயிற்றுநர், பங்கேற்பாளர்களை ஒரு பெரிய வட்டத்தில் நிற்கச் சொல்லவேண்டும்.*
- *பயிற்றுநர், ஒரு அட்டைப்பெட்டியில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப துண்டுச் சீட்டுகளைச் சுருட்டி போட்டிருக்க வேண்டும். (அந்தத் துண்டுச் சீட்டுகளில், நாய், பூனை, குயில், மயில், ஆடு, மாடு, சேவல், சிங்கம், காக்கா போன்ற விலங்குகள், பறவைகளின் சப்தங்களைப் பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்ளும் வகையில் மேலே உள்ளவைகளின் பெயர்களை இரண்டு இரண்டு சீட்டுகளில் எழுதிச் சுருட்டி அட்டைப் பெட்டியில் போட்டிருக்க வேண்டும்).*
- *பங்கேற்பாளர்கள் அனைவரும் ஆளுக்கொரு சீட்டை எடுக்கும்படி கூற வேண்டும்.*
- *பங்கேற்பாளர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் துண்டுச் சீட்டில் கூறியுள்ள பொருள், விலங்கு, பறவைகளின் சப்தங்களை ஒலி எழுப்பிக்கொண்டே, அதே சப்தங்களை எழுப்பிக்கொண்டிருக்கும் பங்கேற்பாளரோடு ஜோடி சேர வேண்டும். ஒலியை வைத்துதான் ஜோடியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கூற வேண்டும்.*
- *ஜோடி சேர்ந்த பங்கேற்பாளர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ளச் சொல்லலாம்.*
- *பங்கேற்பாளர்களுடைய பெயர், பிடித்த உணவு, தங்கள் குடும்பத்தில் உள்ள ஆண்களிடம் (குழந்தைகள், பெரியவர்கள்) தனக்குப் பிடித்த குணங்கள் எது என்றும், தங்கள் குடும்பத்தில் உள்ள பெண்களிடம் (குழந்தைகள், பெரியவர்கள்)*

தனக்குப் பிடித்த குணங்கள் ஆகியவற்றைப்பற்றி அறிமுகத்தில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும்படி கூறவேண்டும்.

- பின்னர் பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவராக தங்கள் ஜோடியை பொது அமர்வில் அறிமுகம் செய்துவைக்கச் சொல்லவேண்டும்.

அவ்வாறு பங்கேற்பாளர்கள் ஆண், பெண் குணநலன்களைப் பற்றிக் கூறும்போது பயிற்றுநர், கரும்பலகையில் கீழ்க்காண்பனவாறு எழுதிக்கொண்டே போக வேண்டும்.

| ஆண் குழந்தைகள் மற்றும் ஆண்களிடம் விரும்பப்படும் குணநலன்கள் (உதாரணம்) | பெண் குழந்தைகள் மற்றும் பெண்களிடம் விரும்பப்படும் குண நலன்கள் (உதாரணம்) |
|---|---|
| கடின உழைப்பு | அக்கறை எடுத்து கவனித்துக் கொள்ளுதல் |
| தைரியம் | நன்றாகச் சமைத்தல் |

- அனைவரும் பகிர்ந்த பிறகு, **பயிற்சித் தாள் - 1** இல் உள்ள கேள்விகளைக் கேட்டு பங்கேற்பாளர்களிடம் பொது அமர்வில் கலந்துரையாட வேண்டும். அவர்களிடம் பெறப்பட்ட பதில்களோடு கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் தொகுத்துக்கூறி அமர்வை முடிக்க வேண்டும்.

**பயிற்சித் தாள் - 1**

- இந்தப் பகிர்வில் இருந்து உங்களால் ஆண்,பெண் குணநலன் பற்றி ஏதாவது உணர முடிகிறதா?
- ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் இந்தக் குறிப்பிட்ட தனி குணநலன்களைக் கொண்டிருக்கின்றனர் என்று ஏன் நாம் நினைக்கிறோம்?
- மேற்கூறிய குணநலன்கள் அனைத்தும் ஆண், பெண் இருவரிடமும் இருக்கக்கூடும் என்று நினைக்கிறீர்களா?
- இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகளால் வளரிளம் பருவ ஆண்களும் மற்ற ஆண்களும் சந்திக்கக்கூடிய அழுத்தம் என்ன?
- இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகளால் வளரிளம் பருவப் பெண்களும் மற்ற பெண்களும் சந்திக்கக்கூடிய அழுத்தம் என்ன?
- இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகள் வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பிற ஆண்கள் மீதும் வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் பிற பெண்கள் மீதும் ஏற்படுத்தும் தாக்கம் என்னவாக இருக்கும்?

# கருத்துத் தாள்

## ஒரே மாதிரியான பாலினப் பாத்திர வரையறைகள்

*சிறுவயதில் இருந்தே நம் குடும்பத்திலிருந்தும், நாம் வாழும் சமூகத்திலிருந்தும் சில நம்பிக்கைகளை நாம் பெறுகிறோம். சடங்குகள், பழக்கவழக்கங்கள் மட்டுமன்றி இந்த நம்பிக்கைகள் சார்ந்து, மனிதர்களின் குணங்கள் பற்றியும் சில மதிப்பீடுகளை குடும்பமும் சமூகமும் நமக்குள் விதைக்கின்றன. இப்படி மனிதர்கள் ஒருவிதமான வரையறைக்குள் உட்படுத்தப்படுவதைத்தான் **('Stereotyping')** என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறோம் .*

*குழந்தை பிறந்ததிலிருந்து ஆண், பெண் என்று பாலினப் பாகுபாட்டு வரையறைகளுடனேயே நாம் வளர்க்கப்படுகிறோம். இவை நமக்குள் நம்மை அறியாமலேயே விதைக்கப்படுகிறது.*

## ஒரே மாதிரியான பாலின வரையறை எப்படி நிறுவப்படுகிறது?

*இது நான்கு வழிகளில் நடக்கிறது - குடும்பம், ஊடகங்கள், கல்வி, ஒத்த குழுக்கள்.*

*பொதுவாக இந்த ஒரேமாதிரியான வரையறைகளுக்கான விதிமுறைகள் முதலில் குடும்பத்தில்தான் தொடங்குகிறது. குடும்பம், தான் சார்ந்த உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களைத் தனக்கான சமூக விதியாக எடுத்துக்கொள்கிறது. குடும்பம் தான்சார்ந்த சமூகத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக சமூகம் எதிர்பார்க்கின்ற ஒரே மாதிரியான பாலின வரையறைகளை வளரும் குழந்தையின் மேல் சுமத்துகிறது. உடை, அவர்கள் விளையாடும் பொம்மைகள், அவர்கள் வெளிப்படுத்த வேண்டிய உணர்ச்சி, யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அடிக்கடி வரையறைகளை நினைவூட்டி மறுஉறுதி செய்து கொண்டே இருக்கிறது.*

*சிறுவயதில் இருந்தே, ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் வெவ்வேறுவிதமாக வளர்க்கிறோம். பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்று நினைக்கிறோம்: ஆண்கள் என்றால் வீரம், தைரியம், எதையும் சமாளிப்பவர்களாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். பெண்கள் என்றால் அமைதியானவர்கள், மற்றவர்கள் மேல் அன்பாக அக்கறையாக இருப்பார்கள் என்று சொல்வது முழுமையாக சரியா? ஆண்களில் பரிவு பாசத்தோடு இருப்பவர்கள் இல்லையா? பெண்களில் எதையும் சமாளிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் இல்லையா?*

*ஆசிரியர்கள் வளரிளம் பருவப் பெண்களையும் ஆண்களையும் பாராட்டுவதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் வெவ்வேறுவிதமான அணுகுமுறைகளையே கையாளுகிறார்கள், ஆண்களிடம், படிச்சு பெரிய ஆளாக வரவேண்டும் என்று கூறும் அதே ஆசிரியர் பெண்களிடம் நல்ல மதிப்பெண்கள் எடுத்ததற்கு பாராட்டுகிறார்கள் ஆனால்; பெண்களின் இலக்குகளை தூண்டுவதில்லை. திட்டினால் அழுவார்கள் என்று பெண்களை அதிகம் ஆசிரியர்கள் கோவப்படுதில்லை. ஆனால் தங்களை அடிப்பதாக பள்ளிச் சிறுவர்கள் புகார் செய்கிறார்கள்.*

பிறகு அவர்களுடைய நண்பர் குழுக்கள் இவற்றை மறுஉறுதி செய்கின்றனர். **"நீ ஆம்பளடா எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்"** என்றும், **"நீ பொண்ணு அடக்கவொடுக்கமாக இரு"** என்றும் நினைவுறுத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

நம்முடைய தொலைக்காட்சி, சினிமாவில், பத்திரிகைகளில், ஆண்களை வலிமையானவர்களாக, அதிகாரம் செலுத்துபவர்களாக, உறுதியானவர்களாக இருக்க வேண்டும் என்றும் சித்தரிக்கிறது. பெண்களென்றால் அமைதியாக மற்றவர்களைப் பராமரிப்பவர்களாகவும் எதற்கும் மறுபேச்சு பேசாதவர்களாகவும் இருக்கவேண்டும் என்று சித்தரிக்கின்றன .

## ஆண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒரே மாதிரியான பாத்திர வரையறைகளினால் வரக்கூடிய ஆபத்துகள் என்ன?

இப்படியான ஒரே மாதிரியான வரையறைகளை நம்பும்போது நமக்குள் பல விஷயங்கள் பற்றிய முன்தீர்மானங்கள் தோன்றிவிடுகின்றன.

சிறுவயதில் இருந்தே இந்த வரையறைகளை ஆணும் பெண்ணும் நம்ப ஆரம்பித்து விடுகிறார்கள், இது தன்னைப் பற்றிய சுயமதிப்பீட்டிலும் உறவுகளைக் கட்டமைப்பதிலும் படிப்பு, வேலை, குடும்பம் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்வதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே பாலின வரையறைகளோடு குழந்தைகளை வளர்க்கும்போது, ஆண்களுக்கு பரிவைக் கற்றுக் கொடுப்பதில்லை, பெண்களுக்கு தைரியத்தைக் கற்றுக்கொடுப்பதில்லை இந்த மாதிரியான வரையறைகளால் பெண்கள் வெளியுலகத்தில் நடமாடும்போது ஏதாவது பிரச்சினை வந்தாலும் அதை எதிர்கொள்வதற்கு தயங்குகிறார்கள், பயந்து ஒதுங்கி போகிறார்களே தவிர எதிர்த்து நிற்பதில்லை. இதேபோல் ஆண்களும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற வரையறைப்படி வளர்ந்திருப்பதால், சாலையில் போகும் பெண்ணைக் கிண்டல் செய்யும்போது அது பற்றி அவர்களுக்குள், வெட்கமோ அவமான உணர்வோ வருவதில்லை. இவ்வாறு ஆண்களையும் பெண்களையும் இப்படி ஒரே மாதிரியாக பாலின வரையறைப்படுத்துவது இரண்டு பேருடைய ஒட்டுமொத்தமான வளர்ச்சியையும் திறன் மேம்பாட்டையும், அவர்களுக்குள்ளே இருக்க வேண்டிய ஆரோக்கியமான உறவுகளையும் பாதிக்கிறது.

இந்த ஒரே மாதிரியான பாலின வரையறைகள்தான் இன்று வளரிளம் பருவப் பெண்கள் எதிர்கொள்ளக் கூடிய பல பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது.

இந்தப் பயிற்சிக் கையேடானது குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை போன்ற பல தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்குப் பயிற்சி அளிக்கிறது.

இவற்றைத் தெரிந்து கொள்வது என்பது ஒரு ஆரம்பமே. மனிதர்களாகிய நம்மிடம் இந்த குணநலன்கள் இருக்கும் என்பதையும், தேவைப்பட்டால் அது வெளிப்படும் என்பதைப் பற்றியும் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும்.

# அமர்வு – 2

## நம்முடைய வாழ்வில் பாலினம் மற்றும் சமூகப் பாலினத்தால் ஏற்படும் தாக்கத்தைக் கண்டறிதல்

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில் பங்கேற்பாளர்கள் உடற்கூறு பாலினம் மற்றும் சமூகப் பாலினத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வார்கள்.*
- *சமுதாயம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டமைத்துள்ள பாத்திர வரையறைகளை ஆராய்ந்து, இத்தகைய பாத்திர வரையறைகளும், பொறுப்புகளும் அவர்களின் முடிவெடுக்கும் திறனைக் குறைப்பதோடு வளர்ச்சிக்கான குறைந்த ஆதாரங்களையே தருகிறது என்பதை பங்கேற்பாளர்கள் அறிந்து கொள்வார்கள்.*

**நேரம் :** *40 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- ***அமர்வு - 1**இல் நாம் கலந்துரையாடிய கருத்துக்களை நினைவில் கொள்ளச் சொல்லவேண்டும்.*
- *ஒரே மாதிரியான பாலின வரையறைகளை ஒட்டி, பாலினம் மற்றும் சமூகப் பாலினத்தைப் புரிந்து கொள்வதுதான் இந்த அமர்வின் நோக்கம் என்று கூறி அமர்வை பயிற்றுநர் தொடங்க வேண்டும்.*
- *பயிற்றுநர், **பயிற்சித்தாள் - 1**இல் உள்ள அட்டவணையை வரைந்து பங்கேற்பாளர்களுக்கு உடற்கூறு பாலினம் மற்றும் சமூகப் பாலினம் என்றால் என்ன என்று விளக்கிக் கூறவேண்டும்.*
- *பின்னர் **பயிற்சித்தாள்** - 2இல் உள்ள வாக்கியங்களை ஒவ்வொன்றாக வாசித்து அது உடற்கூறு பாலினம் சார்ந்ததா? சமூகப் பாலினம் சார்ந்ததா? என்று கேட்க வேண்டும்.*
- *பயிற்றுநர் வாக்கியத்தை மட்டும் கூறவேண்டும் (அடைப்புக் குறிக்குள் உள்ளதைக் கூறக்கூடாது. அவை பயிற்றுநரின் புரிதலுக்காகக் கொடுக்கப்பட்டவை).*
- *பங்கேற்பாளர்கள், தாங்கள் கூறும் பதில்களுக்கு காரணங்கள் கூறி அது உடற்கூறு பாலினமா அல்லது சமூகப் பாலினமா என்று குறிப்பிட வேண்டும்.*

*பின்னர் பயிற்றுநர், **பயிற்சித்தாள் - 3**இல் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும். கலந்துரையாடலின்போது கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் விளக்கிக் கூறவேண்டும்.*

## பயிற்சித் தாள் - 1

| உடற்கூறு பாலினம் (Sex) | சமூகப் பாலினம் (Gender) |
|---|---|
| உடற்கூறு சார்ந்தது | சமூகம் கட்டமைத்தது |
| நீங்கள் இதனுடன் பிறக்கிறீர்கள் | இது கற்கப்பட்டது |
| அறுவை சிகிச்சையின்றி, பிறவிதமாக மாற்றமுடியாது | பல்வேறு சமூகங்களில், நாடுகளில், கலாச்சாரங்களில் வெவ்வேறு வரலாற்றுக் காலக் கட்டங்களை ஒட்டி இது மாறுகிறது |

## பயிற்சித்தாள் - 2

- *பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஆண்கள் பெற்றெடுப்பதில்லை. (உடற்கூறு பாலினம்)*
- *பெண் குழந்தைகள் மென்மையானவர்கள். ஆண் குழந்தைகள் முரடானவர்கள். (சமூகப் பாலினம்)*
- *இந்திய விவசாயத் தொழிலாளர்களுக்கிடையே ஒரே மாதிரியான வேலைக்கு, ஆண்களின் சம்பளத்தில் 40 – 60 சதவீதமே பெண்களுக்குச் சம்பளமாக அளிக்கப்படுகிறது. (சமூகப் பாலினம்)*
- *பெண்களால் குழந்தைகளுக்கு தாய்ப் பால் அளிக்கமுடியும். ஆண்களால் குழந்தைகளுக்கு புட்டிப் பால் அளிக்கமுடியும். (உடற்கூறு பாலினம், சமூகப் பாலினம்)*
- *ஒரு பெண் வேலைக்குச் செல்பவராக இருந்தாலும், அவள்தான் வீட்டையும் கவனித்துக்கொள்ள வேண்டும். (சமூகப் பாலினம்)*
- *குடும்பத்திற்கான பொருளாதாரத் தேவைகளை சமாளிப்பது ஆண்களுடைய கடமை. (சமூகப் பாலினம்)*
- *வணிகம் செய்பவர்களில் முக்கால்வாசிப் பேர் ஆண்கள். (சமூகப்பாலினம்)*
- *வளரிளம்பருவ காலத்தில் ஆண்களுக்குக் குரல் உடையும், பெண்களுக்கு உடையாது. (உடற்கூறு பாலினம்)*
- *அபாயகரமான பணிகளான சுரங்கங்களில் வேலை செய்வதற்கு பெண்கள் தடை செய்யப்பட்டுள்ளனர். (சமூகப் பாலினம்)*
- *ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கையிபடி உலகத்தின் 67 சதவீத வேலையைப் பெண்கள் செய்கின்றனர். ஆனால் அவர்களுடைய வருமானம் உலகத்தின் வருமானத்தில் 10 சதவீதமே இருக்கின்றது. (சமூகப் பாலினம்)*

**பயிற்சித் தாள் - 3**

- உடற்கூறு சாராத குணங்கள் இரு பாலினத்தவருக்கும் பொதுவானதாக இருக்கும்போது ஏன் இந்தப் பாகுபாடு ஏற்படுகின்றது?
- நமது உரிமைகளை அனுபவிப்பதற்கு நமது பாலினம் எந்த வழியில் தடையாக உள்ளது? பாலினத்தால், ஒருவர் உரிமை மீறலுக்கு எளிதில் ஆளாகும் வாய்ப்புள்ளதா?
- ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே உள்ள பாத்திர வேறுபாட்டையும், நடமாட்டத்தில், கல்வி வாய்ப்புகளில், அரசியல் உரிமைகளில் ஏற்படும் கட்டுப்பாடுகளும் மற்றும் குடும்ப உறுப்பினர்களைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டு கவனிக்கும் பொறுப்புகளில் ஏற்படும் கட்டுப்பாடுகளையும் பற்றி பயிற்றுநர்கள் பேச வேண்டும்.

# கருத்துத் தாள்

## நம்முடைய வாழ்வில் பாலினம் மற்றும் சமூகப் பாலினத்தால் ஏற்படும் தாக்கத்தைக் கண்டறிதல் :

- இயற்கையும், உயிரியலும் நீங்கள் ஆணாகப் பிறந்திருக்கிறீர்களா அல்லது பெண்ணாகப் பிறந்திருக்கிறீர்களா என்பதை மட்டுமே தீர்மானிக்கிறது.

- ஆனால் சமூகத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற பாலின வரையறைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு விதமான பாத்திரங்களையும் பொறுப்புகளையும் தருகிறது.

- கலாச்சாரம் மற்றும் சமூக விதிமுறைகள், ஆண்களை வலுவானவர்களாக, ஆக்ரோஷமாக இருப்பவர்களாக, மற்றவர்களைக் கட்டுப்படுத்துபவர்களாக, உணர்ச்சிகளை வெளியே காண்பித்துக் கொள்ளாதவர்களாக உருவாக்குகிறது.

- இதேபோல் பெண்கள் என்றால் அடங்கிப் போகிறவர்களாக, பலமற்றவர்களாக, எதற்கும் பொறுத்துப் போகிறவர்களாக, ஆண்களைச் சார்ந்து இருப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் வரையறுக்கிறது.

- இப்படி ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறு விதமாக சமூகமயமாக்குவது இருவருக்கிடையேயும் அதிகாரத்தில், சக்தியில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்குகிறது. சிறுவயதில் இருந்தே சுற்றிலுமுள்ள பெரிய ஆண்கள், பெண்களைப் பார்த்து வளரும் பெண் குழந்தைகள் அடங்கிப் போகிறவராகவும், ஆண் குழந்தைகள் அதிகாரம் செலுத்துபவர்களாகவும் வளர்கிறார்கள், வளர்க்கப்படுகிறார்கள்.

- இதன் காரணமாக ஆண்களின் மனோபாவம், பெண்களை மரியாதைக் குறைவாகப் பார்ப்பதாகவே இருக்கிறது. தனக்கு அதிகாரம் போய்விடுமோ அல்லது குறைந்துவிடுமோ என்று நினைத்து எப்போதும் அதிகாரத்தை பெண்கள் மேல் செலுத்த முற்படுகிறார்கள் .

- உங்கள் பாலினம் சார்ந்து குறிப்பிட்ட சில பாத்திர வரையறைகள் அல்லது சில எதிர்பார்ப்புகளை உங்கள் மேல் வைப்பது, உங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும். உதாரணத்திற்கு ஒரு குடும்பத்தில் ஆண்களின் முடிவுகளைப்பற்றி பெண்கள் கேள்வி கேட்காமல் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடைய ஒரு கலாச்சாரத்தில், வன்முறை ஏற்பட்டாலும் பெண்கள் அமைதியாக இருக்க நிர்பந்திக்கப்படுகின்றனர். இதனால் அவர்களுடைய வன்முறையற்ற வாழ்க்கைக்குரிய உரிமையானது, ஆபத்திற்கு உள்ளாகிறது.

- உடற்கூறு பாலினத்திற்கும் சமூகப் பாலினத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை எப்போதும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய வீடுகளிலும் சமூகங்களிலும், சமுதாயத்திலும் நுட்பமான பாகுபாடும் அதிகாரமும் செயல்படுவதைப் பற்றி விழிப்புணர்வோடு இருப்பது மிகவும் உதவியாக இருக்கும்.

- ஆண் – பெண் பாத்திர வரையறைகளும், பொறுப்புகளும், சமூக விதிகள், மத ஒப்புதல்கள், குடும்பக் கலாச்சாரம் மற்றும் சட்டரீதியான உரிமைகள் ஆகியவற்றைக் கொண்டு பல காலமாக கட்டமைக்கப்பட்டுள்ளன. உண்மையில் எல்லா வேலைகளையும் ஆண்கள் பெண்கள் இருவராலும் செய்யமுடியும். அதற்கு ஆண்கள் பெண்கள் இருவருக்கும் சரிசமமான ஆதார வளங்கள், முடிவெடுக்கும் அதிகாரங்கள், முழுமையான நடமாட்டம் அளிக்கப்பட வேண்டும். ஆனால் இந்தச் சமுதாயம் செயற்கையான தடைகளை நம்மைச் சுற்றி உருவாக்கியுள்ளது. ஒரு பெண் திருமணமான பின், குடும்பத்தை விட்டுச் சென்றுவிடுவாள், அதனால் குடும்ப வருமானத்திற்கு அவளால் எந்தப் பங்களிப்பும் இருக்காது என்றே பார்க்கப்படுகின்றாள். ஒரு ஆணின் படிப்பு, குடும்பத்தின் எதிர்காலத் தேவைகளுக்கான முதலீடாகவே பார்க்கப்படுகின்றது.

# அமர்வு – 3

## வன்முறை மற்றும் உரிமைகள்

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில், வன்முறையின் வெவ்வேறு வடிவங்களையும், அதனால் பாதிக்கப்படுபவர்கள் யார் என்பதையும் பங்கேற்பாளர்கள் உணர்ந்து கொள்வார்கள்.*
- *பெண்கள் மீது நடைபெறும் வன்முறைகளினால் ஏற்படும் தாக்கங்களையும், அதனால் மீறப்படும் உரிமைகளையும் பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.*

**நேரம் :** *90 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *வெள்ளைப் பலகை /கரும்பலகை , மார்க்கர் பேனாக்கள்.*

**செயல்படுத்தும் விதம் :**

- *பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவுக்கும்* ***பயிற்சித்தாள் - 1இல்*** *கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளை பயிற்றுநர் கொடுத்து அந்தந்த காலக் கட்டடங்களில் பெண் குழந்தைகளோ, பெண்களோ என்ன மாதிரியான வன்முறையை எதிர்கொண்டார்கள் என்று கலந்துரையாடச் சொல்ல வேண்டும். பங்கேற்பாளர்கள் குழுவில் கலந்துரையாடும் பொழுது,*
    - *உடல் ரீதியான வன்முறை,*
    - *பாலியல் ரீதியான வன்முறை,*
    - *மன ரீதியான வன்முறை மற்றும்*
    - *பாலியல் ரீதியான அச்சுறுத்தல்கள்*

*என வன்முறையின் நான்கு அம்சங்களையும் சேர்த்துச் சிந்திக்கச் சொல்ல வேண்டும்.*

- *நான்கு வன்முறைகளில் ஏதேனும் ஒரு நிகழ்வை குழுவில் சிந்தித்து அதனை பொது அமர்வில் நடித்துக்காட்டச் சொல்ல வேண்டும். நடிக்கும் பொழுது பேசக் கூடாது. மௌனமாக, செய்கையின் மூலமே நடித்துக் காட்ட வேண்டும். சொல்லவரும் வன்முறையை அசையா பிம்பமாக ஒரு சிலை போல காட்சிப்படுத்த வேண்டும் என்று பயிற்றுநர் விளக்க வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவாகப் பொது அமர்வில் நடித்துக் காட்சிப்படுத்தும் பொழுது, மற்ற குழுவினர் கவனமாகப் பார்த்து என்ன வகை வன்முறையைக் காட்சிப்படுத்துகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளும்படி என சொல்ல வேண்டும்.*

- ***பின்னர் பயிற்றுநர், கீழ்க்காணும் அட்டவணையை கரும்பலகையில் எழுதி ஒவ்வொரு குழுவும் காட்சிப்படுத்தியதன் அடிப்படையில் பொது அமர்வில் கலந்துரையாடி, கட்டத்தை நிரப்ப வேண்டும்.***

| குழு | வன்முறை நிகழ்வுகள் என்ன | யார் அந்த வன்முறையை எதிர்கொண்டது? | யார் அந்த வன்முறையை நிகழ்த்தியது? | வன்முறையை எதிர்கொண்ட நபருக்கு அதனால் ஏற்பட்ட தாக்கம் என்ன? | இந்த நபரின் எந்த உரிமைகள் மீறப்பட்டன? |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

- *பயிற்றுநர், இந்த அட்டவணையை நிரப்புவதற்கு பங்கேற்பாளர்கள் தாங்கள் பார்த்த காட்சிகளையும், பிம்பங்களையும் மனதில் கொண்டு பதில் அளித்து ஒவ்வொன்றாக நிரப்ப வேண்டும்.*

- *கீழே கொடுக்கப்பட்டுள்ள **பயிற்றுநர் குறிப்பு - 1 இல்** மாதிரி, பதில் கருத்துகளைப் போல் வருவதை பயிற்றுநர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.*

- *பின்னர், பயிற்றுநர் **பயிற்சித்தாள் - 2 இல்** உள்ள கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடி கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் விளக்கிக்கூறி அமர்வை முடிக்க வேண்டும்.*

**பயிற்றுநர் குறிப்பு - 1**

***மாதிரிப் பதில்கள்***

***வன்முறை நிகழ்வுகள் - உதாரணம் :***

1. *பேருந்தில், கடை வீதியில் பாலியல் தொல்லை, வீட்டில் வன்முறை, மருத்துவமனையில் கருவிலேயே பாகுபாட்டுடன் பாலினத் தெரிவு, கல்விபெறுவதில் பாலினப் பாகுபாடு முதலியன.*
2. *உடல் ரீதியான, மன ரீதியான, உளவியல் ரீதியான, பொருளாதார ரீதியான, பாலியல் ரீதியான வடிவங்களில் வன்முறை.*
3. *பெண்கள், குழந்தைகள், அந்தப் பெண்களுடைய பெற்றோர் முதலியோர்.*
4. *இந்தக் கேள்விக்குப் பல்வேறு பதில்கள் இருக்கக்கூடும். உதாரணத்திற்கு மாமனார், மாமியார், கணவர், அண்டை வீட்டார், பெற்றோர், தெரியாதவர்கள் முதலியோர்.*
5. *பெண்களின் நடமாடும் சுதந்திரம் குறைதல், பாதுகாப்பு, மிகக் குறைந்த சுயமரியாதை போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும்.*
6. *இந்தப் பத்தியில் பலவகை உரிமை மீறல்கள் குறிப்பிடப்படலாம். உதாரணத்திற்கு சுதந்திரத்துக்கான உரிமை மீறல், சம உரிமை மீறல் போன்றவை. தேவைப்பட்டால் விடுபட்ட உரிமை மீறல்கள் பற்றி பங்கேற்பாளர்களை பேசும்படி தூண்டலாம்.*

## பயிற்சித் தாள் - 1

- குழு *1* - கருவிலிருந்து பத்து வயது வரை.
- குழு *2* - வளரிளம் பருவம்
- குழு *3* - திருமணமாகி இனப்பெருக்க காலக்கட்டம்.
- குழு *4* - வயதான பெண்

## பயிற்சித் தாள் - 2

- இந்த அட்டவணை நமக்கு என்ன கூறுகிறது?
- எல்லா நிகழ்வுகளிலும் எந்த நபர் பாதிக்கப்பட்டுள்ளார்?
- எல்லா நிகழ்வுகளிலும் யார் வன்முறையை நிகழ்த்தியது? பாதிக்கப்பட்ட நபருக்குத் தெரிந்தவர்களா?
- இது பாதிக்கப்பட்ட நபருக்கு எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?
- எல்லா சம்பவங்களிலும் பொதுவான காரணிகள் என்ன?

# கருத்துத் தாள்

## வன்முறை மற்றும் உரிமைகள்

வன்முறை, பாதிக்கப்பட்டவர் மேல் உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அவர்களுடைய பாலியல், உடல், மனம் சம்பந்தமான வாழ்விலும் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

வன்முறை நிகழ்வுகளில், பாதிக்கப்பட்டவர் பெண்ணாகவோ, பெண் குழந்தையாகவோ, அவளுடைய குடும்ப உறுப்பினர்களாகவோ, அவளுடைய குழந்தைகளாகவோதான் இருக்கிறார்கள்.

வன்முறையால் தேவையில்லாத கர்ப்பம், பாதுகாப்பற்ற கருக்கலைப்பால் வரும் சிக்கல்கள், எச்ஐவி உட்பட பாலியல் தொற்றுகள், அடி உதையால் வரும் காயங்கள் போன்ற உடல் நலப் பிரச்சினைகள் வரலாம்.

மனச்சோர்வு, பதற்றம், மோசமான நிகழ்வுகளால் அதிர்ச்சிகரமான மன அழுத்தம், தற்கொலை செய்ய நினைத்தல், மரணம் போன்ற மனநலப் பிரச்சினைகள் வரலாம். வன்முறை குழந்தைகளின் உயிர் வாழ்தலையும், வளர்ச்சியையும், படிப்பையும் பாதிக்கிறது. வீட்டின் பொருளாதார தேவைகளுக்கு ஆண்களை சார்ந்திருக்கும் சூழலில் பெண்கள் மேலும் ஒடுக்கப்படுகிறார்கள்.

அவர்களின் இரண்டாம்பட்ச சமூக நிலையினால், பலவீனமானவர்களாய் பார்க்கப்பட்டு, வன்முறையை எதிர்கொள்கின்றனர். மேலும் இந்த நிகழ்வுகளில் வன்முறையை ஏற்படுத்துவோர் அந்தப் பெண்ணுக்கு தெரிந்தவராகவோ அல்லது உறவினராகவோ இருக்கின்றனர். அவளுடைய வீடோ அல்லது இருப்பிடமோ அவளுக்கு பாதுகாப்பற்றதாக ஆகிவிடுகிறது. இது அவளுக்கு வெளியே பாதுகாப்பைத் தேடும் வாய்ப்பைக் குறைத்துவிடுகிறது. இதனால் அவளுடைய பாதுகாப்பற்ற நிலையை அதிகரிக்கிறது. சுயமரியாதையுடன், பாதுகாப்புடன், வன்முறையிலிருந்து விடுதலையடைந்து வாழ கிடைக்கக்கூடிய வசதிகளும், பராமரிப்பு பெறக்கூடிய வாய்ப்புகளும் குறைகின்றன.

# அமர்வு – 4

## உறவுகளில் சமூகப் பாலினம் மற்றும் அதிகாரத்திற்கு இடையே உள்ள தொடர்பு

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில், உறவுமுறைகளில் யாருக்கு அதிகாரம் உள்ளது என்பதையும், அதனால் அவர்களுக்கு முடிவு எடுக்கும் உரிமை இருக்கிறது என்பதையும் பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்வார்கள்.*

- *உறவுமுறைகளில் அதிகாரம் உள்ளவர்கள் தங்கள் அதிகாரத்தை நேர்மறையாக பயன்படுத்துவதன் அவசியத்தையும் தவறாகப் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் அலசி, ஆராய்ந்து பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.*

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள்** - *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம்:**

- *பயிற்றுநர் சார்ட் பேப்பரிலோ, கரும்பலகையிலோ "அதிகாரம்" என்ற வார்த்தையை எழுதி பங்கேற்பாளர்கள் இந்த வார்த்தையை பார்த்தவுடன் அல்லது வாசித்தவுடன் என்ன நினைக்கிறார்கள் என்று ஒரு வரியில் விளக்கச் சொல்லவேண்டும்.*

- *பின்னர், **பயிற்சித்தாள் - 1 இல்** கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை மூன்று கட்டங்களாகப் பிரித்து சார்ட் பேப்பரில் வரைந்து கொள்ளவேண்டும்.*

- *அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள உறவு முறைகளில் யார் அதிகாரமிக்கவர்கள், யார் உதவி செய்பவர்கள், யார் மற்றவருக்குத் தீங்கு ஏற்படுத்தியவர்கள் என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு அட்டவணையை நிரப்ப வேண்டும்.*

- *மேலும் ஒவ்வொரு உறவு முறையிலும் உள்ள ஆணோ அல்லது பெண்ணோ எங்கிருந்து அந்த அதிகாரத்தைப் பெற்றனர்? எது அவர்களை அதிகாரம் செய்ய வைக்கிறது போன்றவற்றை கலந்துரையாடி அட்டவணையை நிரப்ப வேண்டும்.*

- *பின்னர் **பயிற்சித்தாள் - 2 இல்** உள்ள கேள்விகளை பொது அமர்வில் கேட்டுக் கலந்துரையாடி, கருத்துத்தாளில் கூறியிருக்கும் கருத்துக்களையும் கூறி விளக்க வேண்டும்.*

**பயிற்சித்தாள் - 1**

| உறவுமுறை | யார் அதிகாரம் மிக்கவர்? | என்ன காரணம்? |
|---|---|---|
| தந்தையும் மகளும் | தந்தை | வயதில் மூத்தவர், பணம் சம்பாதிப்பவர், உடல் வலிமை மிக்கவர் |
| தந்தையும் தாயும் | | |
| ஆசிரியர் மற்றும் மாணவர் | | |
| வகுப்புத் தலைவர் மற்றும் மாணவர் | | |
| அண்ணன்/தம்பி மற்றும் அக்கா/தங்கை | | |
| தந்தையின் தாய் மற்றும் சொந்தத் தாய் | | |

**பயிற்சித் தாள் - 2**

- *உறவுகளுக்குள் அதிகாரம் என்பது ஒரு எதிர்மறைப் பண்பா அல்லது ஓர் அம்சமா?*
- *உறவுகளில் மோசமாக நடத்தப்படுவது ஏன் நடக்கிறது?*
- *நாம் ஏன் வளரிளம் பருவப் பெண்களையும் மற்ற பெண்களையும் விட, வளரிளம் பருவ ஆண்களையும் மற்ற ஆண்களையும் மிகுந்த அதிகாரம் உடையவர்களாகக் கருதுகிறோம்?*
- *ஒரு உறவில் மற்றவரை மோசமாக நடத்தும் அதிகாரமிக்க நபரையும், பாதிக்கப்பட்டவரையும் சரிசமமாகக் குறை சொல்லலாமா?*
- *உறவுகளிலும் முடிவுகள் எடுக்கும்போதும் தங்கள் அதிகாரத்தை மேம்படுத்திக்கொள்ள வளரிளம் பருவப் பெண்களும் மற்ற பெண்களும் என்ன முயற்சிகளை எடுக்கலாம்?*

# கருத்துத் தாள்

## உறவுகளில் சமூகப் பாலினத்துக்கும் அதிகாரத்துக்கும் இடையே உள்ள தொடர்பு

*அதிகாரம் என்பது அதுவாகவே நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ இருப்பதில்லை. சரியாகவோ தவறாகவோ அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் போதுதான் நன்மையோ தீமையோ ஏற்படுகின்றது. அந்த அதிகாரம் எதிர்மறையாக பயன்படுத்தப்பட்டால், பாதிக்கப்பட்டவரது உரிமைகள் மீறப்பட்டு, அவர்களிடையே உள்ள உறவை எதிர்மறையாகப் பாதிக்கும்.*

*பெண் குழந்தைகள் என்ற முறையில், சமூகப் பாலினம் சார்ந்த பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வோடு இருப்பது நல்லதுதான். ஆனால் அது மட்டுமே போதாது. முதலில் தன்னிடமிருந்து துவங்கி, அந்தச் சூழலை மாற்ற முயற்சி எடுப்பதும் முக்கியம். அதாவது, அதிகாரத்தைப் பயன்படுத்தி முடிவெடுக்கும் திறனை மேம்படுத்திக்கொள்வது பற்றியும், குடும்பத்திலும், சமூகத்திலும் அவர்களுடைய பாத்திரங்களையும் பொறுப்புகளையும் எப்படி மேம்படுத்திக் கொள்வது என்பது பற்றியும் யோசிக்க வேண்டும்.*

*உறவுகளை வரையறுப்பதிலும், முடிவுகள் எடுப்பதிலும் பொதுவாக நான்கு வகையான அதிகாரங்கள் செயல்படுகின்றன. இது வளரிளம் பருவப் பெண்களுக்கும் பெரிதும் பொருந்தும்.*

### மக்கள் மீது அதிகாரம் :

*நம்மைச் சுற்றியுள்ளோர் மீது நாம் அதிகாரம் செலுத்துகின்றோம். ஏனெனில், அவர்களுக்கு கிடைக்காத ஆதார வளங்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வாய்ப்புகளும், நமக்குக் கிடைக்கின்றன. **உதாரணத்திற்கு,** ஒருவரின் தந்தை அதிகாரம் உடையவராக இருக்கின்றார். ஏனெனில், அவரது வருவாய் மூலம் வளங்களை அளிப்பவராக இருக்கிறார்.*

### மக்கள் ஒரு அமைப்பின் கீழ் அதிகாரம் :

*நாம் ஒருவரை எல்லா அதிகாரமும் உடையவராக அங்கீகரிக்கும்போது, அவரது சார்பில் வேறொருவர் அதிகாரம் செலுத்தலாம். **உதாரணத்திற்கு**, ஒரு தாய்க்குப் பிரியமான மகன், தன் சகோதரியை மோசமாக வம்புக்கு இழுக்கலாம். சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் அமைப்புகள் மூலமும் நாம் அதிகாரத்தைப் பெறலாம். **உதாரணத்திற்கு,** புகுந்த வீட்டினர், பெரியவர்கள், மதத் தலைவர்கள் ஆகியோருக்கு மரியாதை செலுத்த வேண்டியுள்ளது.*

### சம அதிகாரம் :

இந்த அதிகாரம், எல்லா உறுப்பினர்களாலும் எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் ஒருவருக்கொருவர்இடையேயானபுரிதல்மூலம்பெறப்படுகின்றது. **உதாரணத்திற்கு,** கூட்டுறவு சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உடன் பணிபுரிவோர், சில சமயங்களில் முற்போக்கான குடும்பங்களிலிருந்தும் இந்த அதிகாரம் கிடைக்கலாம்.

### சுய அதிகாரம் :

இது சுயமாகப் பெறப்பட்டது. இது பொதுவாக, விதிகளையும், பரம்பரை பழக்க வழக்கங்களையும் உடைத்தெறிந்து மாற்றத்திற்காக செயல்படும் வளரிளம் பருவ ஆண்களிடமும், பெண்களிடமும் காணப்படுகின்றது. தங்கள் மகள்களின் உயர் கல்விக்கு ஆதரவளிக்கும் பெற்றோர்களிடமும் இது காணப்படுகின்றது.

இந்த அதிகாரங்களின் அடிப்படையில் நம்முடைய உறவுகளை மறு சீரமைக்கவும், விரும்பித் தேர்ந்தெடுக்கவும் நமக்கு அதிகாரம் இருக்கின்றது.

நம்முடைய பாலின அடையாளம், நமக்கு சமுதாயத்தினுள் எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பதை விளக்குகின்றது. அது கல்வி, ஆரோக்கியம், தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பெறுவதற்குரிய உரிமையையும், வாய்ப்புகளையும் பாதிக்கின்றது. பொதுவாக சமூகத்தினால் ஆண்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாலின அடையாளங்களால், அவர்கள் அதிக அளவில் ஆதார வளங்களை அடைய முடிகிறது. அதனால், அவர்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கின்றது. சமமான கல்வி, வேலைவாய்ப்புகளை ஊக்குவித்தால் பெண்களும் அதிக அதிகாரத்தை அடைய முடியும்.



# கட்டகம் – 2

# திருமணம் மற்றும் உறவுகளின் அர்த்தம் பற்றி புரிந்து கொள்ளுதல்

# அமர்வு – 5

## குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல்

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில், மனித உரிமைகள், குழந்தைகளின் உரிமைகள், பாகுபாட்டிற்கெதிராகப் பெண்களின் உரிமைகள் போன்றவற்றை பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.*

- *குழந்தைத் திருமணத்தின் மூலம் குழந்தைகளின் உரிமைகள் மீறப்படுவது பற்றியும், குழந்தைத் திருமணச் சட்டம் - 2006இல் உள்ள விதிகளைப் பற்றியும் தெரிந்துகொள்வார்கள்.*

**நேரம் :** *90 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், சட்டங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பான தகவல் புத்தகப் பிரதிகள், மாதிரி சம்பவங்களின் பிரதிகள், இணைப்பு – 1 : சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரதிகள்.*

**செயல்படுத்தும் விதம்:**

**செயல் 1**

**மனித உரிமைகள்**

- *மனித உரிமைகளைப் பற்றி விளக்குவதற்காக, பயிற்றுநர்* ***இணைப்பு - 1இல்*** *உள்ள சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை நகல் எடுத்து பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும்.*

- *பங்கேற்பாளர்கள் அதை படிக்கும்பொழுது ஏற்படும் சந்தேகங்களுக்கு பயிற்றுநர் விளக்கம் கூற வேண்டும்.*

- *மேலும்* ***கருத்துத்தாள் - 1இல்*** *உள்ள கருத்துகளை விளக்கிக் கூறவேண்டும்.*

**செயல் 2**

## குழந்தைத் திருமணத்தினால் மீறப்படும் மனித உரிமைகள்

- பங்கேற்பாளர்களை ஆறு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.

- ஆண் பங்கேற்பாளர்களில் ஒரு பகுதியினரை இரண்டு குழுக்களாக உருவாக்க வேண்டும். மீதமுள்ள நான்கு குழுக்களில் ஆண்களும், பெண்களும் கலந்து இருக்குமாறு பிரிக்க வேண்டும்.

- ஆண் பங்கேற்பாளர்கள் உள்ள இரண்டு குழுக்களுக்கும் **பயிற்சித்தாள் - 1இல்** உள்ள **மாதிரி கதை 1 -யும், மாதிரி கதை 2 யும்** ஒவ்வொரு குழுவுக்கு ஒன்று வீதம் கொடுக்க வேண்டும்.

- மற்ற நான்கு குழுக்களுக்கும் **பயிற்சித்தாள் - 1இல்** மீதமுள்ள மாதிரிக் கதைகளை குழுவிற்கு ஒன்றாகக் கொடுத்து கலந்துரையாடச் சொல்ல வேண்டும்.

- ஒவ்வொரு குழுவிலும், மாதிரிக் கதைகளின் **கீழ் கொடுக்கப்பட்டுள்ள** கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடச் சொல்ல வேண்டும்.

- பிறகு முதலிரண்டு சம்பவங்கள் கொடுக்கப்பட்ட ஆண்கள் குழுக்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மாதிரி சம்பவத்தைப் பொது அமர்வில் வாசித்து, குழுவில் கருத்துக்களைப் பகிர வேண்டும்.

- முதலிரண்டு குழுக்களும் கருத்துக்களைப் பகிரும் பொழுது, **பயிற்சித்தாள் - 2இல்** உள்ளது போல் அட்டவணையை கரும்பலகையில் வரைந்து ஒவ்வொரு வரிசையிலும், பத்தியிலும் உள்ளவைகளைப் பற்றி பங்கேற்பாளர்பாளரிடமிருந்து பதிலைப் பெற வேண்டும். வரிசைகள் பல்வேறு மனித உரிமைகளைக் குறிப்பிடுகின்றன. பத்திகள் குழந்தைத் திருமணத்தால் இந்த உரிமைகளில் ஏற்படும் தாக்கத்தைக் குறிக்கின்றன.

- பங்கேற்பாளர்களிடமிருந்து, சில எதிர்பார்க்கப்பட்ட பதில்கள் **பயிற்சித்தாள் - 2இல்** கொடுக்கப்பட்டுள்ளன. இதில் விட்டுப் போன கருத்துக்களும் வரும்படியாக பங்கேற்பாளர்களிடம் தேவையான கேள்விகள் கேட்டு அனைத்து கருத்துக்களும் வருவதை பயிற்றுநர் உறுதி செய்ய வேண்டும் .

- பின்னர் மீதமுள்ள நான்கு குழுக்களும் ஒவ்வொரு குழுவாக தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மாதிரி சம்பவத்தைப் பொது அமர்வில் வாசித்து, குழுவில் கருத்துக்களைப் பகிர வேண்டும். அவர்களுடைய கருத்துகளை **பயிற்சித்தாள் - 3இல்** உள்ளபடி அட்டவணையில் தொகுத்து எழுத வேண்டும் .

- ஆறு குழுக்களும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்த பின்னர், பயிற்றுநர் கருத்துத் தாளில் உள்ள கருத்துக்களையும் இணைத்துக்கூறி குழந்தைத் திருமணத்தால் வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கை எப்படி எல்லா அம்சங்களிலும் பாதிக்கப்படுகிறது என்பதை விளக்க வேண்டும்.

**பயிற்சித் தாள் - 1**

## ஆண்கள் குழுவுக்கானது

**மாதிரிச் சம்பவம் - 1**

*வீட்டின் வறுமை காரணமாக படிப்பை பாதியில் விட்டு விட்டு பதினேழு வயதிலேயே வெளியூருக்கு வேலைக்கு போய்விட்டான் குமார். ஊருக்கு வரும்போதெல்லாம் தன்னுடன் படித்தவர்கள் விளையாடுவதையும் ஒன்றாக சினிமாவிற்கு போவது தெருவோரத்தில் அரட்டை அடிப்பதையும் பார்க்க அவனுக்கு ஏக்கமாக இருக்கும். ஓரிரண்டு முறை அவர்களோடு போய் பேச முயன்றான். ஆனால், காதல் , காலேஜ், கட் அடித்து விட்டு சினிமாவிற்கு போவது, ஊரில் உள்ள பெண்கள் பற்றி பேசுவது, மேலே படிப்பது, நல்ல வேலைக்குப் போவது போன்று அவர்கள் பேசுகின்ற விஷயங்களில் எல்லாம் அவனால் பெரிதாகப் பங்கேற்க முடியவில்லை. இந்த முறை பாட்டிக்கு உடல்நிலை சரியில்லையென்று ஊருக்கு வந்த பொழுது, சாவதற்குள் அவன் கல்யாணத்தை செய்யவேண்டும் என்று பாட்டி பிடிவாதமாக நின்றாள். முகூர்த்த நாள் அடுத்த வாரத்திலேயே இருக்கிறது என்று திருமணத்தையும் முடித்து விட்டார்கள். முதலில் ஒரு பெண்ணுடன் இருப்பது பற்றி மகிழ்ச்சியாக இருந்தாலும் வேலை பார்க்கும் ஊரில் மனைவியுடன் ஒரு குடும்பச் செலவு, அம்மாவிற்கு வீட்டுச் செலவுக்கு என பணம் கொடுக்க குமார் திணறுகிறான்.*

***உங்கள் குழுவில் கீழ்காண்பனவற்றை கலந்துரையாட வேண்டும்.***

1. *இந்தக் கதையில் எந்த உரிமைகள் மீறப்பட்டன? எவ்வாறு?*
2. *இந்த உரிமை மீறலினால் அந்த வளரிளம் பருவ ஆணுக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?*

**மாதிரிச் சம்பவம் - 2**

*இருபத்து இரண்டு வயது செல்வம் தன் நண்பர்களின் தூண்டுதலால் அவன் தெருவில் உள்ள பள்ளியில் படிக்கும் கவிதா என்ற பெண்ணிடம் தன்னை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகிறான். கவிதாவிற்கு அவனை பிடிக்கும் என்றாலும் + 2 முடித்து விட்டு திருமணம் செய்யலாம் என்கிறாள். செல்வம் ஒப்புக் கொள்ளாததோடு, திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றால், வேறு பெண்ணைத் திருமணம் செய்வேன் என்று பயமுறுத்துகிறான். அவனை இழந்து விடுவோமோ என்ற பயத்தில் கவிதா திருமணத்திற்கு சம்மதிக்கிறாள். ஒரு வருடத்திலேயே குழந்தை பிறக்கிறது. ஆனால் சில நாட்களிலேயே இறந்துவிடுகிறது.*

*செல்வம் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறான், நோய்க்குக் காரணம் எச்ஐவி எனத் தெரியவருகிறது, இரண்டு வருடத்திற்கு முன், முன்பின் தெரியாத ஒரு பெரிய வயது*

பெண்ணுடன் உறவு கொண்டது தான் காரணம் என்று புரிகிறது. மனைவியின் பிரசவச் செலவு, குழந்தையின் மரணம், வேலைக்கு அடிக்கடி லீவ் போட்டதால் வேலை இழப்பு, வீட்டு செலவுக்குப் பணம் கொடுக்க முடியாதது என அனைத்தையும் சுமக்க முடியாமல் திணறுகிறான் செல்வம். மன உளைச்சலுக்குள்ளாகி குடிப்பழக்கத்திற்கு ஆளாகிறான்.

**உங்கள் குழுவில் கீழ்காண்பனவற்றை கலந்துரையாட வேண்டும்**

1. இந்தக் கதையில் இருவருமே எந்த உரிமைகளை இழந்தனர்? எவ்வாறு?

2. இதனால் அந்த வளரிளம் பருவப் பெண்ணுக்கும், ஆணுக்கும் ஏற்பட்ட தாக்கம் என்ன?

## ஆண், பெண் குழுவுக்கானது

## ஆரோக்கியம் மற்றும் குழந்தைத் திருமணம்.

### மாதிரிச் சம்பவம் - 3

15 வயதுடைய மீனா ஒரு கிராமத்தில் வாழ்கிறாள். அவள் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறாள். ஒரு நாள் அவளுடைய அண்டை வீட்டார், மீனாவை தங்களுடைய அக்கா பையனுக்கு திருமணம் செய்வதற்காக, மீனாவின் அப்பாவை அணுகினர். அவர்கள் அக்கா பையன், ஒரு செங்கல் சூளையில் வேலை கிடைக்கும்போது வேலை செய்துகொண்டிருந்தான். மீனாவிற்கு திருமணத்தில் விருப்பமேஇல்லை. ஆனால் அவள் தந்தையோ, பெற்ற கடமையை முடிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தார். இறுதியில் ஒரே மாதத்தில் அவளுடைய திருமணத்தை முடித்துவிட்டார்.

ஒரு வருடத்திற்குப் பின், அவளுக்கு 16 வயது இருக்கும்போது மீனா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கர்ப்பக் காலத்தில் அவளுக்கு சத்தான உணவோ உடல்நல பராமரிப்போ கிடைக்கவில்லை. முக்கால்வாசி நேரம், அவளுடைய கணவன் வேலைக்காக வெளியூர் செல்வான். அவன் வீட்டிற்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தாலும், அவளுக்கு ஒழுங்காகப் பணம் தருவதில்லை. அவளுக்குப் பிரசவம் மிகவும் கடினமாக இருந்தது. மிகவும் பலவீனமாகவும் அடிக்கடி உடல்நலம் சரியில்லாமலும் இருந்தாள். ஆயினும் எடை குறைவாகவும், ஊட்டச்சத்து குறைபாடுடனும் குழந்தை பிறந்தது.

சில மாதங்களுக்குள்ளாகவே மீனாவிற்கு அடிக்கடி காய்ச்சல் வந்தது. உடலில் தடிப்புகளும், அடிக்கடி சோர்வும் ஏற்பட்டன. கழுத்தைச் சுற்றி வீக்கமும் ஏற்பட்டது. ஒரு மருத்துவரை அணுகியபோது அவர் ரத்தப் பரிசோதனைக்குப் பரிந்துரைத்தார். அந்த பரிசோதனையில் அவளுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவளுடைய புகுந்த வீட்டாருக்கு இது தெரிந்த பின் அவளுடைய நடத்தையே காரணம் என்று குற்றம் சாட்டி குழந்தையுடன் அவளை விரட்டிவிட்டனர். அந்தக் குழந்தையும் அடிக்கடி உடல் நலமின்றி இருந்தது. அவள் அவளுடைய பெற்றோர்களிடம் சென்றபோது அவர்களும் அவளைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

**உங்கள் குழுவில் கீழ்க்காண்பனவற்றை கலந்துரையாட வேண்டும்**

1. இந்தக் கதையில் எந்த உரிமைகள் மீறப்பட்டன? எவ்வாறு?

2. இந்த உரிமை மீறலினால் அந்த வளரிளம் பருவப் பெண்ணுக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?

## விருப்பத் தெரிவு செய்வதற்குரிய உரிமையும் குழந்தைத் திருமணமும்.

### மாதிரிச் சம்பவம் - 4

ரமா ஒரு நகரத்தின் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வந்தாள். ஒவ்வொரு வருடமும் அவள் பள்ளியில் நன்றாகவே படித்து வந்தாள். அவள் ஒன்பதாம் வகுப்பிற்குச் சென்றபின் அவளுடைய தந்தை அவளுடைய தாயின் விருப்பத்திற்கு மாறாக ரமாவிற்கு ஒரு செல்போனை வாங்கிக் கொடுத்தார். ரமா செல்போனை பயன்படுத்தி ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் உள்ள தன் நண்பர்களுடன் அரட்டை அடிக்கத் தொடங்கினாள். அவள் தன் நண்பர்களுடன் சுதந்திரமாக இருப்பது அவள் தந்தைக்குப் பிடிக்காமல் போக ஆரம்பித்தது.

ஒரு நாள், அவள் தன் பெற்றோர் அவளுக்காக வரன் தேடுவதை அறிந்தாள். அவள், அவளுடைய பெற்றோரிடம் திருமணம் செய்து கொள்வதற்குப் பதிலாக படிப்பைத் தொடர விரும்புவதாகக் கூறினாள். ஆனால் அவளுடைய தந்தை, அவள் தங்கள் ஜாதியில்லாத பையனுடன் தொடர்பில் இருப்பதாக நினைத்தார். அதனால், அவர் தேர்ந்தெடுத்த பையனை ரமா திருமணம் செய்துகொள்ள வேண்டுமென, அவள் "நலத்தை விரும்பும் தந்தையாக" நிர்ப்பந்தித்தார்.

அடுத்த நாள், பள்ளிக்குச் செல்லும் வழியில் அவளுடைய நண்பனான ரவியை சந்தித்து வீட்டில் நடந்து கொண்டிருப்பதைப் பற்றிக் கூறினாள். ரமாவும், ரவியும் அன்று பள்ளிக்குச் செல்லாமல் அருகிலுள்ள பூங்காவிற்கு ஒன்றாகச் சென்று அவளுடைய பிரச்சினைகளுக்குரிய தீர்வைப் பற்றி பேசினர். திரும்பும் வழியில் ரமாவின் தந்தையை சந்தித்தனர். ரமாவை ரவியுடன் பார்த்தவுடன் அவர் மிகவும் கோபப்பட்டார்.

ரமா அன்று வீடு திரும்பவில்லை. ரமாவின் தந்தை தவறான குற்றச்சாட்டு என்று தெரிந்தும் உள்ளூர் காவல் நிலையத்தில் தன் பெண் கடத்தப்பட்டாள் என்று புகார் செய்தார். பின்னர் ரமா அவளுடைய தோழன் ரவியைத் திருமணம் செய்துகொண்டு அவனுடைய

பெற்றோரின் ஒப்புதலுடன் அவர்களுடைய வீட்டில் வாழ்வதாகக் கேள்விப்பட்டார். கோபத்தில் அவர், அவருடைய ஊரிலுள்ள சில அதிகாரம் படைத்த நபர்களுடன் ரமாவைச் சந்தித்தார். ரவியையும் அடித்துவிட்டார். ரமாவின் தந்தை ரமாவைத் தன்னோடு வீட்டிற்கு வரும்படி வற்புறுத்தினார். ஆனால் அவள் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக காவல் நிலையத்திற்கே சென்று தான் கடத்தப்படவில்லை என்றும், தானே ரவியைத் திருமணம் செய்து கொள்ள விரும்பித் தேர்வு செய்ததாகவும் கூறினாள்.

**கீழ்க்காண்பனவற்றை குறித்து உங்கள் குழுவில் கலந்துரை வேண்டும்.**

1. இந்த சம்பவத்தில் மீறப்பட்ட உரிமைகள் எவை? எவ்வாறு?
2. இந்த உரிமை மீறல்களினால், அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?

## கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குழந்தைத் திருமணம்.

### மாதிரிச் சம்பவம் - 5

ஷ்ரேயா ஒரு வறுமையான குடும்பத்திலிருந்து வந்தவள். மிகுந்த புத்திசாலியாக இருந்தாள். பள்ளியிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றாள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக்குச் சென்றனர். சிறப்பு பயிற்சி வகுப்புக்கும் சென்றனர்.

அவள் ஒன்பதாம் வகுப்பிற்கு வந்தபின், 15 வயதிலேயே, அவளுடைய பெற்றோர் ஒரு தையல்காரருடன் அவளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தனர். திருமணத்திற்குப் பின் அவள் படிப்பைத் தொடர ஆசைப்பட்டாள். ஆனால் அனுமதிக்கப்படவில்லை. அடுத்த மூன்று வருடங்களில் 2 குழந்தைகளுக்குத் தாயானாள். மெதுவாக அவளுடைய கணவனின் வியாபாரமும் நலிவடையத் தொடங்கியது. குழந்தைகளுக்கு உணவளிக்க ஏதாவது ஒரு வழியில் சம்பாதிக்கும்படி அவளுடைய கணவனால் தொடர்ச்சியாகச் சித்திரவதை செய்யப்பட்டாள்.

அவளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அருகிலுள்ள அங்கன்வாடியில் காலியாக இருந்த ஒரு வேலைக்கு விண்ணப்பித்தாள். ஆனால், குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்ததால் அவளுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை.

**உங்கள் குழுவில் கீழ்க்காண்பனவற்றைப் பற்றி கலந்துரையாட வேண்டும்.**

1. எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எவ்வாறு?
2. இந்த உரிமை மீறல்களினால் அந்தப் பெண்ணின் மேல் ஏற்பட்ட தாக்கம் என்ன?
3. ஷ்ரேயா 10 - வது வகுப்பு வரை படிப்பை முடித்திருந்தால் அது அவளுடைய வாழ்க்கையில் என்ன மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கும்?

**மாதிரிச் சம்பவம் - 6**

*கிராமத்தில் வசிக்கும் 15 வயதுப் பெண் ராதா. தன் உயிர்தோழி மினி, சிறப்பு பயிற்சி வகுப்பிலிருந்து வீட்டிற்கு திரும்பி வரும் வழியில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள் என்பதைக் கேட்டு ராதா மிகவும் வருத்தம் அடைந்தாள். இத்தகைய நிகழ்வு தன் பெண்ணிற்கும் ஏற்படக்கூடாதென ராதாவின் தந்தை உடனடியாக அவளுக்கு, அவளைவிட 14 வயது மூத்தவருடன் திருமணம் செய்து வைத்து விட்டார். ராதா மேற்கொண்டு படித்து கணினி இயக்குபவராக வேலைக்கு செல்லவேண்டும் என்று விருப்பப்பட்டாலும், விருப்பமின்றி திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள். மினியைப் போன்று அவளுக்கும் நடந்தால், சமுதாயத்தை எதிர்கொள்வது கேவலமாக இருக்குமென்றும், தாங்கள் தற்கொலை செய்துகொள்வோம் என்றும் அவளுடைய பெற்றோர் மிரட்டி அவளைப் பணிய வைத்தனர்.*

*திருமணமான முதல்நாளே, அவளுடைய மாமனார், மாமியார், அவள் கறுப்பாக இருப்பதற்கு நஷ்டஈடாக 30,000 ரூபாய் கொண்டுவரும்படி கூறினர். அத்துடன் அவள் காலையிலிருந்து இரவு வரை எல்லா வீட்டு வேலைகளையும் செய்தாள். எல்லோரும் தூங்கியபின் தான், அவள் தூங்க அனுமதிக்கப்பட்டாள். வரதட்சணை பற்றி அவள் புகுந்த வீட்டார் கேட்ட சமயங்களில் ராதா கொண்டுவர முடியாததால் பட்டினி போடப்பட்டாள். அவள் கணவன் அவளைவிட வயதில் மூத்தவனாக இருந்ததால், அவளால், அவனிடம் பேசமுடியவில்லை. அவள் தொடர்ந்து கணவனிடம் பணம் கேட்டபோதும், அவனால் அது மறுக்கப்பட்டது. அக்கறையில்லாத கணவன், ஆனால் அவன் விரும்பும்போதெல்லாம் உடலுறவு கொள்வதென்பது அவளுக்கு சங்கடமாக இருந்தது.*

*ராதாவின் கணவன் அவன் வேலை செய்யும் பணியிடத்தில் வேறொரு பெண்ணுடன் தொடர்பிலிருப்பது தெரியவரும் வரை, ராதா தன் போராட்டத்தைப் பற்றி, பெற்றோர்களிடம் தெரிவிக்கவில்லை.*

**கீழ்க்காண்பனவற்றை குறித்து உங்கள் குழுவில் கலந்துரையாட வேண்டும்.**

1. *எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எவ்வாறு?*

2. *இந்த உரிமை மீறல்களினால் அந்தப் பெண்ணிற்கு ஏற்படும் தாக்கம் என்ன?*

## பயிற்சித்தாள் - 2

| மனித உரிமைகள் | குழந்தைத் திருமணம் மூலம் மீறப்பட்ட ஆண் குழந்தைகளின் உரிமைகள் |
|---|---|
| உயிர் வாழ்வதற்கும், சுதந்திரத்துக்கும், தனிப்பட்ட பாதுகாப்புக்குமான உரிமைகள் | • குடும்பப் பொறுப்புகள் அதிகமானதால் விளையாடும் நேரமும் ஓய்வு நேரமும் குறைகிறது.<br>• வாழ்க்கை முழுவதும் உள்ள ஒரு உறவினை மிகவும் சீக்கிரமாகவே ஏற்றுக்கொள்ளுதல். |
| நியாயமான விசாரணை | • விழிப்புணர்வின்மை மற்றும் தவறான சமூகக் கோட்பாடு,<br>• இவை எளிதில் வயப்படும் தன்மைக்கு வழிகோலுவதால், பெண்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு பாதுகாப்பு சட்டங்களின்கீழ் தண்டனை பெற ஆண்களுக்கு வாய்ப்பிருக்கின்றது |
| பேச்சுரிமை | • சமூக வளர்ப்பால் / கட்டுப்பாட்டால் இள வயதில் திருமணம் அல்லது பெற்றோர் ஆவது பற்றி வாயைத் திறந்து பேச முடியாத நிலை. |
| உடல் ஆரோக்கியம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத்தரம் | • விருப்பமின்றி கருவிலேயே பாகுபாட்டுடன் பாலினத்தை தெரிவு செய்வதில் பங்கேற்பு,<br>• சுகாதாரமற்ற பாலியல் பழக்கங்களால் வீட்டை விட்டு புலம் பெயர்ந்த தொழிலாளிகள் எச்.ஐ.வி. / எய்ட்ஸால் பாதிக்கப்படுவது.<br>• இளவயது கர்ப்பக் காலத்தில் தனக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் போதுமான சத்துணவும் மருத்துவ வசதிகளும் கிடைக்காத நிலை.<br>• சிசு மரணம், குழந்தைகளுக்கு சத்துணவுக் குறைபாடு ஆகியவை, குழந்தைத் திருமணத்தினால் உருவாகும் வறுமை சுழற்சியால் ஏற்படுகின்றன. |

### ஆண்கள் தெரிந்திருக்க வேண்டிய , குழந்தைத் திருமணத்துடன் தொடர்புடைய பிற சட்டங்கள்

- இந்திய தண்டனைச் சட்டம், சட்டப்பிரிவு 376 –இல் பாலியல் பலாத்காரத்திற்கான தண்டனையை விரிவாக கூறுகிறது.
- இளஞ்சிறார் நீதிச் சட்டம் - 2000. இது 2006இல் திருத்தப்பட்டது.
- பாலியல் குற்றங்களுக்கு எதிராக குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் போக்சோ - 2012.

- இந்திய தண்டனைச் சட்டத்தின், ***498A*** பிரிவின் கீழ் குடும்ப வன்முறைக்கு எதிராக கிரிமினல் புகார் தாக்கல் செய்யலாம்.

- கரு வளருமுன் மற்றும் கருவில் பாலினத்தைக் கண்டறியும் பரிசோதனைகளை தடைசெய்யும் சட்டம் - 1994.

**பயிற்சித்தாள் - 3**

| **கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குழந்தைத் திருமணம்** | **ஆரோக்கியம் மற்றும் குழந்தைத் திருமணம்** | **வன்முறை மற்றும் குழந்தைத் திருமணமும்** | **விருப்பத் தெரிவு செய்வதற்கான உரிமை மற்றும் குழந்தைத் திருமணமும்** |
|---|---|---|---|
| ***மீறப்படும் உரிமைகள்*** | | | |
| • கல்வி பெறுவதற்கான உரிமை<br><br>• வேலை வாய்ப்பிற்கான உரிமை | • துணையைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை<br><br>• பாலியல் சுகாதாரம் மற்றும் இனப் பெருக்கம் பற்றி தேர்வு செய்வதற்குரிய உரிமை<br><br>• சத்துணவு மற்றும் பராமரிப்பிற்கான உரிமை<br><br>• உடல்நலம், சிகிச்சை மற்றும் பராமரிப்பு பெறுவதற்கான உரிமை<br><br>• பொருளாதாரப் பாதுகாப்பிற்கான உரிமை<br><br>• வீட்டைவிட்டு வெளியே சென்று வேலை செய்தல் மற்றும் சம்பாதிப்பதற்கான உரிமை | • மகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான பெற்றோரின் உரிமை<br><br>• பாலியல் சுகாதாரம் மற்றும் இனப்பெருக்கம் பற்றி தேர்வு செய்வதற்கான உரிமை<br><br>• வரதட்சணை கேட்பதை எதிர்ப்பதற்கான உரிமை | • குழந்தைகளுக்கு அவர்கள் கற்ற கல்வியை பயன்படுத்துவது எப்படி என்று கற்றுத் தரும் மதிப்பீடுகளுக்கான உரிமை<br><br>• தெரியாத ஒருவரை திருமணம் செய்து கொள்ள பெண் வற்புறுத்தப் பட்டால் அது பற்றி முடிவெடுப் பதற்கான உரிமை |

| தாக்கங்கள் | | | |
|---|---|---|---|
| • படிப்பை இடையில் விட்டு விடுதல்<br>• மோசமான பொருளாதார சூழல்<br>• குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்ள ஏற்படும் கஷ்டங்கள்<br>• பெண்ணிற்கும் அவள் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்துக் குறைபாடு<br>• பெண் குழந்தையால் எதிர்கொள்ளப்படும் வன்முறை<br>• தாய் எதிர்கொள்ளும் வன்முறையினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு<br>• முழுமையடையாத கல்வியினால் மிகக் குறைந்த வேலை வாய்ப்பு<br>• இயலாமை அதிகரிப்பு | • கணவனால் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டாலும் பெண்ணின் மீது குற்றம் சாட்டப்படுதல்<br>• மோசமான சுகாதார நிலைமை<br>• பெண்ணின் கையில் ஒரு பொருளாதார வளமும்இல்லை<br>• மாமனார், மாமியாரால் வீட்டை விட்டு துரத்தப்பட்ட பின் பிறந்த வீட்டிலும் புகலிடம் கிடைக்காத நிலையில் புகலிடம் இல்லாதிருத்தல் | • உடலளவில், மற்றும் மனதளவில் அளவில் பேரதிர்ச்சியும் வேதனையும் ஏற்படுதல்<br>• பாலியல் சுரண்டல் / துன்புறுத்தல்<br>• திருமணமான தம்பதிகளிடையே ஒப்புதல்இல்லாமல் கட்டாயப்படுத்தி பாலியல் உறவு கொள்வது (அதுவும் பாலியல் பலாத்காரமாகவே கருதப்படுகிறது) | • படிப்பை இடையில் விட்டுவிடுதல்<br>• எந்தத் திறனும் கற்கப்படவில்லை<br>• பொருளாதார வளங்களைப் பெற குறைந்த அளவே வாய்ப்பு<br>• வன்முறைக்கு ஆளாகக் கூடிய பலவீனமான நிலை<br>• தன் உடம்பின் மீதும், இனப்பெருக்க சுகாதாரத்தின் மீதும் தனக்கு கட்டுப்பாடில்லாத நிலை<br>• பாலின வரையறைகளால் வறுமை சுழற்சியில் மாட்டிக் கொள்ளுதல் |

## செயல் 3

### சட்டங்கள் , திட்டங்கள் அறிதல்

- இளந்தென்றல் கருத்துப் பெட்டகத்தில் உள்ள குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான சட்டங்கள் - திட்டங்கள் என்ற தகவல் புத்தகத்தின் பிரதிகளை பங்கேற்பாளர்களுக்கு கொடுக்க வேண்டும்.
- இந்தத் தகவல் புத்தகத்தினை குழுவாக அமர்ந்து புத்தகத்தினை ஒவ்வொரு சட்டம் மற்றும் திட்டங்களாக வாசித்து குழுவில் கலந்துரையாடி புரிந்து கொள்ளச் சொல்ல வேண்டும்.
- பின்னர் பயிற்றுநர், **பயிற்சித்தாள் - 4**இல் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.
- குழந்தைத் திருமண தடைச் சட்டம் - 2006 பற்றி விளக்கிக் கூறி அது எவ்வாறு குழந்தைத் திருமணத்தை தடுக்கிறது என்றும், அதை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு என்பது பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூற வேண்டும்.

**பயிற்சித் தாள் - 4**

- *குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ள சட்ட விதிகளின்படி எவர் தண்டிக்கப்படலாம்?*
- *குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் கீழ் வலுக்கட்டாயமான / இளவயது / குழந்தைத் திருமணங்கள் எவ்வாறு ரத்து செய்யப்படலாம்?*
- *குழந்தைத் திருமணத்தைத் தடுக்க யாரெல்லாம் உதவலாம்? யாரையெல்லாம் தொடர்பு கொள்ளலாம்? அல்லது யாரிடமெல்லாம் புகார் அளிக்கலாம்?*
- *குழந்தைத் திருமணத்தைத் தடுக்க உதவும், அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்கள் எவை?*

# கருத்துத் தாள்

## குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல்

**செயல் - *1* க்கு பிறகு சொல்ல வேண்டிய கருத்துக்கள்**

*1948, டிசம்பர் - 10இல் நடந்த ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது. இதனால் இந்தியர்களாகிய நமக்கு சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் உறுதிப்படுத்தியுள்ள உரிமைகள் அனைத்தும் உரித்தானவை ஆகும்.*

*வளரிளம் பருவ குழந்தைகளுக்கு, அவர்களுக்குரிய எல்லா உரிமைகளைப் பற்றியும் அறிதலும் புரிதலும் இருந்தால், அது அவர்களின் தன்னுரிமை மேம்பாட்டிற்கு வழிவகுக்கும். அவர்களுக்கு கண்ணியமான, அர்த்தமுள்ள வாழ்வு கிடைப்பதை உறுதிப்படுத்தும்.*

**கீழே குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளின் அர்த்தத்தைப் பற்றி நமக்கு தெரிந்திருக்க வேண்டும்.**

- *உயிர் வாழ்வதற்கான, சுதந்திரத்துக்கான, தனிமனித பாதுகாப்புக்கான உரிமைகள்*
- *சித்திரவதையிலிருந்து விடுதலை*
- *நியாயமான விசாரணை*
- *பேச்சுரிமை*
- *மத சுதந்திரம்*
- *ஆரோக்கியம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத் தரம்*

**செயல் -*2, 3* ற்கு பிறகு பயன்படுத்த வேண்டிய கருத்துத் தாள்**

**குழந்தைத் திருமணம் வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்கள் மேல் ஏற்படுத்தும் தாக்கம் :**

*குழந்தைத் திருமணத்தில், சம்பந்தப்பட்ட ஆண்கள், இக்குற்றத்தில் தானாகவே ஈடுபட்டவராகவோ அல்லது ஈடுபடுத்தப்பட்டவராகவோ இருக்கலாம். (திருமணத்திற்கு கட்டாயப்படுத்தப்பட்டு இருக்கலாம் அல்லது விருப்பமின்றி ஒத்துக்கொண்டிருக்கலாம்) குழந்தைத் திருமணத்துடன் சம்பந்தப்பட்ட முறைகேடுகளான - பாலியல் ரீதியாக மோசமாக நடத்தப்படுதல், குடும்ப வன்முறை, வரதட்சணை, கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தை தெரிவு செய்வது போன்றவற்றின்*

விளைவுகளால் அந்த ஆண்களும் பாதிக்கப்படுகின்றனர்.

மோசமான சமூக வளர்ப்பு, சட்டங்கள் பற்றிய அறியாமையால் வரக்கூடிய சட்டரீதியான பிரச்சினைகள், படிப்பை இடையிலேயே விட்டுவிடுதல், ஒரு குடும்பத்தைக் காப்பாற்றவேண்டி இளம் வயதிலேயே வாழ்வாதாரத்தைத் தேடவேண்டிய சூழல், போதுமான வாழ்க்கைத்தரம்இல்லாமை போன்ற மோசமான பின்விளைவுகளால் அந்த ஆண்களும் துன்பப்பட வேண்டியுள்ளது.

மாதிரி சம்பவங்கள் பற்றிய குழு கலந்துரையாடல்களுக்குப் பிறகு, பல்வேறு பிரச்சினைகளும் விவாதங்களும் வெளிவரலாம். பெற்றோர், பெண் குழந்தைகளுக்கு உதவும் வகையில் பாதுகாப்பும் ஆதரவும் அளிக்காமல், அவர்களை துன்பப்பட வைப்பவர்களாக இருக்கும் கதைகளைக் கேட்க நேரிடலாம். செல்போன் பயன்பாட்டை பெற்றோர்கள் தடை செய்வது பற்றி குழுவில் பங்கேற்பாளர்கள் முறையிடலாம். ஆனால் வளரிளம் பருவத்தினர் அவர்கள் வாழ்க்கையை மோசமாக பாதிக்கக்கூடிய விவரமற்ற முடிவுகளை எடுப்பதற்கு இவைகள் எல்லாம் ஒரு காரணமாக இருப்பதுபோல் தோன்றினாலும் உண்மை அதுவல்ல. இவைகளை நமக்குக் முறையாகக் கையாளத் தெரியாததுதான் என்று பயிற்றுநர் எடுத்துக் கூற வேண்டும்.

திருமண வாழ்க்கையில் ஏற்படும் பாலியல் பலாத்காரம் பற்றி தெளிவான சட்டம்இல்லை. ஆனால் குழந்தைத் திருமணம் தொடர்பாகச் சட்டம் இருக்கின்றது. ஆயினும் திருமணம் என்பது வளரிளம் பருவப் பெண்களுக்குப் பாதுகாப்பை அளிக்கவில்லை. சமூகத்தின் பங்கும், பெண்களைப் பற்றி உருவாக்கப்பட்டுள்ள மதிப்பீடும் அதற்கு உதவுபவையாகஇல்லை.

**கீழ்க்காணும் சில பிரச்சினைகள் அல்லது அனைத்து பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடவேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.**

- குழந்தைத் திருமணம் என்பது ஒருவரின் மனித உரிமையைப் பறிக்கும் செயலாகும்.
- குழந்தைத் திருமணம், வளரிளம் பருவ பெண்ணிற்குரிய கல்வி கற்கும் உரிமையைத் தடுக்கிறது. கல்விப் பெறுவதற்கான உரிமை மிகவும் இன்றியமையாத மனித உரிமை. இது சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் (UDHR) 26-வது விதியில் கூறப்பட்டுள்ளது.
- குழந்தைத் திருமணம் வளரிளம் பருவப் பெண்களின் ஆரோக்கியத்திற்கான உரிமையைத் தடுக்கிறது. இது ஒரு அடிப்படை உரிமையாகும். சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் (UDHR) விதி 25-இல் இது குறிப்பிடப்பட்டுள்ளது.
- விதி 23 - வேலைக்கான உரிமை, விதி 22 - சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை, இவை இரண்டும் குழந்தைத் திருமணத்தால் தடைபடுகின்றன.

- *வயது குறைந்த ஆண் / பெண் இருவருக்கும் மன முதிர்ச்சிஇல்லாத காரணத்தால், திருமணத்தின் பொறுப்புகளையும், விளைவுகளையும் பற்றித் தெரிவதில்லை. அதனால் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் வரும் 16-வது விதியில் குறிப்பிட்டுள்ளபடி சுதந்திரமாக, முழு சம்மதத்துடன், திருமணம் செய்வதற்குரிய உரிமை தடைபடுகின்றது.*

- *மனித உரிமைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. குழந்தைத் திருமணம், மேற்கண்ட உரிமைகளை மீறுவது மட்டுமன்றி, மற்ற எல்லா மனித உரிமைகளையும் மீறுகின்றது.*

- *குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின் கீழ், ஆண்களுக்கு 21 வயதுக்கு குறைவாகவும், பெண்களுக்கு 18 வயதுக்கு குறைவாகவும் இருந்தால் அந்தத் திருமணம் குழந்தைத் திருமணமாகக் கருதப்படும்.*

## குழந்தைத் திருமண தடைச் சட்டம் - 2006 இன் முக்கிய அம்சங்கள்

***சட்டத்தின் முக்கியமான அம்சங்கள் :***

- *இந்தச் சட்டத்தின் கீழ், ஆண்களுக்கு 21 வயதுக்கு குறைவாகவும், பெண்களுக்கு 18 வயதுக்கு குறைவாகவும் இருந்தால் அந்தத் திருமணம் குழந்தைத் திருமணமாகக் கருதப்படும்.*

- *அனைத்துச் சட்ட மீறலும் பிணையில் வரமுடியாத குற்றமாகும்.*

- *சட்டத்தை மீறுபவர்களுக்கு இரண்டு வருடங்கள் கடுங்காவல் தண்டனை அல்லது 1,00,000 - ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும். மணமகன் மற்றும் மணமகன் குடும்பத்தாருக்கு அல்லது திருமணத்தை ஏற்பாடு செய்ய உதவிய நபருக்குத் தண்டனை அளிக்கப்படும்.*

- *குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்களுக்கு இந்த மாதிரியான திருமணத்தைத் தடை செய்யவும், சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவும் உரிமை உள்ளது.*

- *“பெண்களுக்கு எதிரான எல்லா வகையான பாகுபாடுகளையும் நீக்கும் உடன்படிக்கை”யும் (CEDAW) முக்கியமானது. அதில் கீழ்க்காணும் அம்சங்கள் அடங்கியுள்ளன.*

    - *சட்டத்தில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை என்ற கோட்பாடு.*

    - *பாகுபாடு காட்டும் எல்லாவிதமான சட்டங்களையும் ஒழித்து பெண்களுக்கு எதிராக பாகுபாட்டினைத் தடை செய்யும் பொருத்தமான சட்டங்களை இயற்றுதல்.*

- பெண்களின் பாகுபாட்டிற்கெதிராக, தீர்ப்பாயங்களையும் பொது நிறுவனங்களையும் நிறுவி அவர்களுக்குச் சிறந்த பாதுகாப்பளித்தல்.

- பெண்களுக்கு எதிராக தனி நபர்கள், அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் காட்டும் பாகுபாட்டை நீக்குதல்.

**பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் உள்ள உரிமைகளைப் பற்றியும், அவர்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவு கட்ட அரசுகள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறும் 30 விதிகள் CEDAW-வில் இருக்கின்றன. எல்லா விதிகளும் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும், விரைவான புரிதலுக்காக, முக்கியமான சில விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

**விதி 1** – பெண் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான பாகுபாடு என்ன என்பது பற்றி விளக்குதல்

**விதி 3** – அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் அளித்தல்

**விதி 5** – ஒரே மாதிரியான பாலின பாத்திர வரையறைகள்

**விதி 6** – கடத்தல் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல்

**விதி 10** – கல்வி

**விதி 11** – வேலைவாய்ப்பு

**விதி 12** – சுகாதாரம்

**விதி 16** – திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை

இதே போல், குழந்தைகள் உரிமைகளுக்கான பிரகடனமானது (CRC), குடியுரிமை, அரசியல், பொருளாதாரம், சமூகம், சுகாதாரம், மற்றும் கலாச்சார உரிமைகளை குழந்தைகளுக்கு உறுதிப்படுத்துகிறது. **பிரகடனத்தில் உள்ள உரிமைகளை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்.**

**உரிமை:** குறிப்பிட்ட விஷயங்களை அல்லது சேவைகளை வைத்திருப்பதற்கு, பெறுவதற்கு அல்லது எளிதாய் அணுகுவதற்குரிய உரிமை (உதாரணத்திற்கு – பெயர், நாட்டுரிமை, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, ஓய்வு, விளையாட்டு, ஆதரவற்றவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கவனிப்பு)

**பாதுகாப்பு :** தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்பாடுகளிலில் இருந்தும், நடைமுறைகளிலில் இருந்தும் பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை (உதாரணம் – பெற்றோரிடமிருந்து

*பிரிக்கப்படுதல், போரில் ஈடுபடுத்தப்படுதல், பொருளாதார ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் சுரண்டப்படுதல், உடலளவிலும் மனதளவிலும் மோசமாக நடத்தப்படுதல்)*

**பங்கேற்பு :** தன் வாழ்வைப் பாதிக்கும் முடிவுகளைப் பற்றி குழந்தைகள் கருத்து சொல்வதற்குரிய உரிமை. குழந்தைகளின் திறன்கள் மேம்படும்போது, பெரியவர்கள் ஆவதற்கு தயாராகும்போது, சமூகத்தில் உள்ள செயல்பாடுகளில் ஈடுபட அதிக வாய்ப்புகள் கிடைக்கவேண்டும். *(உதாரணம்: பேச்சு, கருத்து, கலாச்சார, மத, மொழி சுதந்திரத்துக்கான உரிமைகள்)*

குழந்தைகள் உரிமைகளுக்கான பிரகடனத்தில் *(CRC) 54* விதிகள் இருக்கின்றன. இது குழந்தைகள் நாள்தோறும் எல்லா நாடுகளிலும் எதிர்கொள்ளும் புறக்கணிப்பு, மோசமாக நடத்தப்படுதலுக்கு எதிராக சில கொள்கைகளை நிறுவியுள்ளது. முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டியது குழந்தைதகளின் நலனே பிரதானமானது என்பதுதான். அனைத்து விதிகளும் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும், **எளிதாகப் புரிந்துகொள்ள முக்கியமான சில விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

**விதி** *1* – குழந்தை என்பதற்குரிய விளக்கம். *18* வயதிற்கு கீழ் இருக்கும் அனைவரும். *18* வயது முடியும் வரை குழந்தைகளுக்கான எல்லா சட்டங்களும் பொருந்தும்

**விதி** *2* – பாகுபாடின்மை

**விதி** *5* – பெற்றோர், குடும்பம், சமூகத்துக்குரிய உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

**விதி** *6* – வாழ்வு, உயிர் பிழைத்திருத்தல் மற்றும் வளர்ச்சி

**விதி** *19* – மோசமாக நடத்தப்படுதல், புறக்கணிக்கப்படுதல் (குடும்பத்திலும், மற்ற கவனிப்பிலும்)

**விதி** *24* – உடல்நலப் பராமரிப்பு

**விதி** *26* – சமூகப் பாதுகாப்பு

**விதி** *28* – கல்வி

**விதி** *32* – பொருளாதாரச் சுரண்டல்

**விதி** *34* – பாலியல் சுரண்டல்

**விதி** *3* – கடத்தல், விற்றல், கடத்தப்பட்டு விற்கப்படுதல்

**விதி** *40* – இளஞ்சிறார் நீதி

பலவிதமான உரிமைகளைப் பற்றி வளரிளம் பருவத்தினர் அறிந்து, புரிந்திருந்தால், அது அவர்களின் தன்னுரிமை மேம்பாட்டிற்கும், மதிப்புமிக்க அர்த்தமுள்ள வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கும் வழி வகுக்கும். நாம் அனைவரும், வளரிளம் பருவப் பெண்கள், பெண்கள் வளரிளம் பருவ ஆண்கள், ஆண்கள் என்ற முறையிலும் வாழ்க்கையில் பொருளாதார வளங்களைப் பெற வேண்டிய தேவையுள்ளது. இது ஒரு முழுமையான வாழ்க்கை வாழ வழி வகுக்கும். இன்றைய சமூகத்தில், இந்த ஆதார வளங்கள், பொதுவாக, பெண் குழந்தைகளையும், பெண்களையும் விட ஆண் குழந்தைகளுக்கும் பிற ஆண்களுக்குமே அதிகம் கிடைக்கின்றன. இது மாற்றப்படவேண்டும். அப்போதுதான் ஒரு நல்ல வாழ்க்கை வாழ, பெண் குழந்தைகளும், பெண்களும் சமமான வாய்ப்புகளைப் பெறமுடியும்.

# அமர்வு – 6

## ஆரோக்கியமான மண வாழ்வில் வாழ்க்கைத் துணைகளின் பங்கினையும், பொறுப்புகளையும் தெரிந்து கொள்ளுதல்

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில் திருமணம் , குடும்பம் பற்றி தற்போது நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் பற்றியும் பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்*
- *ஆரோக்கியமான மணவாழ்வில் வாழ்க்கைத் துணைகளின் உரிமைகளையும் பொறுப்புகளையும் பற்றி பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள் .*

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம்:**

### செயல் - 1

- *பங்கேற்பாளர்களிடம், திருமணம் என்ற வார்த்தையை கேட்டவுடன் மனதிற்குள் என்ன தோன்றுகிறது என்று கேட்க வேண்டும்.*
- *ஆண் பங்கேற்பாளர்கள் மற்றும் பெண் பங்கேற்பாளர்களை தனித்தனியே கேட்கவேண்டும். எந்த வித உணர்வாகவும் இருக்கலாம். மகிழ்ச்சி, கவலை, பயம், போன்று எதுவாக இருந்தாலும் கூறவும் என்று பயிற்றுநர் கூற வேண்டும்.*
- *பின்னர் கரும்பலகையில் / வெள்ளைப் பலகையில் ,* ***"நம்முடைய சமூகத்தில் ஆண்களுக்கு திருமணம் என்பதன் அர்த்தம்"****,* ***"நம்முடைய சமூகத்தில் பெண்களுக்கு திருமணம் என்பதன் அர்த்தம்"*** *என்று இரு பகுதியாகப் பிரித்துக்கொண்டு ஆண்கள் கூறும் கருத்தை ஆண்கள் பகுதியிலும் பெண்கள் கூறும் கருத்தைப் பெண்கள் பகுதியிலும் பயிற்றுநர் எழுதவேண்டும். (மாதிரி அட்டவணை பயிற்சித்தாள் – 1இல் கொடுக்கப்பட்டிருக்கிறது)*
- *பங்கேற்பாளர்கள் கூறும் கருத்துக்களை எழுதி முடித்தவுடன், அதில் நேர்மறை எண்ணங்கள் கொண்டது எது, எதிர்மறை எண்ணங்கள் கொண்டது எது என்று பிரித்து எழுத வேண்டும்.*

- *பின்னர் திருமணத்தினால் யாருக்கு நேர்மறை கருத்துக்கள் அதிகம் உள்ளது? யாருக்கு எதிர்மறை கருத்துக்கள் உள்ளது? ஆணுக்கா? பெண்ணுக்கா? என்று பயிற்றுநர் கேட்டு கலந்துரையாட வேண்டும்.*

- *கண்டிப்பாக எதிர்மறை கருத்துக்கள் பெண்களுக்குதான் அதிகம் இருக்கும். அதை வைத்து கலந்துரையாடலை நடத்த வேண்டும்.*

- ***கருத்துத்தாளில்கொடுக்கப்பட்டுள்ளகருத்துக்கள்பயிற்றுநருக்குகலந்துரையாடுவதற்கு எளிதாக இருக்கும்.***

**செயல் - 2**

- *குடும்பம் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள ஒரு நாளின் பல்வேறு நேரங்களில், பெண்கள், ஆண்கள் இருவராலும் செய்யப்படும் முக்கியமான வேலைகளைப் பற்றி புரிந்து கொள்வது அவசியம் என்று கூறி, அதை விரிவாக விளங்கிக் கொள்வதற்கான பயிற்சி இது என்று செயல்பாட்டை தொடங்குவதற்கு முன் சொல்ல வேண்டும் .*

- *பங்கேற்பாளர்களை, ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்த இரு குழுக்களாகப் பயிற்றுநர் பிரிக்கவேண்டும்.*

- *ஒரு குழுவிடம், குடும்பத்தில் 1 நாள் முழுமைக்கும் (24 மணி நேரம்) ஆண்கள் என்னென்ன பணிகள் செய்கிறார்கள் என்றும், இன்னொரு குழுவிடம் பெண்கள் என்னென்ன பணிகள் செய்கிறார்கள் என்றும் எழுதச் சொல்ல வேண்டும்.*

- *காலை 4.00 மணி முதல் அடுத்த நாள் காலை 4.00 மணி வரை செய்யும் பணிகள் என்று பயிற்றுநர் கூறவேண்டும். இரண்டு குழுக்களும் விடியற்காலை, காலை, மதியம், மாலை, இரவு என்று பிரித்து நன்றாகக் கலந்துரையாடி எழுதவேண்டும் என்று பயிற்றுநர் கூற வேண்டும்.*

- *பின்னர் பொது அமர்வில் பகிரச் சொல்லவேண்டும். கரும்பலகையில் ஆண்களால் செய்யப்படும் வேலைகள், பெண்களால் செய்யப்படும் வேலைகள் என்று **பயிற்சித்தாள் 2 - இல்** உள்ளது போல் பயிற்றுநர் எழுதி, கலந்துரையாட வேண்டும்.*

- ***பயிற்சித்தாள் 3 - இல்** கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும். மேலும் **கருத்துத்தாள் 2 - இல்** கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களைக் கூறி பயிற்றுநர் இந்த அமர்வை முடிக்க வேண்டும்.*

**பயிற்சித்தாள் - 1**

| எண்ணங்கள் | நமது சமூகத்தில் ஆண்களைப் பொறுத்தவரை திருமணம் என்பதன் அர்த்தம் | நமது சமூகத்தில் பெண்களைப் பொறுத்தவரை திருமணம் என்பதன் அர்த்தம் |
|---|---|---|
| நேர்மறை எண்ணங்கள் | • ஒரு குடும்பம்<br>• திருமணச் சடங்குகள்<br>• விருந்துகள்<br>• துணிகள் | • ஒரு குடும்பம்<br>• திருமண சடங்குகள்<br>• விருந்துகள், துணிகள் |
| எதிர்மறை எண்ணங்கள் | • வரதட்சணை<br>• கூடுதலான குடும்பப் பொறுப்புகள் மற்றும் அவற்றை எதிர்கொள்வதற்குரிய சிரமம்<br>• கல்வியைப் பாதியில் விட்டு விடுதல் | • நேசித்தவர்களையும் இளம் வயது நண்பர்களையும் விட்டு தெரியாத இடத்திற்குச் செல்வது<br>• கல்வியைப் பாதியில் கைவிடுதல்<br>• வறுமையான பொருளாதார சூழல் மற்றும் வாழ்வாதாரம் இன்மை ஆகியவை ஏற்படலாம்<br>• குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்வதில் சிரமம்<br>• பெண்ணுக்கும் அவள் குழந்தைகளுக்கும் உள்ள சத்துணவுக் குறைபாடு<br>• வரதட்சணை உட்பட வளரிளம் பருவப் பெண்கள் எதிர் கொள்ளும் வன்முறைகள்<br>• கணவரிடமிருந்து எச்.ஐ.வி. தொற்று நோயைப் பெற்று, அதற்காகப் பழி சுமத்தப்படும் நிலை<br>• மோசமான ஆரோக்கிய நிலை – மிக இளவயது கர்ப்பம் அல்லது அடிக்கடி கர்ப்பம், மாமனார், மாமியார்,புகுந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டால், பிறந்த வீட்டிலும் புகலிடம் கிடைக்காத நிலை.<br>• பாலியல் சுரண்டல்/ துன்புறுத்தல் அல்லது எளிதில் வன்முறைக்கு ஆளாகும் பலவீனமான நிலை. தனது உடல் மற்றும் மகப்பேறு சுகாதாரத்தின் மீது கட்டுப்பாடு இல்லாத நிலை. |

## பயிற்சித் தாள் - 2

| நேரம் | ஆண்களால் செய்யப்படும் வேலைகள் | பெண்களால் செய்யப்படும் வேலைகள் |
|---|---|---|
| விடியற் காலை | • உறக்கம்,<br>• செய்தித்தாள் வாசித்தல்,<br>• தேநீர் அருந்துதல்,<br>• வேலைக்குச் செல்ல ஆயத்தமாதல் | • சமைத்தல்,<br>• கணவரையும் குழந்தைகளையும் வேலைக்கும், பள்ளிக்கும் செல்ல தயார் செய்தல் |
| காலை | • வேலைக்கோ வாழ்வாதாரத்திற்கோ செல்லுதல் | • கைக்குழந்தைகளை, குழந்தைகளை, குடும்பத்திலுள்ள வயதானவர்களை பார்த்துக் கொள்ளுதல், வீட்டைச் சுத்தப்படுத்துதல், வேலைக்குச் செல்லுதல் |
| மதியம் | • உறங்குதல் அல்லது வேலையில் இருத்தல் | • வேலையில் இருத்தல்<br>• துணிகள் துவைத்தல் அல்லது வீட்டைச் சுத்தப்படுத்துதல் |
| மாலை/இரவு | • நண்பர்களுடனோ, அண்டை வீட்டாருடனோ உரையாடுதல்,<br>• தேநீர் அல்லது மது அருந்துதல், தொலைக்காட்சி பார்த்தல் | • குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல்,<br>• சமைத்தல், படுக்கை விரித்தல் அல்லது மறுநாளைக்கு தயார் செய்தல் |

## பயிற்சித் தாள் - 3

- *பெண்கள், ஆண்கள் இருவரும் நாள்தோறும் செய்யும் வேலைகளில் ஏதாவது வேறுபாடுகள் இருக்கின்றதா? அவ்வாறு இருப்பின் முக்கியமான வேறுபாடுகள் என்ன?*
- *எல்லா தினசரி வேலைகளையும், கணவன், மனைவி இருவராலும் செய்ய முடியுமா?*
- *ஒரு திருமண வாழ்க்கையில் இருவரின் சமமான பங்களிப்பினால் ஏற்படும் நன்மைகள் என்ன?*
- *நீங்கள் ஏற்கனவே இருக்கும் விதிமுறைகளை உடைத்து, உங்கள் வாழ்க்கைத் துணைக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்ய முடியுமா? நீங்கள் இந்த வேலைகளையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக நினைக்கிறீர்களா?*
- *திருமண வாழ்க்கையில் ஆணும், பெண்ணும் ஏற்றுக்கொள்ளும் பாத்திர வரையறைகள் மாறவேண்டும் என்று நினைக்கிறீர்களா? ஏன்? எவ்வாறு?*

## கருத்துத் தாள் - 1

### ஆரோக்கியமான மண வாழ்வில் வாழ்க்கைத் துணைகளின் பங்கினையும், பொறுப்புகளையும் தெரிந்து கொள்ளுதல் :

பங்கேற்பாளர்களிடம் திருமணத்தைப் பற்றி பயத்தை ஏற்படுத்துவது நமது நோக்கம் அல்ல என்றும், மாறாக திருமணத்திற்கு அவர்களைத் தயார்படுத்துவதே நோக்கம் என்றும் தெளிவுபடுத்த வேண்டும். திருமணத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்து கொண்டால்தான், தகவல்கள் கிடைக்கப்பெற்று தெளிவான முடிவுகள் எடுக்க முடியும்.

இந்த பயிற்சியானது அவர்களுக்கு காரண காரியங்களை விளக்கும் திறனை அளிக்கும். மேலும், பெற்றோர், அவர்களை இளம் வயதில் திருமணம் செய்து கொள்ள நிர்பந்திக்கும்போது அவர்களுடனும் பிற குடும்ப உறுப்பினர்களுடனும் தன் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லி உடன்பாடு காண்பதற்குத் தேவையான பேச்சுத் திறனையும் அளிக்கும் எனக் கூற வேண்டும்.

நம் சமூகத்தில் ஒரு பெண் பருவமெய்தியவுடன் அவள் திருமணத்திற்கு தயாராகி விட்டாள் என்று நினைக்கிறார்கள். இதேபோல் ஓர் ஆண் வேலை பார்க்க ஆரம்பித்து விட்டால் அவன் திருமணத்திற்குத் தயார் என்று நினைக்கிறார்கள். திருமணம் என்பது இருவர் இணைந்து ஒரே கூரையின்கீழ் வாழ்வது. இது விளையாட்டான விஷயமல்ல. சிறு வயதில் இருவரும் வெவ்வேறு வீடுகளில் வளர்க்கப்பட்டதால் அவர்களுடைய ரசனைகளும் அன்றாடப் பழக்க வழக்கங்களும் வேறு வேறாக இருக்கலாம் . இதில் யாருக்கு அதிகாரம் அதிகம் இருக்கிறதோஅவர்கள் தங்களுடைய பழக்கம்தான் சரி என்று இன்னொருவர் மீது திணிக்கப் பார்க்கலாம்.

நம் சமூக அமைப்பில் பெண்கள் பெரும்பாலும் திருமணம் முடித்து கணவன் வீட்டிற்கு செல்கிறார்கள். கணவன் குடும்பத்தாருடன் வசித்தாலும், தனியாக இருந்தாலும் இந்திய சமூக அமைப்பு ஆண் மைய சமூக அமைப்பாகவே பெரும்பாலும் உள்ளது. இருவரும் சேர்ந்து அவர்களுக்கான ஒரு குடும்பத்தை வடிவமைக்கக்கூடிய பல்வேறு விஷயங்களில் அவர்கள் ஒத்துப்போனால்தான் அந்தக் குடும்பமும் அவர்கள் வளர்க்கும் குழந்தைகளும் நல்ல மதிப்பீடுகளோடு வளரமுடியும். திருமணம் என்றால் ஆண் பெண் இருவரும் சேர்ந்து ஒரு குடும்பத்தை கட்டமைப்பது ஆகும்.

ஒரு நூறு வருடங்களுக்கு முன்னர் இருந்த குடும்ப அமைப்பில் ஆணுக்கு என்று சில பொறுப்புகளும் பெண்ணுக்கு என்று சில பொறுப்புகளும் இருந்தன. ஆனால் இன்றைக்கு குழந்தை பெறுவது, தாய்ப்பால் தருவது தவிர, ஆண் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் பெண்ணால் செய்ய முடியும், செய்யலாம் என்று பல விஷயங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது. வீட்டில் மட்டுமே உழன்று கொண்டிருந்த பெண் வெளிவேலைக்குப் போய் வெளியுலகத்தை சந்திக்க தயாராகிவிட்டாள் என்றால் வெளியுலகத்தில் புழங்கிக் கொண்டிருந்த ஆண் வீடு சார்ந்த விஷயங்களில் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லவா? அப்படி தயார்படுத்திக்கொள்ளாத போது,

இதனால் குடும்பத்தில் நிறைய சச்சரவுகள் வரும் .

ஆண் பெண் இருவரும் சமம் என்பது வெறும் சட்டத்தால் சொல்லப்படுவது மட்டுமல்ல. குடும்பங்களில் உண்மையாகவே ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமாக ஒருவர் மேல் மற்றவருக்கு மரியாதை, பரஸ்பர நம்பிக்கை அன்பும் இருந்தால்தான் திருமணம் நிலைக்கும்.

## திருமணமான இருவருக்கும் பல்வேறு விஷயங்களில் இருவரும் சமம் என்ற உணர்வு இருக்க வேண்டும்

- குடும்பத்தின் பொருளாதார விஷயங்கள் பற்றி சேர்ந்து பேசுவது
- உடல்நலப் பராமரிப்பு மற்றும் சத்துணவுக்கான சம வாய்ப்பு
- கர்ப்பத்தடை வழிகளைப் பின்பற்றுவது, குழந்தைகள் பெற்றுக்கொள்வது, வீட்டுச் செலவுகள் போன்றவற்றைப் பற்றி சமமாக முடிவெடுப்பது.
- குடும்ப வன்முறை, பாலியல் ரீதியாக மோசமாக நடத்துதல் என அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் சமமான பாதுகாப்பு
- வீட்டு வேலைகளிலும், பொறுப்புகளிலும் சம பங்கு
- திறன்களை வளர்த்துக் கொள்வதில் சம வாய்ப்பு
- வீட்டு வேலைகள் உட்பட்ட அனைத்து வேலைகளையும் பகிர்வது

## கருத்து த்தாள் - 2

*பெண் என்றால் இப்படி இருக்க வேண்டும் என்கிற சமூகப் பாலின வரையறைப்படி ஆண்களும் பெண்களும் வளர்க்கப்பட்டிருப்பதால் வீட்டு வேலை என்பது ஆண்களுக்கு இன்னும் ஒரு கடினமான விஷயமாகவே படுகிறது.*

*திருமணத்திற்குப் பின் ஆணும், பெண்ணும் குறிப்பிட்ட சில பாத்திரங்களையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கின்றது. நாமும் தொடர்ந்து அதைத்தான் செய்கின்றோம். கவனமாக ஆராய்ந்தால் குடும்பத்தின் / வீட்டின் எல்லா வேலைகளையும் ஆண், பெண் இருவராலும் செய்ய முடியும்.(குழந்தைத் பெற்றுக்கொள்வதைத் தவிர – அது பெண்களால்தான் செய்ய முடியும்.)*

### பொதுவாக பெண்கள் மூன்று வகையான வேலைகளைச் செய்கின்றனர் :

- ***மறு உற்பத்தி*** *(குடும்பத்தை, குழந்தைகளைப் பராமரித்தல், குடும்பத்துக்குள் ஆரோக்கியத்தைப் பராமரித்தல்)*
- ***உற்பத்தி*** *(வீட்டின் வெளியே சம்பாதித்தல், அல்லது குடும்ப வியாபாரம் / தொழிலில் வேலைபார்த்தல்)*
- ***ஓய்வு மற்றும் சமூகம்*** *(விருந்தாளிகளைக் கவனித்தல், கொண்டாட்டங்கள்/ பஞ்சாயத்துக் கூட்டங்கள்)*

*ஆனால், ஆண்கள் இரண்டு வகையான வேலைகளைத்தான் செய்கின்றனர்.* ***சம்பாதித்தல் மற்றும் வீட்டைவிட்டு வெளியே சமூகத்துடன் உரையாடுதல்.***

*ஆகையால் பெண்களுக்கு மூன்று மடங்கு வேலை உள்ளது.*

*பெண்கள் தற்போது பொருளாதாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போதிலும் ஆண்கள் வீட்டு வேலையில் இன்னும் பங்கேற்கவில்லை. ஆண்களும் குழந்தைகளை வளர்ப்பதில் பங்கேற்க வேண்டும் (கைக்குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுதல், துணிகளை மாற்றுதல், பள்ளிச் சீருடைகளை மாற்றுதல், வீட்டுப்பாடம் கற்பித்தல், உடல்நிலை சரியில்லாத குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல்). அவர்கள் உணர்வுகளை வழிநடத்துபவர்களாக இருத்தல், அவர்களுடைய பொழுதுபோக்குச் செயல்பாடுகள், ஈடுபாடுகள் பற்றி பேசுதல் முதலியன.*

*வேலைகளைப் பகிர்வது கணவன் மனைவிக்கிடையே நெருக்கத்தை ஏற்படுத்தும். அதுவே உண்மையான பந்தம். பெற்றோர் இருவரும் குழந்தை வளர்ப்புப் பொறுப்புகளை சமமாக ஏற்கும் குடும்பத்திலிருந்து வரும் பிள்ளைகள் மிகவும் தன்னம்பிக்கையுடன், அனைவரிடமும் கலந்துரையாடி பலதரப்பட்ட இடர்களைக் கையாளும் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள் என பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

எனவே, உங்களுடைய முந்தைய தலைமுறை திருமணத்தைப் பற்றி வைத்திருக்கக்கூடிய வரையறைகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பியுங்கள். ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலைப்பாட்டில் இருந்து செயல்பட ஆரம்பியுங்கள்.



# கட்டகம் – 3

# பாலினம் சார்ந்த வன்முறையை அகற்றுதல்

# அமர்வு – 7

## பொது இடத்தில் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களுக்கு முடிவு கட்டுதல்

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில் பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவது மனித உரிமை மீறல் என்று பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.*
- *வளரிளம் பருவ ஆண்களால் ஏற்படும் பாலியல் துன்புறுத்தலுக்கு என்ன காரணங்கள் என்பதைப் பங்கேற்பாளர்கள் அறிந்து கொள்வார்கள் .*
- *பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக உள்ள சட்டதிட்டங்கள் பற்றி பங்கேற்பாளர்கள் அறிந்து கொள்வார்கள்.*

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள்,*

*பாலியல் துன்புறுத்தல்கள் பற்றிய பிரதிகள், மாதிரிச் சம்பவங்களின் நகல்கள்.*

**செயல்படுத்தும் விதம் :**

- ***இணைப்பு** 2 – **இல்** உள்ள பொது இடத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன? என்ற செய்தியைப் பயிற்றுநர் நகல் எடுத்து, பங்கேற்பாளர்களுக்குக் கொடுத்துப் படிக்கச் சொல்லவேண்டும்.*
- *பங்கேற்பாளர்கள் படித்து முடித்தபின்னர் மூன்று குழுக்களாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும், **பயிற்சித்தாள் 1 – இல்** உள்ள ஒவ்வொரு மாதிரி சம்பவத்தையும் கொடுத்து, அதில் உள்ள கேள்விகளைக் குழுவில் கலந்துரையாடச் சொல்ல வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மாதிரி சம்பவத்தை பொது அமர்வில் வாசித்தபின் தாங்கள் கலந்துரையாடிய கருத்துக்களைப் பகிருமாறு கூற வேண்டும்.*
- *மூன்று குழுக்களும் பகிர்ந்த பின் பயிற்றுநர் **குறிப்பு 1 – இல்** உள்ள கேள்விகளைக் கேட்டு பங்கேற்பாளர்களைக் கலந்துரையாட ஊக்கப்படுத்த வேண்டும்.*
- *இறுதியில் கருத்துத் தாளில் உள்ளக் கருத்துக்களைக் கூறி பயிற்றுநர் அமர்வை முடிக்க வேண்டும்.*

## பயிற்சித் தாள் - 1

### மாதிரிச் சம்பவம் - 1

*கண்மணி 16 வயதுடையவள். அவள் அவளுடைய பெற்றோருடனும், மூன்று சகோதரிகளுடனும் கிராமத்தில் வசிக்கிறாள். சமீப காலமாக, அந்தப் பக்கத்தில் உள்ள வளரிளம் பருவ ஆண்கள் அவளை துன்புறுத்தல் செய்வதால் அவளுக்கு வீட்டை விட்டு வெளியே செல்வது என்பது கடினமாக உள்ளது. அந்த ஆண்கள் அவளை 'கண்மணி' 'கண்மணி' என்று கூப்பிட்டு விசில் அடிக்கின்றனர். அவளுடைய செல்போனில் நேரம் கெட்ட நேரத்தில் கூப்பிடுகின்றனர். பறக்கும் முத்தம் கொடுப்பது மாதிரியான ஆபாசமான செய்கைகளைக் காண்பிக்கின்றனர். அவள் பள்ளிக்குச் செல்ல பேருந்தில் ஏறும்போதும் வீட்டுக்குத் திரும்பும்போதும் பின் தொடர்ந்து வழி மறிக்கின்றனர். ஆபாசப் புத்தக அட்டைகளைத் தொலைவிலிருந்து காண்பிக்கின்றனர்.*

*ஒரு நாள் கண்மணியின் தந்தை அந்த வளரிளம் பருவ ஆண்கள் ஆபாசமாக சைகை செய்வதை பார்த்துவிடுகிறார். உடனடியாக கண்மணிக்கு ஒரு பாதுகாப்பான இடத்தில் திருமணம் செய்துவைக்க முடிவு செய்கிறார். அவசர அவசரமாக கண்மணிக்கு அவளைவிட அதிக வயதுள்ளவருடன் திருமணம் நடக்கிறது. அவள் பள்ளிப் படிப்பை நிறுத்தவேண்டியதாயிற்று. இரண்டு வருடத்திற்கு பிறகு பல தடவை கரு கலைந்த பிறகு தாயாகிறாள். அவள் உடலளவில் மிகுந்த பலவீனம் அடைந்துவிட்டாள். அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போவதற்கும், பணம் சம்பாதிக்க முடியாமல் போனதற்கும் கணவனால் அடிக்கப்பட்டு துன்புறுத்தப்படுகிறாள்.*

### குழுக் கலந்துரையாடலுக்கான கேள்விகள் :

1. *கண்மணியின் தற்போதைய நிலைக்குக் காரணம் யார்? ஏன்?*
2. *ஏன் அக்கம் பக்கத்தில் உள்ள வளரிளம் பருவ ஆண்கள், கண்மணியை இப்படி துன்புறுத்தினார்கள்? அது அவளுடைய தவறா?*
3. *கதையில் கண்மணியின் எந்தெந்த மனித உரிமைகள் மீறப்பட்டன?*
4. *உங்களுடைய சகோதரிகள், அத்தைகள் போன்ற நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் பொது இடத்தில் ஆண்களினால் இத்தகைய துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனரா?*

### மாதிரிச் சம்பவம் - 2

*கீதா ஒரு சின்ன பாக்டரியில் வேலை பார்த்து வந்தாள். அந்தத் தொழிற்பேட்டையில் கம்பெனிகளுக்கென்று தனித்தனியாக பாத்ரூம் கிடையாது கொஞ்சம் தள்ளிதான் பாத்ரூம் இருந்தது. ஒவ்வொரு முறை வெளியே போகும்போதும் மானேஜரிடம் சொல்லி விட்டுதான் போகவேண்டும்.*

*முன்பெல்லாம் ஒருநாளைக்கு இரண்டு தடவை பாத்ரூம் போய்விட்டு வருவாள். ஒரு நாள் பாக்டரியை விட்டு வீட்டிற்குக் கிளம்பும்போது கீதா கடைசியாக கிளம்ப நேர்ந்தது. அவளிடத்தில் இருந்த பொருட்களை ஒழுங்காக அடுக்கி விட்டு நிமிர்ந்தபோது, பின்னால் இருந்த மேனேஜர் இறுக்கமாகக் கட்டி அணைத்தார். விடுங்க சார், விடுங்க சார் என்று கத்தியபடி அணைப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு ஓடிவந்துவிட்டாள். இப்போதெல்லாம் பாத்ரூம் போக அனுமதி கேட்டால் மானேஜர் அனுமதி கொடுக்க மறுக்கிறார்.*

### குழுக் கலந்துரையாடலுக்கான கேள்விகள் :

1. *கீதா இந்தச் சம்பவத்தைப் பற்றி யாரிடம் போய் பேச வேண்டும்?*
2. *பணியிடங்களில் நிகழ்கின்ற பாலியல் வன்முறைக்கு எதிராக ஏதும் சட்டங்கள் உள்ளனவா?*
3. *கீதா பாத்ரூம் போகாமல் இருப்பது சரியா தவறா ?*
4. *பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காணலாம் ?*
5. *கீதா வேலையை விட்டுவிட வேண்டுமா ?*

#### மாதிரிச் சம்பவம் - 3

*15 வயது ராணி எப்போதும் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பாள். படிப்பது அவளுக்கு மிகவும் பிடிக்கும். தன் வகுப்பில் படிப்பிலும் விளையாட்டிலும் அவள்தான் முதலிடம். ஆனால் கடந்த ஒரு மாதமாக யாரிடமும் பேசாமல் மிகவும் சோகமாக இருக்கிறாள் ராணி. பரீட்சையிலும் மிக குறைந்த மதிப்பெண்கள் வாங்கினாள்.*

*கொஞ்ச நாட்களுக்கு முன், திடீரென்று ஒருநாள் பள்ளி முடிந்து வரும் வழியில் ஒரு ஆள் சைக்கிளில் பின்புறமாக வந்து அவள் மேல் வேண்டுமென்றே இடித்தான். அவள் நிலை தடுமாறி கீழே விழுந்தவுடன், அவனும் தடுமாறி விழுவது போல் அவள் மேல் விழுந்தான். விழும்போது அவளிடம் மோசமாக நடந்து கொண்டான். ஒரே வாரத்தில் இரண்டு முறை இப்படி செய்கிறான். அன்றிலிருந்து வெளியிடத்துக்குச் சென்றுவருவதற்கே ராணி மிகவும் பயமாக உணர்கிறாள். பள்ளியில் எல்லோருடனும் சேர்ந்து வரமுடியாதபடி நேர்கின்ற ஒவ்வொரு நாளும் அவளுக்கு மிக பயமாக இருக்கிறது. இதைப்பற்றி யாரிடம் சொல்வது என்று தெரியவில்லை.அப்பாவிடம் சொன்னால் படிப்பையே நிறுத்தி விடுவார். ஏற்கனவே கடந்த ஆறு மாதத்தில் அத்தை தன்னுடைய 26 வயது மகனுக்கு நாலு முறை பெண் கேட்டு வந்து விட்டாள்.*

## குழுக் கலந்துரையாடலுக்கான கேள்விகள் :

1. *ராணி இதுபற்றி யாரிடம் பேசலாம்?*

2. *அந்த ஆணின் இத்தகைய செய்கை, ராணியின் மனதை எப்படி பாதிக்கும்?*

3. *ராணியின் பிரச்சினைக்கு தீர்வுதான் என்ன?*

**பயிற்றுநர் குறிப்பு - 1**

- *பொது இடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன? உங்களால் உதாரணம் கொடுக்க முடியுமா?*
- *அது வளரிளம் பருவப் பெண்கள் மீதும் பிற பெண்கள் மீதும் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?*
- *ஏன் பெண்களுக்கு எதிராக ஆண்கள் பாலியல் துன்புறுத்தல்கள் செய்கின்றனர்?*
- *பாலியல் துன்புறுத்தல் தரும் ஆண்களுக்கு எதிர்மறை தாக்கம் ஏதாவது ஏற்படுகிறதா?*
- *வளரிளம் பருவ ஆண்கள் பெண்களுக்கிடையே பேச்சு பரிமாற்றத்திற்கான ஓர் ஆரோக்கியமான தளம் இருப்பது இந்தத் தொந்தரவை தடுக்க உதவுமா?*
- *பாலியல் தொந்தரவிற்கெதிராக நம் நாட்டில் உள்ள சட்ட திட்டங்கள் யாவை?*
- *பொது இடத்தில் பெண்களுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் ஏற்பட்டால் நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?*

# கருத்துத் தாள்

## பாலினம் சார்ந்த வன்முறையை அகற்றுதல் :

பாலியல் துன்புறுத்தல் என்பது, பொது இடத்தில் பெண்களிடம் ஆண்கள் விரும்பத்தகாதபாலியல்தொனியுடன்பேசுவதையோஅல்லதுநெருங்கமுற்படுவதையோ குறிக்கிறது. இது மிகப் பெரிய பிரச்சினையாகும். சாலையில் அல்லது பேருந்து, ரயில் போன்ற பொதுப் போக்குவரத்தில் துன்புறுத்தல் ஏற்படும்போது வளரிளம் பருவப் பெண்களுக்கும் மற்ற பெண்களுக்கும் இது ஒரு பெரிய அவமான உணர்வையும், மனதளவில் பெரும் சித்திரவதையையும் ஏற்படுத்தும்.

பாலியல் துன்புறுத்தல், தனி மனிதரால் அல்லது குழுவால், ஒரு பெண் மீதோ அல்லது பல பெண்கள் மீதோ நடத்தப்படலாம். சமுதாயத்தில் ஒத்துக்கொள்ளப்படாத வார்த்தைகளாகவோ அல்லது பாலியல் அர்த்தமுள்ள வாக்கியமாகவோ அவை இருக்கலாம். மேலும் அவர்களைத் தொடலாம். அல்லது இடித்துக்கொண்டு செல்லலாம். பின்தொடரலாம். அல்லது விரும்பத்தகாத வார்த்தைகளைக்கூறி அசௌகரியப்படுத்தலாம்.

## பொது இடத்தில் நிகழும் பிற பாலியல் துன்புறுத்தல்கள் :

- பாலியல் சார்ந்த வார்த்தைகள்
- உடலைத் தொடுதல், நெருங்க முற்படுதல்
- ஆபாசப் படங்களைக் காண்பித்தல்
- பாலியல் விருப்பத்துக்குச் சம்மதிக்க வற்புறுத்தல், கெஞ்சல்
- வேறு ஏதாவது விரும்பத்தகாத, பாலியல் சம்பந்தப்பட்ட வார்த்தைகளைப் பேசுதல் அல்லது வார்த்தைகள் அற்ற உடல்ரீதியான நடத்தைகளில் ஈடுபடுதல்
- பாலியல் துன்புறுத்தல் என்பது ஒரு பெண் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையை நேரடியாக அத்துமீறுவதாகும். அது வாழ்வதற்கான ஒரு பெண்ணின் அடிப்படை உரிமைக்கு எதிரானது. **குறிப்பாகக் கீழ்க்காணும் உரிமைகளை மீறுகிறது.**
  - ஒரு பெண்ணின் வாழ்க்கை, சுதந்திரம், சுய பாதுகாப்பிற்குரிய உரிமை
  - சித்தரவதையிலிருந்து மீள உரிமை
  - பேச்சு சுதந்திரத்துக்கான உரிமை
  - உடல்நலம், கல்வி, தேவையான வாழ்க்கைத் தரம் பெறுவதற்கான உரிமை.

இந்தியாவில், மனிதாபிமானமற்ற இந்த செயல்களுக்கும் பெண்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்குரிய உரிமை மீறப்படுவதற்கும் முக்கிய காரணம் சமுதாயத்தில் பெண்களை விட ஆண்களே உயர்ந்தவர்கள் என்ற ஆணாதிக்க எண்ணமே. ஆண்களின்பங்கும்பெண்களின்பங்கும்சமுதாயத்தில், அடக்குதல், அடங்கிப்போதல்என்ற கோணத்திலேயே பார்க்கப்படுகிறது. பெண்கள் அடங்கிப் போகவேண்டும், ஆண்களின் கட்டுப்பாட்டிலேயே, கண்காணிப்பிலேயே இருக்கவேண்டும் என்று நம்பப்படுகின்றது. இதைத் தவிர சில ஆண்கள், பெண்கள் மேல் அதிகாரம் செலுத்தி, சுரண்டி, எதிர் பாலினத்தவர்களின்மேல் தங்களுக்குள்ள பலத்தை நிரூபித்துக்கொள்கின்றனர். மேலும் இத்தகைய குற்றங்களுக்கு பொதுவாக, ஒரு பெண் தன்னை ஏற்க மறுத்துவிட்டதால் ஏற்படும் பழிவாங்கும் உணர்ச்சி, வெறுப்பு, ஆத்திரம் அல்லது அதிகாரத்தினால் தூண்டப்படும் வெறும் மகிழ்ச்சி முதலியவையும் வேறு காரணங்களாகும்.

மேலும் நம்முடைய சமுதாயம் வளரிளம் பருவ ஆண்களும், பெண்களும் ஆரோக்கியமாகப் பழகுவதை அனுமதிப்பதில்லை. இதனால், ஊடகமும், சினிமாவும் எதிர்பாலினத்தவரைப் பற்றி வெளிப்படுத்தும் தவறான கருத்துக்களையே வளரிளம் பருவ ஆண்கள் வளர்த்துக் கொள்கின்றனர். விரும்பத்தகாத முறையில் உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் கவனத்தை ஈர்ப்பதையே வளரிளம் பருவப் பெண்கள் விரும்புகின்றனர் என்று வளரிளம் பருவ ஆண்கள் அவர்களாகவே நினைத்துக் கொள்கின்றனர். மேலும் வளரிளம் பருவப் பெண்களின், மற்ற பெண்களின் கண்ணியத்தைப் பாதிக்கும் வகையில், அவர்களைக் குழுக்களாக கூடி கேலி செய்து விளையாடுவதற்கும் வளரிளம் பருவ ஆண்கள் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அது வளரிளம் பருவப் பெண்களின், பிற பெண்களின் கண்ணியத்தைப் பாதிக்கின்றது. சிறு வயதிலிருந்தே ஆரோக்கியமான பேச்சும், செயல்பாடுகளும் ஊக்குவிக்கப்பட்டால் தவறான கருத்துக்கள் நீக்கப்பட்டு, வளரிளம் பருவ ஆண்களும் பெண்களும் உண்மையான பிரச்சினைகளையும், தங்கள் நண்பர்களின் நடத்தைகளையும் புரிந்துகொள்வார்கள்.

சமூகத்தில் வளரிளம் பருவப் பெண்களுக்கும் மற்ற பெண்களுக்கும் எதிரான பாலியல் துன்புறுத்தல்களை வளரிளம் பருவ ஆண்களும், பிற ஆண்களும் எதிர்த்து நிற்கலாம்.

- அமைதியாக இருக்க வேண்டாம். மோசமாக நடத்துவதை எதிர்த்துப் பேச வேண்டும்.

- உங்களது சொந்த நடத்தையை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உங்களுடைய மனோபாவமும், செயல்பாடுகளும் பாலியல் ரீதியான எண்ணத்தையும் துன்புறுத்தல்களையும் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முயலுங்கள். அதை மாற்றுவதற்கு வேலை செய்ய ஆரம்பியுங்கள்.

- ஒரு முன் உதாரணமாகத் திகழ்ந்து பெண்களை மரியாதையுடன் நடத்துவதன் மூலம் மோசமாக நடத்துவதை தடுக்க வேண்டும்.

- ஊடகத்தில் வரும் ஆபாசப் படங்களை, பாலியல் துன்புறுத்தல் படங்களை எதிர்க்க வேண்டும்.

- பெண்களை மோசமாக நடத்துவதைத் தடுப்பது பற்றி மற்ற ஆண்களுடன் உரையாட வேண்டும்.

- பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராகப் போராடும் பெண்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். தங்களது பாதுகாப்பு குறித்த பெண் நண்பர்களின் அச்சங்கள், கவலைகள் ஆகியவற்றை கவனமாக கேட்டு அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

- பாலியல் துன்புறுத்தலை முடிவிற்கு கொண்டுவர ஆண்கள் பொறுப்பேற்பதை ஊக்குவிக்கும் சட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) 509, 294, 354, 292 ஆகிய விதிகள் பாலியல் குற்றங்களைக் கையாள்வதற்கு உரியவை. பாதிக்கப்பட்டோர் **கீழ்க்காணும் பிரிவுகளில் பலன் அடையலாம்.**

### இந்திய தண்டனைச் சட்டம் – விதி 294 :

ஒரு வளரிளம் பருவப் பெண்ணுக்கு அல்லது வேறு ஒரு பெண்ணுக்கு எதிராக ஒரு ஆண் ஆபாசமாக செய்கைகள் காண்பித்தாலோ, வார்த்தைகள் பேசினாலோ, பாடினாலோ மூன்று மாதம் சிறை தண்டனை விதிக்கப்படும்.

### இந்திய தண்டனைச் சட்டம் – விதி 292 :

ஆபாசப் படங்கள், புத்தகங்கள் அல்லது பத்திரிகைகளை ஒரு வளரிளம் பருவ பெண்ணுக்கோ, வேறு பெண்ணுக்கோ காண்பித்தால் முதல் தடவை குற்றம் செய்பவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனையுடன் ரூ. 2,000/- அபராதம் விதிக்கப்படும். அடிக்கடி இந்தக் குற்றத்தைச் செய்தால் 5 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.5,000 /- அபராதமும் விதிக்கப்படும்.

## *இந்திய தண்டனைச் சட்டம் - விதி 509 :*

*ஒரு பெண்ணின் தனி மனித சுதந்திரம் பாதிக்கும்படி அருவருப்பான உடல் சைகைகள், எதிர்மறை பேச்சுகள், ஏதாவது ஒரு ஆபாசமான பொருளைக் காண்பித்தல் என வளரிளம் பருவப் பெண்களுக்கு அல்லது வேறு பெண்களுக்கு எதிராக நடப்பவருக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.*

## *குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம் - 2013 :*

*இந்திய தண்டனைச் சட்டத்தில் சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. அதன்படி, பாலியல் துன்புறுத்தல் செய்வது **354A** விதியின்படி குற்றமாகக் கருதப்பட்டு, 3 வருட சிறைத் தண்டனையும் சில சமயங்களில் அபராதமும் விதிக்கப்படலாம். அந்தத் திருத்தச் சட்டம் மேலும் சில புதிய விதிகளைக் கொண்டுவந்துள்ளது. பெண்ணின் ஆடைகளை அவள் விருப்பமின்றி களைதல், பின் தொடருதல், அதிகாரத்தில் உள்ளவர் செய்யும் பாலியல் நடவடிக்கைகள் போன்றவை அனைத்தும் குற்றமே என இந்த விதிகள் குறிப்பிடுகின்றன.*

*பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களை (தடுத்தல், தடை செய்தல், தீர்வு காணுதல்) தடுக்கும் சட்டம் –2013, வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது.*

# அமர்வு – 8

## பாதுகாப்பான இடங்கள் பாதுகாப்பற்ற இடங்கள் :

### கற்றலின் நோக்கம் :

- *இந்த அமர்வின் இறுதியில்வளரிளம் பருவப் பெண்களும், ஆண்களும், பாதுகாப்பான, பாதுகாப்பற்ற இடங்களைப் பற்றி அறிந்துகொள்வார்கள்.*
- *மேலும் இவர்கள் பாதுகாப்பற்ற இடத்தை பாதுகாப்பான இடமாக மாற்ற பங்கேற்பாளர்களை கூட்டாக வேலை செய்வதற்கான ஊக்கத்தைப் பெற்றிருப்பார்கள்.*

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், வெள்ளைத் தாள்கள்.*

### செயல்படுத்தும் விதம் :

- *சென்ற அமர்வில் விவாதித்த பாலியல் துன்புறுத்தல்களையும், மோசமாக நடந்துகொள்வதையும் தடுக்கும் வழிகளைப் பற்றியும் பயிற்றுநர், நினைவுபடுத்தி இந்த அமர்வைத் தொடங்க வேண்டும்.*
- *பயிற்றுநர் **பயிற்சித்தாள் 1-இல்** உள்ள அட்டவணையை கரும் பலகையிலோ அல்லது ஒயிப் பலகையிலோ எழுத வேண்டும். பயிற்றுநர் ஒவ்வொரு இடமாக வாசித்து இது உங்களுக்கும் பாதுகாப்பானதா, பாதுகாப்பற்றதா என்று பங்கேற்பாளர்களைக் கேட்க வேண்டும். அவர்கள் கூறும் பதில்களை இரண்டாவது கட்டத்தில் எழுத வேண்டும்.*
- *பங்கேற்பாளர்களின் பதில்களைப் பொறுத்து மேலும் சில இடங்களை நீங்களே சேர்த்துக் கொள்ளலாம்.*
- *பங்கேற்பாளர்கள் கூறும் வெவ்வேறு இடங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்..*
- *பின்னர் பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு, மூன்று இடங்களைக் கொடுக்க வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களை வளரிளம் பருவப் பெண்கள் வாழ்வதற்கும், பயணம் செய்வதற்கும், படிப்பதற்கும் வேலை செய்வதற்கும் ஏற்ற பாதுகாப்பான இடங்களாக மாற்றுவதற்கு என்னென்ன வழிகள் உள்ளன எனக் கண்டறிந்து கூற வேண்டும் என்று பயிற்றுநர் சொல்ல வேண்டும். மேலும் இரண்டாம் கட்டத்தில் எந்தெந்த இடங்கள் பாதுகாப்பற்றவை என்று பங்கேற்பாளர்கள் கூறினார்களோ அந்தந்த இடங்களை எவ்வாறு பாதுகாப்பானதாக மாற்ற முடியும்*

என்று கலந்துரையாட வேண்டும்.

- அனைத்துக் குழுக்களும் தங்கள் கலந்துரையாடல் கருத்துக்களை பொது அமர்வில் தெரிவிக்க வேண்டும். பங்கேற்பாளர்கள் கூறும் கருத்துக்களை அட்டவணையின் மூன்றாம் பத்தியில் எழுத வேண்டும்.
- பின்னர் பயிற்றுநருக்கான **குறிப்புகள் 1-இல்** கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.
- பயிற்றுநர் கருத்துத் தாளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளையும் பங்கேற்பாளர்களுக்கு விளக்கிக் கூறி அமர்வை முடிக்கவேண்டும்.

**பயிற்சித்தாள் - 1**

**மாதிரி அட்டவணை**

| இடங்கள் | உங்களுக்கு பாதுகாப்பானதா? பாதுகாப்பற்றதா? | பாதுகாப்பாக மாற்றுவதற்கான வழிகள் |
|---|---|---|
| வீடு | பாதுகாப்பானது / பாதுகாப்பானதாக இருக்கக்கூடும் | கதவுகளுடன் பூட்டக்கூடிய கழிப்பறையை வீட்டினுள் கட்ட வேண்டும் |
| பள்ளிக்குச் சென்று திரும்பி வருதல் | பாதுகாப்பற்றது | ஒன்றுசேர்ந்து செல்ல வேண்டும், அனைவரும் சேர்ந்து பெற்றோரிடம் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யும்படி பேச வேண்டும், அரசாங்கத் திட்டமான பெண்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்தை உபயோகிக்க வேண்டும். |
| பள்ளி | பாதுகாப்பற்றது | தலைமை ஆசிரியரிடம், குறிப்பிட்ட ஆசிரியர் தங்களை முறைத்துப் பார்ப்பது பற்றி தகவல் தெரிவிக்க வேண்டும். மாணவர்களுக்கு முன்பாக மாணவிகள் வகுப்பறையை விட்டு வெளியே செல்வதற்கு அனுமதிக்குமாறு வகுப்பு ஆசிரியரிடம் கேட்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| மார்கெட் / கடைகள் | பாதுகாப்பற்றது | பஞ்சாயத்துத் தலைவரிடம், ஆண் பிள்ளைகள், வெற்றிலை பாக்கு கடையில் நின்று கொண்டு முறைத்து பார்த்துக்கொண்டு கேலி செய்கின்றனர் என்று தெரிவிக்க வேண்டும் |
| அண்டை வீட்டு இடம் | பாதுகாப்பற்றது | பஞ்சாயத்துத் தலைவரிடம் தெருக்களில் சூரிய ஒளி விளக்குகளை பொருத்துவது பற்றி பேச வேண்டும் |
| விளையாடும் இடம் | | |
| திருவிழாக்கள்/ கொண்டாட்டங்கள் | | |
| மருத்துவரிடம் செல்வது | | |

**பயிற்றுநர் குறிப்பு - 1**

- *ஆண்களோடு ஒப்பிடும்போது, வளரிளம் பருவப் பெண்களும் பிற பெண்களும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் பெறுவதற்கு, பாதுகாப்பற்ற இடங்கள் எவ்வாறு தடையாக இருக்கின்றன?*
- *பெண்களுக்குப் பாதுகாப்பான இடங்களை உருவாக்குவது சட்டம், ஒழுங்கு பிரச்சினையா?*
- *வளரிளம் பருவப் பெண்களுக்கு பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதற்கு வேறு என்ன செய்யலாம்?*
- *பொது இடங்களையும் தனியார் இடங்களையும் வளரிளம் பருவப் பெண்களுக்கும், மற்ற பெண்களுக்கும் பாதுகாப்பான இடங்களாக மாற்ற வளரிளம் பருவ ஆண்கள் எவ்வாறு செயலூக்கத்துடன் பங்களிக்கலாம்?*

## கருத்துத் தாள்

### பாதுகாப்பான இடங்கள் பாதுகாப்பற்ற இடங்கள் :

உலகெங்கிலும், கிராமங்களிலும் நகரங்களிலும், நாள்தோறும் பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தல்களும், வேறு வகையான பாலியல் வன்முறைகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

வளரிளம் பருவப் பெண்களும் பிற பெண்களும் பலவிதமான பாலியல் வன்முறைகளை, துன்புறுத்தல்களை, பாலியல் பலாத்காரங்களை, ஏன் கொலைகளையே கூட பொது இடங்களில் எதிர்கொள்கின்றனர். இதனால் பொது இடங்களில் நடமாடக்கூட பயம் கொள்கின்றனர்.

தெருக்களில், பொதுப் போக்குவரத்துகளில், பூங்காக்களில், பள்ளிகளிலும் அதைச் சுற்றிலும், பணியிடங்களில், பொதுக் கழிப்பறைகளில், நீர், உணவு விநியோக இடங்களில் அல்லது அவர்களுக்கு அருகில் உள்ள இடங்களில் எங்கு வேண்டுமானாலும் பாலியல் துன்புறுத்தல்கள் நடக்கலாம்.

இம்மாதிரியான நிகழ்வுகள் வளரிளம் பருவப் பெண்களும், மற்ற பெண்களும் சுதந்திரமாக நடமாடுவதைக் குறைத்துவிடுகிறது. பள்ளியிலும், பணியிடத்திலும், பொது வாழ்விலும் நடைபெறும் செயல்பாடுகளில் பெண்கள் பங்கேற்கும் திறனை குறைத்துவிடுகிறது. அத்தியாவசியமான சேவைகளை அடையும் வாய்ப்பைக் குறைத்து, கலாச்சார, பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபட்டு அனுபவிக்கும் சந்தர்ப்பங்களைக் குறைக்கிறது. இது அவர்களது ஆரோக்கியத்திலும், வளமான வாழ்விலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வளரிளம் பருவப் பெண்களுக்கும், மற்ற பெண்களுக்கும் எதிரான வன்முறை, குறிப்பாக பொது இடங்களில் நிகழும் பாலியல் வன்முறை பெரும்பாலும் தடுக்கக்கூடியதாக இருந்தாலும், இன்னும் புறக்கணிக்கப்படும் பிரச்சினையாகவே இருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தடுப்பதற்கும் தீர்வு காண்பதற்கும், ஒரு சில சட்டங்களும், கொள்கைகளும் மட்டுமே உள்ளன.

பெண்கள் பாதுகாப்பு என்பது, சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டுமல்ல. காவல் துறையினர், உணர்திரம் மிக்கவர்களாகவும் விவேகமாகவும், துரிதமாகவும் பாலியல் துன்புறுத்தல்களைக் கையாளவேண்டும். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மக்களின் மனோபாவமும் மாறவேண்டும்.

நாள்தோறும் பொதுஇடங்களில் பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் துன்புறுத்தல்களையாரும் எதிர்த்து நிற்பதில்லை. வளரிளம் பருவப் பெண்கள்தன்னுரிமை மேம்பாடு அடைய வேண்டுமெனில், நாம் பெண்களுக்கு வழிமுறைகளையும் வாய்ப்புகளையும் உருவாக்கி, அவர்களுக்கு இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்யவேண்டும்.



# கட்டகம் – 4

# பெண் குழந்தையை மதித்தல்

# அமர்வு – 9

## சமுதாயத்தின் உறுப்பினர்களாக பெண்கள் மற்றும் வளரிளம் பருவப் பெண்களின் பங்களிப்பு

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில் சமுதாயம் ஏன் மகன்களையும், மகள்களையும் வெவ்வேறு விதமாகப் பார்க்கின்றது என்பதை பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.*
- *மேலும் சமுதாயத்தில் பெண்களுக்கான மதிப்பைக் கூட்டுவதற்குரிய வழிகளையும் கண்டறிந்து கொள்வார்கள்.*

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், மாதிரிச் சம்பவங்களின் பிரதிகள்.*

**செயல்படுத்தும் விதம் :**

### செயல் - 1

- *அறையின் இரு வெவ்வேறு மூலைகளிலும் சார்ட் பேப்பரை வைத்து "மகனின் மதிப்பு" மற்றும் "மகளின் மதிப்பு" என்று எழுத வேண்டும்.*
- *எல்லா பங்கேற்பாளர்களையும் அந்தந்த சார்ட் பேப்பரில், ஏன் குடும்பங்கள் மகன்களையும், மகள்களையும் வெவ்வேறாக மதிப்பிடுகிறார்கள் என்று ஒரு காரணத்தையாவது எழுதச் சொல்ல வேண்டும்.*
- *எல்லா பங்கேற்பாளர்களுக்கும் சார்ட் பேப்பரில் எழுதுவதற்கு 10 – 12 நிமிடங்கள் கொடுக்க வேண்டும். பிறகு எழுதப்பட்டுள்ள பதில்களை பங்கேற்பாளர்களுக்கு வாசித்துக் காட்ட வேண்டும்.*
- *பயிற்றுநர், பயிற்றுநருக்கான **குறிப்பு – 1 இல்** உள்ள கேள்விகளைக் கேட்டு பங்கேற்பாளர்களோடு கலந்துரையாட வேண்டும்.*
- *பின்னர், **செயல்-2** க்குப் போக வேண்டும்.*

**பயிற்றுநர் குறிப்பு - 1**

- *வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்களின் தகுதிக் குறைவுக்கு பொதுவான காரணங்கள் என்ன?*
- *எதைப் பற்றி எளிதாக எழுத முடிந்தது? மகனா? மகளா?*
- *நிலைமையை மாற்ற, சமுதாயத்தில் வளரிளம் பருவப் பெண்களின் மதிப்பைக் கூட்ட ஆண்கள் என்ன செய்யலாம்? அது வளிரிளம் பருவ ஆண்கள் மற்ற ஆண்கள் உட்பட அனைவருக்கும் எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும்?*
- *எல்லா சமூகத்திலும் இந்த நிலைமை ஒரே மாதிரியாக எல்லா சமயத்திலும் இருந்திருக்கிறதா? எப்போது வேறுபட்டிருக்கின்றது? ஏன்?*
- *இந்த பாகுபாட்டினால், வளரிளம் பருவ ஆண்கள், பெண்கள் மேல் ஏற்படும் தாக்கம் என்ன?*
- *இந்த நிலைமையை மாற்றி வளரிளம் பருவ ஆண்களும் பெண்களும் சமமாக நடத்தப்படுவதை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?*

## செயல் - 2

- *பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவுக்கும்* ***பயிற்சித்தாள் 1-இல்*** *கொடுக்கப்பட்டுள்ள மாதிரிச் சம்பவங்களை ஒரு குழுவுக்கு ஒன்று வீதம் நகல் எடுத்துக் கொடுக்க வேண்டும்.*
- *குழுவில் அந்த சம்பவத்தை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.*
- *கலந்துரையாடிய கருத்துக்களை பொது அமர்வில் பகிர வேண்டும். பயிற்றுநர் கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களை எடுத்துக் கூறி அமர்வை முடிக்க வேண்டும்.*

**பயிற்சித் தாள் - 1**

## சமுதாயத்திற்கு பெண்களின் பங்களிப்பு

**மாதிரிச் சம்பவம் - 1**

*மேரிகோம், மணிப்பூர் மாநிலத்தில் உள்ள கங்காதேய் கிராமத்தில் வறுமையான பழங்குடியின குடும்பத்தில் பிறந்தார். பள்ளிக்குச் செல்வதற்கிடையில், அவளுடைய தம்பி, தங்கைகளை கவனித்துக் கொண்டு, ஹாக்கி, கால்பந்து என எல்லாவிதமான விளையாட்டுகளையும் (குத்துச்சண்டை தவிர) விளையாடி வந்தார். அதனுடன் விவசாயிகளான தன் பெற்றோருக்கு உதவியாக வயலிலும் வேலை செய்தார். மணிப்பூரின் குத்துச்சண்டை வீரர் டிங்கோசிங், 199 ஆசிய விளையாட்டுகளில் தங்கம் பெற்றது அவருக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. மேரிகோம், மணிப்பூரின் தலைநகரான இம்பாலிற்குச் சென்று மற்ற விளையாட்டுகளில் பயிற்சி எடுத்துக்கொண்டார். கிழிந்த, மோசமான ஆடைகளுடன், அந்த வளரிளம் பெண்ணான மேரிகோம், இந்திய விளையாட்டுத் துறையின் பயிற்சியாளரான கே.கோசானா மேய்தியை அணுகி ஒரு வாய்ப்பளிக்குமாறு கேட்டாள். மற்றவர்கள் படுக்கச் சென்ற பின்னும், இரவில் அவள் செய்த குத்துச் சந்தைப் பயிற்சி, பயிற்சியாளருக்கு நினைவில் வந்தது. மேரிகோமின் இலக்கு மிகவும் சிறியது. தன் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்டெடுத்து அவளுடைய பெயரை நிலைநாட்டி வாழவேண்டும் என்பதுதான்.*

*மேரிகோம் ஐந்து தடவை உலக குத்துச்சண்டை பட்டத்தை வென்றுள்ளார். அவர் ஒருவர் தான், உலக குத்துச் சண்டை சாம்பியன் பட்ட போட்டிகளில் ஒவ்வொரு தடவையும் ஒரு பதக்கம் என ஆறு தடவை பதக்கம் பெற்றவர். 2012-ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற ஒரே பெண் போட்டியாளர் அவர்தான். அதில், நம் நாட்டிற்காக ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றார். அவர் உலக பெண்கள் குத்துச்சண்டை பிளை வெயிட் (Fly Weight Category) பிரிவு வீராங்கனைகள் தர வரிசையில் 4 வது இடத்தைப் பெற்றுள்ளார். திருமணமாகி இரட்டையர்களான ஆண் குழந்தைகளுக்குத் தாயான 30 வயது மேரி கோம், எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்ததோடு மட்டுமன்றி, 2007 முதல் வசதியற்றவர்களுக்கு இலவசமாகக் குத்துச்சண்டையும் கற்றுத்தருகிறார்.*

**கீழ்க்காண்பவை பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாட வேண்டும் :**

1. *இந்தக் கதையில் இந்தப் பெண்ணால் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் என்னென்ன? வாழ்வில் வெற்றி பெற்றதற்கு முன்னர் சமுதாயம் அவரை மதித்ததா?*

2. *சவால்களை எதிர்கொண்டு, சமுதாயத்தில் அவருடைய நிலையை மேம்படுத்திக்கொள்ள, எத்தகைய குணங்கள் அவருக்கு உதவின?*

### மாதிரிச் சம்பவம் - 2

*மாலாவின் கணவர் இளம் வயதிலேயே இறந்துவிட்டார். அவளுக்கு இரண்டு மகள்களையும், ஒரு மகனையும் வளர்க்கவேண்டிய பொறுப்பிருந்தது. மாலா பல வீடுகளில் சமைக்கும் வேலையை மேற்கொண்டாள். ஆனால் அந்த வருமானம் போதுமானதாக இல்லை.*

*நல்ல வருமானம் ஈட்ட வேறு ஏதாவது வழிகள் உண்டா என்று ஆராயத் தொடங்கினாள். அவளுக்கு ஓட்டுநர் தொழிலில் ஆர்வம் ஏற்பட்டது. சில மாதங்களில் உள்ளூரிலுள்ள ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் இலவசமாக ஓட்டுநர் பயிற்சியில் சேர்ந்து, கார் ஓட்டுவதற்குக் கற்றுக்கொண்டாள். இரண்டு மடங்காய் உழைத்து, சமையல் வேலை செய்துகொண்டே கார் ஓட்டுநர் பயிற்சியும் மேற்கொண்டாள். ஓட்டுநர் பயிற்சியுடன் தற்காப்புக் கலைப் பயிற்சியும், இந்தியும் ஆங்கிலமும் பேசுவதற்கும், பேச்சுத்திறன், பெண் உரிமை மற்றும் பாலியல் சுகாதாரம் பற்றியும் கற்றுக்கொண்டாள்.*

*இன்று மாலாவிடம் நிரந்தர ஓட்டுநர் உரிமமும், அருகிலுள்ள பள்ளியில் நல்ல ஊதியத்துடன் கூடிய வேலையும் இருக்கிறது. அவள், அவளுடைய வேலையைப் பற்றி பெருமிதம் கொண்டு, அவளுடைய காரையும் தன் குடும்பத்தின் ஒரு உறுப்பினராகவே கருதுகிறாள். அவளுடைய மொத்த சமூகமும் அவளை உயர்வாகப் பார்க்கின்றது. இப்போது அவளால், அவள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.*

**கீழ்க்காண்பவை பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாட வேண்டும் :**

1. *இந்த கதையில் வரும் பெண் எதிர்கொண்ட சவால்கள் என்னென்ன? இந்த சமூகம் அவளுடைய வெற்றிக்கு முன் அவளுக்கு மதிப்பளித்ததா?*

2. *சவால்களைத் தாண்டி, அவளுடைய நிலையை சமுதாயத்தில் உயர்த்திக்கொள்ள, இந்தப் பெண்ணிற்கு எந்த குணங்கள் உதவின?*

### மாதிரிச் சம்பவம் - 3

*ராஜேஸ்வரி, குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலை காரணமாக ஐந்தாவது வகுப்புடன் படிப்பை நிறுத்தி விட்டார். இரண்டு ஆண்டுகள் தீப்பெட்டி கட்டு ஒட்டும் வேலை செய்தபோது குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப் பள்ளி பற்றி கேள்விப்பட்டார். படிப்பவர்களுக்கு பகலில் சாப்பாடு, அது தவிர குடும்பங்களுக்கு மாத ஊக்கத் தொகை. அங்கு படிப்புடன் கூடை தயாரித்தல், எம்பிராய்டரி, புக் பைண்டிங், டெய்லரிங் போன்றவற்றை கற்றுக் கொண்டார்.*

*பிறகு பள்ளியில் 6-ஆம் வகுப்பில் சேர்ந்து படித்து பத்தாம் வகுப்பில் 393 மதிப்பெண்கள் பெற்றார். பிளஸ் ஒன் வகுப்பில் தொழிற்பயிற்சிப் பாடப்பிரிவை எடுத்து படிக்கும் பொழுதே, விடுமுறையில் வேலை பார்த்தார். சில நேரம் பள்ளிக்கு*

*போகாமல் கூட வேலை பார்க்க வேண்டியதிருந்தது. பிளஸ் டூ தேர்வில் 1,014 மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றார்.*

*அப்பா மறைந்து விட , அம்மா கடுமையாக உழைத்து , ராஜேஸ்வரியை ஆசிரியர் பயிற்சி டிப்ளமோவில் படிக்க வைத்தார் .*

*டீச்சர் டிரெயினிங் முடித்ததும், ராஜேஸ்வரி குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளியில் வேலை பார்த்தார். பிறகு உள்ளூர்ப் பள்ளி ஒன்றில் ஆறு மாதங்கள் ஆசிரியராக வேலை பார்த்தார். இவருக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. தற்பொழுது அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியராகி விட்டார் .*

*2006-இல் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாளையொட்டி, அன்றைய தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடமிருந்தும் விருது பெற்றிருக்கிறார்.*

*"எனது பள்ளியில் எந்தக் குழந்தையும் படிப்பை இடையில் விட்டுவிடாமல் பார்த்துக் கொள்வேன்" என்று கூறும் ராஜேஸ்வரி, குழந்தைத் தொழிலாளராக இருந்து ஆசிரியராகி இருப்பது மற்றவர்களுக்கு முன்மாதிரி என்பதில் பெருமை கொள்கிறார்.*

*பத்திரிக்கைச் செய்தி - 10 மார்ச் 2014*

**கீழ்க்காண்பவை பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாட வேண்டும் :**

1. *இந்தக் கதையில் வரும் பெண் எதிர்கொண்ட சவால்கள் என்னென்ன? இந்தச் சமூகம் அவளுடைய வெற்றிக்கு முன் அவளுக்கு மதிப்பளித்ததா?*

2. *சவால்களைத் தாண்டி, அவளுடைய நிலையை சமுதாயத்தில் உயர்த்திக்கொள்ள, இந்தப் பெண்ணிற்கு எந்த குணங்கள் உதவின?*

# கருத்துத் தாள்

## சமுதாயத்தின் உறுப்பினர்களாக பெண்களின் பங்களிப்பு

*சமுதாயம், மகன்கள் (ஆண்கள்) மற்றும் மகள்கள் (பெண்கள்) செய்யும் வேலையைப் பொறுத்து அவர்களை மதிப்பிடுகிறது. ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களைப் பற்றிய /வளரிளம் பருவப் பெண்களைப் பற்றிய மதிப்பீடு குறைவாக இருந்தாலும், இந்த நிலையை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.*

*இந்த முயற்சியை வளரிளம் பருவப் பெண்களிடமிருந்தும் பிற பெண்களிடமிருந்தும் ஆரம்பிக்கலாம். அவர்கள் தைரியத்துடனும், மன உறுதியுடனும், அவர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு உதவியாக இருக்கும் வட்டத்தை விட்டு வெளியேறி, சவால்களை எதிர்கொண்டு தங்களைச் சுற்றியுள்ள சமுதாயத்தை மேம்படச் செய்ய வேண்டும் .*

*ஆண்களும், வளரிளம் பருவ ஆண்களும் எந்த நிபந்தனையும் இன்றி பெண்களை ஆதரித்து சூழலை மாற்றலாம். பெண்களின் அந்தஸ்தை உயர்த்துவது என்பது பொருளாதார ரீதியாக இருக்கலாம். எண்ணங்களாலும், செயல்பாடுகளாலும் சமுதாய சீர்திருத்தங்களுக்காக வேலை செய்வதாகவும் இருக்க வேண்டும்.*

*ஆதரவு தரும் குழுக்களையும் அமைக்கலாம். வரதட்சணை என்னும் மோசமான பழக்கத்திற்கு எதிராக போராடுவது, பெண்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து பெறாமல் போன சொத்தை, இருக்கும் சட்டம் மற்றும் சமூக ஆதரவுடன் மீட்டுத் தருவது போன்ற வகைகளில் பெண்களின் மதிப்பை உயர்த்தப் பாடுபட வேண்டும்.*

*இத்தகைய செயல்பாடுகள், முதலில் ஒருவரால் துவங்கப்பட்டு பின்னர் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத்தினர் மத்தியில் மிகுந்த ஆதரவை ஏற்படுத்திக் கொடுக்கும். இது ஒரு பெண்ணின் ஆரோக்கியம், சத்துணவு, கல்வி, பெண்கள் பற்றிய அபிப்பிராயம் – இவற்றின் மீது ஒரு நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்த உதவும்.*

# அமர்வு – 10

## பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருதல் மற்றும் அதனால் குழந்தைத் திருமணங்களின் மீது ஏற்படும் தாக்கம்

**கற்றலின் நோக்கம் :**

- *இந்த அமர்வின் இறுதியில் கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தை தெரிவு செய்யும் பழக்கங்களினால் ஏற்படும் பாதிப்பைப் பங்கேற்பாளர்கள் கண்டறிந்து கொள்வார்கள்.*

- *பங்கேற்பாளர்கள் கருவிலேயே பாலினத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தடுப்புச் சட்டம் 1994 யை பற்றித் தெரிந்துகொள்வார்கள்.*

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *சார்ட் தாள்கள், மார்க்கர் பேனாக்கள், மாதிரி சம்பவங்களின் பிரதிகள், பங்கேற்பாளர்களால் ஏற்கப்படும் உறுதிமொழியின் நகல்.*

**செயல்படுத்தும் விதம் :**

- *பங்கேற்பாளர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து **பயிற்சித்தாள் 1-இல்** கொடுக்கப்பட்டுள்ள மாதிரி சம்பவங்களை, ஒவ்வொரு குழுவுக்கும் ஒன்று வீதம் கொடுத்து கலந்துரையாடல் செய்ய வேண்டும்.*

- *இரண்டு குழுக்களும் முடித்த பின்னர் பொது அமர்வில் பகிரச் சொல்லவேண்டும்.*

- *பொது அமர்வில் பகிர்ந்த பின்பு பயிற்றுநருக்கான குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி பிறகு பயிற்றுநர் கருத்துத் தாளில் உள்ள கருத்துக்களையும், விளக்கிக் கூறவேண்டும்.*

- *இறுதியில் பயிற்றுநர், அனைத்துப் பங்கேற்பாளர்களையும் ஒன்றிணைத்து உறுதிமொழி எடுக்க வேண்டும்.*

## பயிற்சித் தாள் - 1

### மாதிரிச் சம்பவம் - 1

#### சுஜாதாவின் கதை

*19 வயது சுஜாதா திருமணமாகி, அன்பான கணவருடன் மாமனார், மாமியாருடன் வாழ்கிறாள். அவளுடைய கணவன் அருகிலுள்ள கடையில் வேலை செய்கிறான். சுஜாதா வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து வயதான மாமனார், மாமியாரையும் பார்த்துக்கொள்கிறாள். கணவன், அவன் பெற்றோருடன் சேர்ந்து சுஜாதாவை சீக்கிரம் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி வந்தான்.*

*சிறிது காலத்தில் சுஜாதா கர்ப்பம் அடைந்தாள். இப்போது அவள் மூன்று மாத கர்ப்பமாக இருக்கிறாள். அவளுடைய மாமனார், மாமியார் அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்து கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை தெரிந்துகொள்வதில் தீவிரமாக இருக்கின்றனர். குழந்தை பெண்ணாக இருந்தால் என்னவாகும்? சுஜாதாவிற்கு மிகவும் கவலையாக இருக்கிறது. அவளுடைய கவலையை யாரிடம் பகிர்ந்துகொள்வாள்? கணவனிடமா? தன்னுடைய பெற்றோரிடமா?*

**உங்கள் குழுவில் இந்த கேள்விகளுக்கான விடைகளை கலந்துரையாடல் செய்து கூற வேண்டும்.**

1. *மாமனார் மாமியார் ஏன் சுஜாதா பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கின்றனர்?*
2. *சுஜாதா என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பரிசோதனை மேற்கொள்வதற்கு அவள் ஒப்புக்கொள்ள வேண்டுமா?*
3. *கருவிலிருக்கும் சிசு பெண்ணாக இருந்தால், அதனால் சுஜாதாவிற்கு ஆரோக்கியத்திலும், சமூகத்திலும் ஏற்படக்கூடிய விளைவுகள் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?*
4. *இந்த நிலையில் சுஜாதாவின் கணவன் என்ன மாதிரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?*

### மாதிரிச் சம்பவம் - 2

#### நந்தினியின் கதை

*நந்தினிக்கு பத்து வயதிருக்கும் போது அவள் அம்மா இறந்துவிட்டார். நந்தினியையும் அவள் அக்காவையும் அப்படியே விட்டுவிட்டுப் போய் அவள் அப்பா மறுமணம் செய்துகொண்டார்.*

நந்தினியின் பெரியம்மா, நந்தினியையும் அவளது சகோதரியையும் தன் கிராமத்திற்கு கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள். நந்தினியின் சகோதரிக்கு பதினேழு வயதாக இருக்கும்போதே அவள் பெரியம்மா அவளுக்குத் திருமணம் செய்துவிட்டார். அதேபோல் நந்தினிக்கு பதினாலு வயதிலேயே திருமணம் செய்ய நினைத்தார்.

நந்தினி :

என்னோட புத்தகங்களைப் புரட்டிக்கிட்டு இருந்தப்ப ஒரு துண்டறிக்கை கையில் கிடைத்தது . பள்ளியில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் குழந்தைத் திருமணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு அதில் கொடுக்கப்பட்டுள்ள 1098 என்ற எண்ணுக்கு போன் செய்யலாம் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. என்னுடைய பெரியம்மா போனை வைத்து விட்டு போயிருந்த சமயத்தில் அந்த எண்ணுக்கு போன் செய்தேன்.

**குழந்தைத் திருமண தடுப்பு அதிகாரி திருவண்ணாமலை :**

அந்த போன்கால் சமூகநலத் துறைக்கு இணைக்கப்பட்டது, நந்தினியின் பேச்சில் பதற்றம் இருந்தாலும் உறுதியும் இருந்தது, திருமணத்தில் அவளுக்கு உடன்பாடில்லை என்பதை உணர முடிந்தது.

உடனடியாக தாசில்தார், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி, போலீஸ் அனைவருக்கும் தகவல் சொல்லி நாங்கள் அந்த கிராமத்திற்குள் நுழைந்தபோது இரவு ஒன்பதுமணி. நந்தினி அடையாளம் சொல்லியிருந்த கோயிலை கண்டுபிடிக்க முடியவில்லை. யாரைக்கேட்டாலும் கோயில் எங்கிருக்கிறது என்று சொல்ல மறுத்தார்கள். கிராம மக்கள் ஒத்துழைக்காவிட்டால் அரசு கிராமத்திற்கு செய்யும் உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று மிரட்டினோம்.

ஒரு வயதானவர் மூலம் கோவில் இருந்த இடத்தை தெரிந்து கொண்டோம். கோயிலுக்கு அருகில் வந்தவுடன் மணமகனையும் அவன் தாயையும் பிடித்துவிட்டோம். அந்தம்மா திடீரென்று மாரடைப்பு வந்தது போல் நடித்தார்.

இப்படி போலீஸ் தேடுவதை நந்தினியின் பெரியம்மாவிடம் யாரோ போய் சொல்லிவிட்டார்கள். திருமண வீட்டுக்காரர்கள் லைட்டையெல்லாம் அணைத்து விட்டார்கள். ஒரு திருமணம் நடப்பதற்கான அறிகுறிகள் அங்கு இல்லாதிருந்தது,

நந்தினி :

"என்னை நகைகளைக் கழற்றித் தரச் சொன்னார், என்னுடைய பெரியம்மா, திருமணத்தைப் பற்றி அதிகாரிகளிடம் சொல்லக்கூடாது என்றார். ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

மேலும் மிரட்டல்கள் அதிகமாவதற்குள், இரவு பத்தரை மணிக்கு அதிகாரிகள் நந்தினியை மீட்டு விட்டனர் . பிறகு நந்தினி திருவண்ணாமலை குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். .

குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நந்தினியின் பெரியம்மா, மணமகனின் குடும்பம் இவர்கள் மேல் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது

2018-ஆம் ஆண்டு, தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று, பெண் குழந்தை தன்னுரிமை மேம்பாட்டிற்காக, நந்தினி மாநில அரசிடம் இருந்து விருதினைப் பெற்றார்.

**இந்தக் கேள்விகளைக் குழுவில் கலந்துரையாடல் செய்து பதில்களைப் பெற வேண்டும் :**

1. ஏன் 15 வயதிலேயே திருமணம் செய்ய நினைக்கின்றனர்?

2. நந்தினியின் துணிச்சலுக்கு எவையெல்லாம் உதவின?

3. ஏன் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இவ்வளவு வயது வித்தியாசத்தில் திருமணம் நடத்தப்படுகிறது?

4. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட பங்குதாரர்களால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

## பயிற்றுநர் குறிப்பு - 1

- இம்மாதிரியான கதை உங்கள் அண்டை வீட்டுப் பகுதிகளில் அல்லது உங்கள் சொந்தக் குடும்பத்தில் இருக்கிறதா?
- கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தைத் தேர்ந்தெடுப்பதோடு தொடர்புடைய ஏதாவது சட்டம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?
- இத்தகையச் சூழலை எதிர்கொள்ளும் பெண்களுக்கு உதவும் ஏதாவது நிறுவனம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் எந்த வகையான உதவியை அளிப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?
- பெண் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
- காலப்போக்கில் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்தால் என்ன நடக்கும்? அது சமுதாயத்தில் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தும்?
- சில குறிப்பிட்ட இடங்களில், மணப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் நிகழும் குழந்தைத் திருமணங்களைத் தடுக்க என்ன செய்யலாம்?
- இரண்டு கதைகளைப் பற்றி குழுக்கள் கலந்துரையாடல் செய்த குறிப்புகளைக் கொண்டு, கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தை தேர்வு செய்யும் முறைகேடுகளுக்கும் அதிகரிக்கும் குழந்தைத் திருமணத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றி தொகுத்து வழங்க வேண்டும்.
- இரண்டாவது கதையில், எவ்வாறு நிகழ இருந்த குழந்தைத் திருமணம் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும், அதற்கு யார்யார் இணைந்து எவ்வாறு பணியாற்றினார்கள் என்பதையும் விளக்கிக் கூற வேண்டும்.
- இறுதியில் எல்லா பங்கேற்பாளர்களுக்கும் பயிற்சியில் எல்லா கட்டகங்களிலும் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபட்டதற்கு நன்றி கூறி ”இணைப்பு – 6 இல் பங்கேற்பாளர்கள் ஏற்கும் உறுதிமொழி”யின் பிரதிகளை விநியோகிக்கவும்.
- இறுதியில் “பாலியல் துன்புறுத்தல், குழந்தைத் திருமணம், கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத் தேர்வு, வரதட்சணை, மற்றும் வளரிளம் பருவப் பெண்களுக்கும் பிற பெண்களுக்கும் எதிரான வன்முறை மற்றும் அவர்களை மோசமாக நடத்துதல்” முதலியவற்றை நீக்குவதற்கான உறுதிமொழியினை நீங்கள் வாசிக்க உங்களைத் தொடர்ந்து அவர்களை வாசிக்கச் சொல்ல வேண்டும்.

# கருத்துத் தாள்

## பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருதல் மற்றும் அதனால் குழந்தைத் திருமணங்களின் மீது ஏற்படும் தாக்கம்

*இந்தியாவில் பாலினம் பற்றி தெரிந்துகொள்ளும் பரிசோதனைகள் பரவலாக நடப்பதற்கு, எல்லாவற்றிலும் மகன்களுக்கே முன்னுரிமை அளிக்கும் நிலைமையே வேர்க் காரணம் ஆகும். இதற்கு மதம், பாரம்பரிய பழக்க வழக்கங்கள், கலாச்சாரம் முதலியவை பெருமளவுக்கு ஒப்புதல் அளிக்கின்றன. பெண் குழந்தைகள் சுகாதாரம், சத்துணவு, கல்வி பெறுவதில் உள்ள பாகுபாடு இந்தியாவில் காலம் காலமாக இருக்கிறது. தற்போது, முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தினால் பாலினத் தெரிவுக்கு நவீன வழிகள் இருக்கின்றன. பிறக்கப்போவதற்கு முன்பே பெண் குழந்தை அழிக்கப்படுவதால், ஆண் – பெண் குழந்தைகள் விகிதாச்சாரம் மிகுந்த வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தப் பரிசோதனை வசதிகள் உள்ள மருத்துவமனைகளும், மருத்துவர்களும் 20 ஆண்டுகளுக்கு முன்பு கீழ்க்காணும் தலைப்பில் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள். “500/- ரூபாய் மட்டும் இப்போது செலவு செய்யுங்கள், பின்னர் 500,000/- ரூபாய் (வரதட்சணையில்) சேமியுங்கள்.*

*இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி (2011), குழந்தைகள் பாலின விகிதாசாரம் 914 பெண்களுக்கு 1000 ஆண்கள் என இருந்தது. இது கடந்த 2001ல், 927 ஆக இருந்ததிலிருந்து 914 ஆக குறைந்திருக்கிறது. இத்தகைய கவலைக்குறிய சூழ்நிலைகள் சிலவற்றை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.* ***உதாரணத்திற்கு*** *குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களின் எல்லையில் உள்ள தாங்கு மாவட்டத்தில் ஒரே குடும்பத்தில் உள்ள 8 சகோதரர்களும், மணமகள் கிடைப்பதற்கு சிரமமாக இருந்ததால், ஒரே பெண்ணை மணந்துகொண்டனர். (இந்தியா டுடே, செப்டம்பர் 2001). ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள தேவரா கிராமத்தில் 110 வருடங்களுக்குப் பிறகு 1997-இல்தான் மணமகள் வரும் பல்லக்கு (பாராத்) ஊர்வலம் வரவேற்கப்பட்டது. (பயனீர், அக்டோபர் 28, 2001).*

*கர்ப்ப காலத்தில், கர்ப்பத்தில் உள்ள சிசுவின் பாலினத்தைப் பற்றி கண்டறியும் தொழில்நுட்பமான பாலினத் தெரிவு செய்வதை தடை செய்யும் சட்டம்-1994, பாலின தேர்வை, கர்ப்பம் தரிப்பதற்கு முன்னும் பின்னும் சட்டம் முறைப்படுத்துகின்றது. அல்ட்ரா சவுண்ட் என்னும் தொழில்நுட்பத்தை தவறாகப் பயன்படுத்தி சிசுவின் பாலினத்தைக் கண்டுபிடிப்பதை தடுப்பதே இந்தச் சட்டத்தின் நோக்கமாகும்.*

### *கர்ப்ப காலத்தில் குழந்தையின் பாலினத்தை கண்டறியும் தொழில்நுட்பத்தைப் பற்றிய சட்டம் என்ன சொல்லுகிறது? (PC & PNDT ACT)*

- *பாலினத் தெரிவு மற்றும் பாலினத்தைப் பற்றி தெரிந்துகொள்ளும் வழிகள் தடை செய்யப்பட்டுள்ளன.*

- *கர்ப்பகாலத்தில் எடுக்கப்படும் பரிசோதனைகளில் அதை செய்பவர், கர்ப்பிணியிடமோ அவரது உறவினரிடமோ, கருவில் வளரும் சிசுவின் பாலினத்தைப் பற்றி*

*வார்த்தைகளாலோ, செய்கைகள் மூலமாகவோ அல்லது வேறு எந்த விதமாகவோ தெரிவிக்கக்கூடாது.*

- *அல்ட்ராசவுண்ட் பரிசோதனைகள் செய்யும் எல்லா கிளினிக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். இந்தச் சட்டத்தின்படி தகுதிபெற்ற மருத்துவர்கள் மட்டுமே அல்ட்ராசவுண்ட் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.*

- *எல்லா மருத்துவகங்ளிலும் (கிளினிக்) 'கருவின் பாலினத்தைப் பற்றி தெரிவிப்பது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது' என்ற அறிவிப்பு ஆங்கிலத்திலும், அந்தந்த மாநில மொழியிலும் எழுதி வைக்கப்படவேண்டும்.*

- *மருத்துவர்களோ, மருத்துவகங்ளிளோ(கிளினிக்) பாலினத்தைப்பற்றி பரிசோதனையில் கண்டறிந்து தெரிவிப்பதாக எந்த வகையிலும் விளம்பரப்படுத்தியிருந்தால் அது தண்டனைக்குரியதாகும்.*



# இணைப்புகள்

# இணைப்பு – 1

## மனித உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் என்பது அடிப்படை உரிமைகள். அது இல்லாமல் மனிதர்கள் கண்ணியத்துடன் வாழ முடியாது. ஒருவர் மீதான மனித உரிமை மீறல் என்பது அந்த மனிதரை ஒரு மனிதப் பிறவியே அல்ல என்பது போல நடத்துவது.

பாலினப் பாகுபாடு என்பது வளரிளம் பருவப் பெண்களும் ஆண்களும், மனித உரிமைகளை முழுமையாக அடைவதற்கும் அனுபவிப்பதற்கும் அனுமதி மறுக்கப்படும்போது ஏற்படுகின்றது. உதாரணத்திற்கு, வளரிளம் பருவப் பெண்களை சிறு வயதிலேயே வீட்டை பராமரிப்பதற்காகவும், திருமணம் செய்து வைப்பதற்காகவும், பள்ளிக்குச் செல்லாமல் இடையிலேயே நிறுத்திவிட்டால் அது அவர்கள் மீதான உரிமை மீறலாகும். அதே குடும்பம், வளரிளம் பருவ ஆண், எதிர்காலத்தில் குடும்பத்திற்காக சம்பாதிப்பான் என்று கருதி அவனைப் படிக்க வைக்கலாம். இத்தகைய சமூகமயமாக்கல், ஆண்கள், பெண்கள் இருவரும் தங்கள் உரிமைகளைப் பெறுவதன் மீது செல்வாக்கு செலுத்துகின்றது.

மனித உரிமைகள் பற்றி கற்றுக்கொள்ளும்போது நாம் மரியாதை, நேர்மை, நீதி மற்றும் சம உரிமை பற்றிய கருத்துக்களை கற்றுக்கொள்கிறோம். நாம் நமது உரிமைகளுக்காக போராடுவதோடு, மற்றவர்களின் உரிமைகளை மதிப்பதற்கு நமக்கு இருக்கவேண்டிய பொறுப்பினையும் கற்றுக்கொள்கிறோம்.

மனித உரிமைகள் பற்றி 30 விதிகள் இருக்கின்றன. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் உலகம் முழுவதும் உள்ள நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. மிகவும் முக்கியமான, **வளரிளம் பருவப் பெண்களுக்கு பொருந்தக்கூடிய உரிமைகள் :**

- வாழ்வதற்கும், சுதந்திரத்திற்கும், சுயபாதுகாப்பிற்குமான உரிமை
- சித்திரவதையிலிருந்து விடுதலை
- நியாயமான விசாரணை
- பேச்சு சுதந்திரம்
- மத சுதந்திரம்
- சுகாதாரம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத்தரம்

மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதை உறுதிசெய்வதற்கு, அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட பொறுப்பிருக்கிறது. அரசாங்கங்கள் சட்டங்களை உருவாக்கி அவற்றை நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான் அந்த நாட்டின் குடிமக்கள் அவர்களுடைய உரிமைகளைப் பேணும் வாழ்க்கையை அனுபவிக்க முடியும்.

இதர மக்களுக்காகவும், சமுதாயத்திற்காகவும் கூட நாம் ஆற்ற வேண்டிய பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன. தனிமனிதர்கள், மற்றவர்களின் உரிமைகளையும் கருத்தில் கொண்டு தங்கள் உரிமைகளை நிலை நாட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள். உதாரணத்திற்கு தங்கள் பேச்சுரிமையை நிலைநாட்டும் போது, மற்றவருடைய பாதுகாப்பிற்குரிய உரிமையை மீறும் வண்ணம், வெறுப்பூட்டும் வகையிலோ அல்லது மோசமான வார்த்தைகளிலோ பேசக்கூடாது.

குடும்பம், சமூகம், கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள், அரசியல், வெளிநாட்டு உறவுகள் என சமுதாயத்தில் எல்லா நிலையிலும் மக்கள் மற்றவர்களுடன் எவ்வாறு உரையாடுகின்றனர் என்பது மனித உரிமைகளின் ஒரு முக்கியமான பகுதியாகும். ஆகையால், மனித உரிமைகள் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நீதி, சம உரிமை, சமுதாயத்தின் வளவாழ்வு ஆகியவற்றை நிலைநாட்ட முடியும்.

# இணைப்பு – 2

**பொது இடத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன ?**

*பொது இடத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணை நோக்கி விரும்பத்தகாத பாலியல் சொற்களைப் பேசுதல், அல்லது பாலியல் இச்சையை வெளிப்படுத்தும் செய்கைகள் செய்தல் ஆகும். இது மிகவும் கடுமையான பிரச்சினை. சாலையிலும் பேருந்திலும் இந்தத் துன்புறுத்தல் ஏற்படும்போது வளரிளம் பருவப் பெண்கள், மனதளவில் சித்திரவதைக்கு ஆளாகிறார்கள், இழிவு படுத்தப்படுகிறார்கள். இது பெண்கள் மதிப்புடன் வாழும் உரிமைக்குத் தடையாக இருப்பதோடு, வாழ்வதற்கான பெண்களின் அடிப்படை உரிமைக்கும் எதிராக உள்ளது. இது தனிமனிதனாலோ, குழுவாகவோ, தனியொரு பெண்ணின் மீதோ அல்லது பல பெண்கள் மீதோ நிகழ்த்தப்படலாம். சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத வார்த்தையாகவோ, பாலியல் தொடர்புடைய வாக்கியமாகவோ இருக்கலாம். தொடுவது அல்லது இடித்துக்கொண்டு செல்வது, அவளைப் பின் தொடர்வது, விரும்பத்தகாத வார்த்தைகளைக் கூறி அவளை அசௌகரியப்படுத்துவது என நீளலாம்.*

**பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தல் என்பது**

- *பாலியல் தொனியில் உள்ள சொற்கள்*
- *உடலளவில் தொடுதல், அல்லது பாலியல் இச்சையை வெளிப்படுத்தும் செய்கைகள்*
- *ஆபாசப் படங்களைக் காண்பித்தல்*
- *பாலியல் தேவையை முன்வைத்தல், கெஞ்சுதல்*
- *பாலியல் தொடர்புடைய விரும்பத்தகாத பேச்சுகள் பேசுதல் அல்லது நடந்து கொள்ளுதல்*

**பொது இடத்தில் பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் என்ன?**

*பாலியல் துன்புறுத்தல் தொடர்புடைய குற்றங்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் 509, 294, 292 மற்றும் 354-வது விதிகளின் கீழ் கையாளப்படுகின்றன. பாதிக்கப்பட்டோர்* ***கீழ்க்கண்ட சட்ட விதிகள் மூலம் நிவாரணம் பெறலாம்.***

***இந்திய தண்டனைச் சட்ட விதி -294***

*வளரிளம் பருவப் பெண்ணை அல்லது வேறு பெண்ணை ஆபாச செய்கைகளால், வார்த்தைகளால், பாடல்களால் துன்புறுத்தும் ஆணுக்கு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் மூன்று மாதம் வரை சிறைத் தண்டனை.*

### இந்திய தண்டனைச் சட்ட விதி -292

முதல் தடவை ஆபாசப் படங்களை, புத்தகங்களை, தாள்களை வளரிளம் பருவ பெண்களுக்கோ, வேறு பெண்களுக்கோ காண்பிப்பவருக்கு 2,000/- ரூபாய் அபராதமும் 2 வருட சிறை தண்டனையும் விதிக்கப்படும். அடிக்கடி இந்த குற்றத்தை செய்தால் 5,000 /- ரூபாய் அபராதமும் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

### இந்திய தண்டனைச் சட்ட விதி -509

ஆபாச செய்கைகள், அநாகரிகமான உடல்மொழி, கேலிப்பேச்சு, பெண்ணின் தனிமனித சுதந்திரத்திற்கு எதிரான நோக்கத்துடன் செயல்படுவது - இவற்றுக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

### குற்றவியல் சட்டத் திருத்த சட்டம் -2013

இந்திய தண்டனை சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. அதன்படி **345 A** விதியின்படி பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டால் 3 வருடங்கள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம். இந்த மாற்றம், இன்னும் பல புதிய விதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, அனுமதியின்றி ஒரு பெண்ணின் ஆடைகளைக் களைதல், பின் தொடருதல், அதிகாரத்தில் இருப்பவர்களால் நிகழ்த்தப்படும் பாலியல் செயல்பாடுகள் முதலியவை குற்றமாகக் கருதப்படும்.

- பணியிடத்தில் பெண்களுக்கேற்படும் பாலியல் துன்புறுத்தல்கள்களை (தடுப்பு, தடை மற்றும் தீர்வுக்கான) தடுக்கும் சட்டம் - 2013, வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது.

# இணைப்பு – 3

**பங்கேற்பாளர்களால் எடுக்கப்படும் உறுதிமொழி**

***இந்திய குடிமகனாக நான் உறுதிமொழி எடுத்துக்கொள்கிறேன் :***

- *நான், சட்டப்படியான வயது வந்தவுடன்தான் திருமணம் செய்துகொள்வேன். அதாவது ஆண்களுக்கு 21 வயது முடிந்த பிறகு, பெண்களுக்கு 18 வயது முடிந்த பிறகு.*

- *நான் சட்டப்படி வயது குறைந்தவரின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க மாட்டேன். நான் என் பெற்றோருக்கு, உறவினருக்கு, சமூகத்தினருக்கு தெரிவித்து அவர்களையும் அதில் பங்கேற்க விடமாட்டேன்.*

- *நான், என் குடும்பத்தில் உள்ள பெண்களின் உரிமையை உயர்த்திப் பிடித்து, அவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்க ஆதரவு தந்து, அவர்களுடைய சத்துணவு மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, சட்டப்படி அவர்களுக்கு பாரம்பரியச் சொத்தில் பங்கு கிடைக்க உறுதிப்படுத்துவேன்.*

- *நான் என் மனைவியையோ, அல்லது பெண் உறவினரையோ கருவிலேயே பாகுபாட்டுடன் குழந்தையின் பாலினத்தை தேர்வு செய்வதன் அடிப்படையில் கருச்சிதைவு செய்துகொள்ளுமாறு கூற மாட்டேன். அதற்கு எந்த விதத்திலும் ஆதரவு அளிக்க மாட்டேன்.*

- *நான், வரதட்சணை வாங்கவும் மாட்டேன். கொடுக்கவும் மாட்டேன்.*

- *நான் எப்போதும் வளரிளம் பருவப் பெண்களுக்கும் பிற பெண்களுக்கும் மரியாதை கொடுப்பேன்.*

- *வீட்டிலோ, தெருவிலோ, பணியிடத்திலோ அல்லது வேறெங்காவதோ, அவர்களிடம் தவறான முறையில் நடந்துகொள்ள மாட்டேன். உண்மையான ஆண்மகனுக்கு அர்த்தம் என்னவென்றால் அது வளரிளம் பருவப் பெண்களுக்கும், பிற பெண்களுக்கும் மரியாதையும் மதிப்பும் கொடுப்பதே என்பது எனக்குத் தெரியும்.*

- *நான், என்னுடன் இருப்பவர்களுக்கு, வளரிளம் பருவப் பெண்களுக்கும் பிற பெண்களுக்கும் மரியாதை கொடுக்குமாறும், அவர்களிடம் ஒருபோதும் தவறான முறையில் நடந்துகொள்ளக் கூடாது என்றும் கற்றுக் கொடுப்பேன். மரியாதையுடனும், பாதுகாப்புடனும் கூடிய ஒரு சூழலை வளரிளம் பருவப் பெண்களுக்கும், பிற பெண்களுக்கும் உருவாக்கித் தருவதே ஒரு உண்மையான ஆண்மகனாக இருப்பது என்பது எனக்குத் தெரியும்.*

- நான், என் அதிகாரத்திற்குட்பட்டு, எல்லா குழந்தைகளையும், வன்முறையில் இருந்தும், மோசமாக நடத்துவதில் இருந்தும், உடலளவிலும் மனதளவிலும் வேறு எந்த வகையிலும் புறக்கணிப்பதில் இருந்தும் பாதுகாப்பேன்.

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்